சுஜாதா

உங்களில் ஒரு கணேஷ்!

குமரிப்பதிப்பகம்

மின்னூலாக்கம் - சீயான்

உங்களில்
ஒரு கணேஷ்

□ □ □

சுஜாதா

உங்களில்
ஒரு கணேஷ்!

சுஜாதா

குமரிப் பதிப்பகம்
20 பெருமாள் தெற்கு வீதி
நாகப்பட்டினம்-611001.

வெளியீடு : 87
முதற் பதிப்பு : 1989
உரிமை ஆசிரியருக்கு

விலை ரூ

புத்தகப் பித்தன் வழங்கும்

உங்களில் ஒரு கணேஷ்!
சுஜாதா எழுதியது

எமது வெளியீடுகள்
சென்னையில் கிடைக்குமிடம்;
மணிமேகலை ஏஜென்ஸீஸ்
4, தணிகாசலம் செட்டி ரோடு
தி. நகர், சென்னை-600017.

அச்சிட்டோர் :
மூவேந்தர் அச்சகம்,
சென்னை-600 014.

உள்ளே உள்ளவை

உங்களில் ஒரு கணேஷ்-1	5
உங்களில் ஒரு கணேஷ்-2	12
உங்களில் ஒரு கணேஷ்-3	16
உங்களில் ஒரு கணேஷ்-4	21
உங்களில் ஒரு கணேஷ்-5	24
உங்களில் ஒரு கணேஷ்-6	30
விஷம் (Roald Dahl எழுதியது)	32
சுஜாதா—ரேவதி ரவீந்திரன் பேட்டி (1981)	49
அடிக்குப் பயந்தே தமிழ் படித்தேன்	64
ஏன் மனைவியின் பெயரில் எழுதுகிறேன்?	67
சுஜாதா-சிவகுமார்; சுயதரிசனம்.	70
சுஜாதாவின் பதில் கடிதம்	74
நரேந்திரனும் நானும்	77
என் மனைவி கூப்பிட்டால்......	79
விண்வெளிப் பயணம்	81
பத்து விஷயம்	83
பாலசந்தர் மகள் திருமணம்	85
சுஜாதா என்று ஒரு...	87
மகேந்திரனின் ஹோண்டா	89
குதுரேமுக் என்று ஓர் இடம்	91
திருச்சி அப்போது......!	97
விகடனுக்கு வயது ஐம்பது	101
நன்னஜனகளு	117
அதுதான் கஷ்டம்...	119

சுஜாதாவின் முத்திரை

இது ஒரு புதுமையான தொகுப்பு. உங்களில் ஒரு கணேஷ் மூளைக்கு வேலை கொடுக்கும் சுவையான நிகழ்ச்சிச் சித்திரம்.

'விஷம்' ஒரு மொழி பெயர்ப்புக் கதை. சுஜாதா எழுதிய மொழிபெயர்ப்புக் கதை இது ஒன்றுதான். மொழி பெயர்ப்பு நிறைய செய்ய வேண்டுமென்ற ஆசை இருந்தது. தொடர்ச்சியாக எழுதுவதாகவும் குறிப் பிட்டிருந்தார். "நீங்கள் தான் நிறைய நன்ருக எழுதுகிறீர்களே. மொழி பெயர்ப்பு வேண்டாம். அதை வாசகர்கள் விரும்பிப் படிப்பதில்லை" என்று என் பதிப்பக அனு பவத்தைச் சொன்னேன். சுயமாக எழுதும் ஆற்றல் உள்ளவர்கள் மொ. பெ. வேலை செய்ய வேண்டாம் என்பது என் கருத்து.

ஒரு ரசிகர் எழுதுகிருர் சுஜாதாவுக்கு நான் 15 கடிதங்கள் எழுதிவிட்டேன். அவர் பதிலே எழுதமாட்டேன் என்கிருர். அவர் போட்டோவுடன் பதில் எழுதச் சொல்லுங்கள் என்கிருர். அவர் ஆர்வம் உள்ள வாசகர். இப்படி பட்டவருக்கு திருமதி ரேவதி ரபீந்திரனின் பேட்டிக் கட்டுரை பயன் படும். சுஜாதாவிடம் கேட்கவேண்டிய கேள்விகளை வாசகர்களின் சார்பாகவே கேட்டிருக்கிருர் அவர். இந்தப்பேட்டிக்கட்டுரை வாசகர்களின் அன்புத் தொல்லையிலிருந்து விடுபட சுஜாதா விற்கு ஒரு வாய்ப்பளிக்கிறது. வாசகர்கள்

நிறைய விஷயங்களையும் தெரிந்து கொள்ள முடிகிறது.

கல்லூரி மாணவர்களின் கதை எழுதும் அனுபவம் சுவையானது. எழுதும் திறமை உள்ளவர்களை பாராட்டி எப்படி எழுத வேண்டுமென்று வழி சொல்கிறார். எழுத்தாளனுடைய பார்வை எப்போதும் வித்தியாசமாக இருக்கவேண்டும். ஆமாம் 'உன் பார்வையால் உலகத்தை விழுங்கு, என்கிறார் கொச்சி முத்தமிழ்ச் சங்கத்தில்.

இன்ஜினீயராக இருந்துகொண்டு சிறந்த எழுத்தாளராக விளங்கும் சுஜாதாவைப் போல் நல்ல குணச்சித்திர நடிகரான சிவகுமார் சிறந்த ஓவியராக விளங்குபவர். அவர் கலைக்கூடம் பார்த்து மகிழவேண்டிய ஒன்று. இருகலைஞர்களும் நேரில் சந்திக்காமலேயே கடிதம் மூலம் நெஞ்சம் உருகுகிறார்கள். சுஜாதாவின் முதல் நாவல் படித்த அனுபவத்தை அவர் விவரிக்கும் விதம் அற்புதம்.

விண் வெளிப்பயணம் முதல் புதுக் கவிதை முடிய தன் முத்திரையைப் பதிப்பித்திருக்கிறார் சுஜாதா இந்த நூலில்.

'நீர்க்குமிழ்கள்' ஆரம்ப காலத்தையும், 'கணையாழியின் கடைசி பக்கங்கள்' மத்திய காலத்தையும், 'உங்களில் ஒரு கணேஷ்!' தற்காலத்தையும் அறிய உதவுகிறது.

உங்கள்

—புத்தகப் பித்தன்

1. உங்களில் ஒரு கணேஷ்!

— சுஜாதா —

காலை. அவன் வந்து தன் அறையின் பூட்டைத் திறக்கையில் அங்கே காத்திருந்தவரைக் கவனித்து, "எஸ்?" என்றான்.

"நீங்கதானே மிஸ்டர் சுதர்சன்?"

"ஆமா நான்தான்."

"உங்களுக்காகத்தான் காத்திருக்கிறேன், ஸி. ஐ. டி. இன்ஸ்பெக்டர் குரு!" அவர் அவனை தீர்க்கமாகப் பார்க்க, அவன் சட்டென்று சுதாரித்துக்கொண்டு, "வாங்க வாங்க! ஒரு நிமிஷம்" என்று கதவைத் திறந்து உள்ளே சென்றான். அவர் தொடர்ந்தார். அவன் தன் பிரயாணப்பெட்டியைக் கீழே வைத்துவிட்டுசோம்பல் முறித்து "அப்பா! எக்ஸ்பிரஸ் பஸ்ல வந்ததில உடம்பெல்லாம் வலி" என்றான். "உட்காருங்க." "பரவாயில்லை" என்றார்.

ஒரு பையன் கோப்பையுடன் வந்து "ஸார் காப்பி" என்றான்.

"இன்னொரு காப்பி கொண்டு வாடா!" என்றான் சுதர்சன்.

''வேண்டாம்'' என்ற இன்ஸ்பெக்டர் அறையைச் சுற்றிலும் நிதானமாகப் பார்த்தார். எங்கும் பிரம்மசாரித் தனம். ஆஷ்ட்ரே நிறைய சிகரெட் துண்டங்கள். குறுக்கே கொடிக்கயிற்றில் தொங்கிய பல வர்ண சட்டை, பாண்ட்டுகள், உள்ளுடைகள். அலமாரிப் புத்தகங்களில் அமெரிக்க செக்ஸ். சுவர் எல்லாம் காலண்டர்களில் நின்று படுத்து நீண்ட நங்கைகள். வெளிநாட்டு உள்நாட்டு மாதக் காலண்டர்கள்; தேதி கிழிக்கும் காலண்டர்கள். கட்டிலில் சுருட்டியிருந்த படுக்கை. மேசை விளக்கு, பாட்டில்கள், மாத்திரைகள், நெருப்புப் பெட்டி, ஊதுவத்தி, காய்ந்த மாலைக் கந்தன்...... ஆணியடித்துக் கண்ணாடியில் ஒட்ட வைத்த ஒற்றை நரை மயிர்...

''என்ன விஷயம்?'' என்றான் சுதர்சன்.

''நீங்க முகம் கழுவிட்டு வாங்க!''

''பரவாயில்லை. விஷயம் ஏதாவது சீரியஸாத்தான் இருக்கணும். அதிகாலையில போலீஸ் வந்திருக்கீங்க.''

இன்ஸ்பெக்டர் நிதானமாக, ''பிரபாவதி இறந்து போய்ட்டா'' என்றார்.

காப்பிக் கோப்பையை அதிர்ச்சியில் தவற விட்டுவிட்டான். ''என்னது! பிரபாவதியா! எங்க ஆபீஸ் பிரபாவதியா?''

''ஆமாம்.''

''என்ன ஸார் சொல்றீங்க! இப்படி ஒரு இடியைத் தூக்கிப் போட்டுட்டீங்க! எப்ப ஸார்?''

''நேத்திக்கு சாயங்காலம் ஆறு மணிக்கு!''

''என்ன உடம்பு! நல்லாத்தானே இருந்தா!''

''உடம்புக்கு ஒண்ணுமில்ல. கொலை!''

அதிர்ந்து போய் ‘‘கொலையா? அவளையா? பிரபாவையா? அபத்தம்! அவளுக்கு ஒரு எதிரி கிடையாது. அவ்வளவு அருமையான பொண்ணு! ஏதாவது திருட்டு கிருட்டாக இருக்கும். எக்கச்சக்கமா மாட்டிக்கிட்டு...’’

‘‘திருட்டு ஏதும் இல்லே. நேத்து வாங்கின சம்பளப் பணம் அப்படியே அலமாரியில இருக்குது. கழுத்து நெறி பட்டுக் கொலை செய்யப்பட்டிருக்கா! சாயங்காலம் ஆறுமணிக்கு.’’

சுதர்சன் தலையை இரண்டு கைகளாலும் பிடித்துக் கொண்டு அசதியாய் உட்கார்ந்து விட்டான்! அவன் கண் களில் கண்ணீர் தெரிந்தது. ‘‘ச் ச் ச்! அருமையான பெண் ஸார்! எந்தப் படுபாவி செஞ்சானோ!......’’

‘‘மிஸ்டர் சுதர்சன், சில கேள்விகள்!’’

‘‘கேளுங்க ஸார்! உங்களோட பரிபூர்ணமா ஒத்துழைக் கிறேன்.’’

‘‘இந்த சட்டை உங்களுது தானா?’’

கொடியில் தொங்கிய கரும்பச்சை நிறச்சட்டையைக் காண்பித்தார்.

‘‘ஆமாம் ஏன்?’’

‘‘வெள்ளைப் பாண்ட்டு இருக்குதா உங்ககிட்ட......!’’

‘‘அதோ இருக்குது. என்ன சொல்றிங்க?’’

‘‘கரும்பச்சை சட்டை, வெள்ளை பாண்டு போட்டுக் கிட்டு ஏறக்குறைய உங்கமாதிரி பெரிசா மீசை வெச்சிக்கிட்டு ஒரு ஆள் நேத்து சாயங்காலம் அஞ்சரை மணிக்கு பிரபாவதியுடைய ரூமில நுழைஞ்சதை எதிர்த்து கடையில பார்த்திருக்காங்க!’’

"அதனால? இந்த உலகத்திலே என் ஒருத்தங்கிட்டதான் பச்சை சட்டை வெள்ளை பாண்ட் இருக்குதா? நான் ஒருத்தன்தான் மீசையா?"

"பதட்டப்படாதீங்க! என் தொழில் கேள்வி கேக்க வேண்டியது."

"மோட்டிவ்னு ஒண்ணு வேண்டாமா!"

"மோட்டிவ் இருக்கு மிஸ்டர் சுதர்சன்! நீங்க பிரபாவைக் காதலிச்சிங்கன்னு எனக்குத் தெரிந்தது. அவ உங்களை நிராகரிச்சு ராம்ஜிங்கிறவரை கல்யாணம் செஞ்சுக்க தீர்மானிச்சதில உங்களுக்கு அசாத்திய கோபம்னும் தெரியும்."

"அதனால இப்ப நீங்க என்ன சொல்றிங்க இன்ஸ்பெக்டர். நான்தான் அவளைக் கொலை செஞ்சேன்னு?" சுதர்சன் வாய்விட்டுச் சிரித்தான், ரசித்துச் சிரித்தான். சிரித்துக் கொண்டே சொன்னான், "கொலை செய்யறதுக்கு முக்கிய தேவை கொலையாளி அந்த இடத்தில இருக்கணும்." சிரித்து "நான்......நேற்று பூரா வெளியூர்ல இருந்தேன். இருநூறு மைல்! திருச்சி! இப்பதான் வந்தேன்!"

இன்ஸ்பெக்டர் சற்று வலுவிழந்து, "அதுக்கு ஆதாரம் இருக்கா! சாட்சியம் இருக்கா?"

"நிறைய! முந்தாநாள் என் ரிஸர்வேஷன் ராக்ஃபோர்ட் எக்ஸ்பிரஸ்ல, அதைப் பாருங்க!......திருச்சியில என் நண்பன் ரகுநாத் வீட்டில தங்கியிருந்தேன். அவனுக்கு வேணும்னு போன் பண்ணிக் கேட்டுப் பாருங்க!......நான் நேத்து பூரா இருநூறு மைல் தூரத்தில இருந்திருக்கேன் இன்ஸ்பெக்டர்! இப்பதான் வர்றேன்."

அவர் யோசித்தார். "சரி நான் வர்றேன். கொஞ்ச நாளைக்கு ஊரை விட்டு எங்கும் போறதா இருந்தா

சொல்லிட்டுப் போங்க!'' என்று கிளம்பினார். முகத்தில் சற்று ஏமாற்றம்.

''தாராளமா! எப்பவேண்டுமானாலும் நீங்க என்னைக் கூப்பிடுங்க! குற்றவாளியைக் கண்டு பிடிக்கறதில உங்ககூட ஒத்துழைக்கிறேன்!''

இன்ஸ்பெக்டர் சற்று தூரம் நடந்துவிட்டு நின்றார். திரும்பிவந்தார்.

''இன்னும் ஒரே ஒரு கேள்வி.''

''கேளுங்க!'' என்றான் சந்தோஷமாக.

''நீங்க திருச்சிக்கு எப்ப புறப்பட்டிங்க?''

''முந்தாநாள் ராத்திரி.''

''ரூமை பூட்டிக்கிட்டா?''

''ஆமா!''

''சாவி?''

''எடுத்துட்டுத்தான் போயிருந்தேன். பார்த்திங்களே!''

''மிஸ்டர் சுதர்சன்! என் கூட ஸ்டேஷனுக்கு வறிங்களா! நீங்க பொய் சொல்றிங்க, உங்களை தீர விசாரிக்கணும்?''

போலீஸ் நிலையத்தில் மேற்கொண்டு கேள்விக் கணைகளில் சுதர்சன் குற்றத்தை ஒப்புக் கொண்டான். இன்ஸ்பெக்டருக்கு முதல் சந்தேகம் எப்படி ஏற்பட்டது? எதனால் பொய் சொல்கிறான் என்று தீர்மானித்தார்.? ❑

விடை : விடை கதையில் மட்டுமல்ல படத்திலும் இருக்கிறது. பிரபா இறந்தது முதல் தேதி சம்பள தினத்தன்று என்பது இன்ஸ்பெக்டரின் வாக்கியம் ஒன்றிலிருந்து தெரிய வருகிறது. அவள் இறந்த முன் தினமே திருச்சி போய்விட்டேன் என்கிறான் சுதர்சன். அதுவும் கதவைப் பூட்டி சாவியை எடுத்துக் கொண்டு போய்விட்டேன் எனகிறான். அப்படியெனில் எப்படி அறைக்குள் இருக்கும் இரண்டு காலண்டர்களும் நவம்பர் ஒன்று என்று தேதி காட்டும்? ஒன்றும் தேதி காலை இருநதிருக்கிறான் என்றுதானே அர்த்தம்? அதனால் அவன் திருச்சி விஜயம் பொய் என்று முதல் சந்தேகம் இன்ஸ்பெக்டருக்கு ஏற்பட்டுவிட்டது ☐

2. உங்களில் ஒரு கணேஷ்

—சுஜாதா—

வசதியுள்ள பிரைவேட் ஆஸ்பத்திரியில் எட்டாம் நம்பர் அறையில் ஒரு பெரியவர் ஆப்பரேஷன் முடிந்து படுத்திருந்தார். ராத்திரி அவருடன் துணைக்குப் படுக்க அவர் மகன் திரு கிருஷ்ணமூர்த்தி என்பவர் மட்டும் அனுமதிக்கப்பட்டிருந்தார். ஆஸ்பத்திரி சற்று கெடுபிடியானது. கிருஷ்ணமூர்த்தி அறைக்குள் கோட் ஸ்டாண்டில் மாட்டியிருந்த சட்டைப் பைக்குள் ஐயாயிரம் ரூபாய் வைத்திருந்தாராம், ஆப்பரேஷன் ஃபீஸ் கொடுக்க. காலை பார்க்கையில் அந்தப் பணத்தைக் காணோம். உடனே போலீஸுக்குச் சொல்ல, அவர்கள் வந்து விசாரிக்க, இது ஒரு வேளை ஆஸ்பத்திரி ஆசாமிகளில் ஒருவர் செய்த திருட்டாக இருக்கலாம் என்பது தெரிந்தது. ஆனால் யார்?

வாக்குமூலங்கள் இதோ:

எல்லம்மா ''ராத்திரி பத்து மணியிருக்கும். எட்டாம் நம்பர் ரூம்ல பெல் பண்ணாங்க. சுகுணாவைக் கூட்டிட்டுப் போயிருந்தேன். பேஷண்ட்டு கூட ஒருத்தர் உக்காந்திருந்தாரு. அவரை ஒத்திப் போகச் சொல்லிட்டு ஸ்க்ரீன் போட்டுட்டு பெட்பான் வெச்சம். அப்புறம் பேஷண்டைப் படுக்க வெச்சுட்டு சுகுணாவை கீழே பெருக்கச் சொன்னேன். உடனே வெளிய வந்துட்டன். அவ்வளவுதாங்க எனக்குத் தெரியும்.''

சுகுணா : ''சொன்ன டூட்டி முடிச்சுட்டுப் போயிக்கினே இருக்கேன் நான், அதான்! நான் என்ன பர்ஸைக் கண்டனா பணத்தைக் கண்டனா! என்னை யாராவது சொன்னா மாரியாயி வாரிட்டுப் போயிடுவா. என்னது? மணியா

எனக்கு மணிபாக்க ஒரு எளவும் தெரியாது. ரூம்பு கூட்ற போது தனியாத்தான் கூட்டினேன். நர்ஸம்மா பெட்பான் வெக்கச் சொன்ணுங்க, வெச்சன். கூட்டச் சொன்ணுங்க கூட்டினேன், வந்தேன். அவ்ளதான். அப்ப கூட்றபோது அந்த அய்யா இருந்தாங்க...''



தாஸ்: ''நர்சம்மாவும் சுகுணவும் ரூமை விட்டு வெளிய வர்றபோது பார்த்தனுங்க...மணி பத்தரை இருக்கலாங்க. முதல்ல நர்சம்மா, அப்புறம் சுகுண

வெளிய வந்திச்சு. நான் ரூமுக்குள்ளே தனியாப் போவலேங்க. கொஞ்சநேரம் கழிச்சு, டாக்டர் கூடத்தான் போனேன். டாக்டர் என்னைப் பார்த்து, "போய் சிரிஞ்ச் எடுத்துட்டு வா, தாஸ்"ன்னுரு. நான் டூட்டி ரூமுக்குப் போய் எல்லம்மா கிட்ட சாவி வாங்கி சிரிஞ்ச் எடுத்துக் கிட்டுத்திரும்பவந்து டாக்டரண்டை கொடுத்தனுங்க. அப்ப டாக்டர் எட்டாம் நம்பர் ரூமுக்கு வெளிய இருந்தாருங்க. பேஷண்டு கூட இருந்தவரும் பக்கத்தில நின்னுக்கிட்டு இருந்தாருங்க."

கிருஷ்ணமூர்த்தி : "முதல்ல நர்ஸும் ஒரு பொம்பளே யும் வந்து பெட்பான் வெச்சு அப்பாவைத் துடைச்சுட்டுப் படுக்க வெச்சுட்டுப் போனுங்க. நான் எதிர்த்த படுக்கையில படுத்துட்டேன். கொஞ்ச நேரத்தில டாக்டரும் ஆர்டர்லி யும் வந்தாங்க. அப்பாவை செக்பண்ணுர். எங்கிட்ட ஒரு இஞ் ஜெக்ஷன் மருந்து வாங்கிட்டு வரச் சொன்னுர். பக்கத்தில் ஒருஆல்நைட் ஷாப்பில கிடைக்கும்னுட்டுசொன்னுரு. அதே சமயம் ஆர்டர்லியை சிரிஞ்ச் எடுத்துட்டு வர அனுப்பிச் சுட்டார். நான் என் சட்டைப் பையிலிருந்து ரூபா நாற்பது எடுத்துக்கிட்டு அவசரத்துக்கு சட்டை போடாம பனியனேடையே,பக்கத்துக் கடைதானேன்னு போயிட்டேன். நான் திரும்பி வந்தபோது ரூம்ல ஒருத்தரும் இல்லே... நான் ரூம்வாசல்ல நின்னுக்கிட்டிருந்தேன். டாக்டர் வந்தார். ஆர்டர்லி சிரிஞ்ச் கொண்டு வந்தான். டாக்டர் ஊசி குத்தினுர். ரெண்டு பேரும் போயிட்டாங்க. நான் கதவை உள் பக்கம் சாத்திட்டுப் படுத்துட்டேன். காலேல எந்திரிச்ச பிற்பாடுதான் சட்டைப் பையில பணம் இல்லேன்னு தெரியுது."

ஜன்னல் எல்லாம் சாத்தித்தான் இருந்தது.

டாக்டர் : "எட்டாம் நம்பர் ஆசாமியை மருந்து வாங்கிட்டு வர அனுப்பினதும் நிஜம். ஆர்டர்லியை

சிரிஞ்சுக்கு அனுப்பினதும் வாஸ்தவம். ஆம், நான் சற்று நேரம் அந்த அறையில் தனியாக இருந்தேன். அதன்பின் ஒன்பதாம் நம்பர் சென்றேன். அங்கே 'பேஷண்ட்டின்' பி. பி. பார்த்துவிட்டு வெளியே வந்தேன். இவர் மருந்து வாங்கிக் கொண்டு திரும்பி வந்திருந்தார். தாஸ் சிரிஞ்ச் கொண்டு வந்தான். ஊசி போட்டதும் 'பேஷண்ட்' கொஞ்சம் வலி பரவாயில்லைன்னார். சரி, தூங்குங்கன்னு சொல்லிட்டு படுக்கவெச்சுட்டு நான் வெளிய வந்துட்டேன். என் ஆஸ்பத்திரியில் இதற்கு முன்னால திருட்டு நடந்தது இல்லை."

வாக்கு மூலங்களைக் கேட்டீர்கள். யார் குற்றவாளி?

□ □ □

விடை: கிருஷ்ணமூர்த்தி! குற்றம் நடக்கவில்லை. செய்திருந்தால் டாக்டர்தான் தனியாக இருந்திருக்கிறார். அவர்தான் திருடியிருக்கவேண்டும். டாக்டர் நர்ஸிங்ஹோம் சொந்தக்காரர். அவர் திருட அவசியமில்லை. அந்தப் பணம் அவருக்கே சேர வேண்டியது. மற்றவர்கள் தனியாக அறையில் ஒரு பொழுதும் இல்லை. பேஷண்ட் வேறு விழித்துக் கொண்டிருந்திருக்கிறார்.

3. உங்களில் ஒரு கணேஷ்

—சுஜாதா—

சவுக்கார்பேட்டை பகுதியில் சந்திரன் நெருக்கத்தில் இருந்தது வீடு. சமீபத்தில் இடித்து வசதி செய்துகொண்டு கட்டப்பட்ட வீடு என்பது தெரிந்தது. வாசலில் நிறைய பேர் நின்று கொண்டிருக்க ஆம்புலன்ஸ் காத்திருந்தது. கேட்டைத் தாண்டிக் கொண்டு இன்ஸ்பெக்டர் குரு உள்ளே சென்றார். வராந்தாவில் நாற்காலி போட்டு ஒருவன் தலையைப் பிடித்துக் கொண்டு விசித்து அழுது கொண்டிருக்க, அவன் அம்மா (வாகத்தான் இருக்க வேண்டும்) அவனைத் தேற்றிக் கொண்டிருந்தாள். "அழாதே! பேட்டா கடவுள் தீர்மானித்ததை நாம் எப்படி மாற்ற முடியும். மனதைத் தேற்றிக் கொள்!"

"எப்படி அம்மா! எப்படி நான் அவள் இல்லாமல் உயிர் வாழப் போகிறேன்! என்னை விட்டுவிடு. நானும் எரிந்து கருகிப் போகிறேன். விடு விடு!" என்று அவன் திமிர உறவினர்கள் அவனை அடக்கிப் பிடித்தனர்.

எத்தனை உறவினர்கள், தங்கை தமக்கைகள், அண்ணன்மார் மாமன்மார்...விநோத முகங்கள். அவர்கள் பேசும் விநோத பாஷை. இவர்கள் நடுவே ஒரு...

"வாருங்கள் இன்ஸ்பெக்டர் ஸார்! உடலைப் பரிசோதனைக்கு ஆஸ்பத்திரிக்கு அனுப்பியே ஆக வேண்டுமா?"

"ஆம்! ஏன்?"

"ஆஸ்பத்திரியில் சேதப்படுத்தித் திருப்பித் தருவார்கள். செய்ய அச்சம். எங்கள் கம்யுனிட்டியில் உடல் மிகவும் புனிதமானது."

"தவிர்க்க முடியாத சில பரிசோதனைகள் செய்தாக வேண்டும் மிஸ்டர்..."

"பூல்சந்த்! என் தம்பி சம்சாரம் அவள்! உள்ளே வருகிறீர்களா? பார்க்கிறீர்களா?"

மெலிதாக இருந்த அழுகுரல் இவர்கள் நுழைந்ததும் அதிகமாகியது. தேக்குமரத் தூண்களுடன் உள்ளே பழங்காலக் கட்டிடம்தான். பெரிய இரும்புப் பெட்டி இருந்தது. அருகே மர பீரோவில் லேவாதேவி சாமான்கள். பல பேர் உட்கார்ந்து கொண்டு மூக்கைச் சிந்திக்கொண்டிருக்க இன்ஸ்பெக்டருக்கு மலைப்பாக இருந்தது. ஒவ்வொருவரையும் விசாரிக்க வேண்டுமே... கெரொஸின் வாசனை அதிகமாக இருந்தது. மெல்ல சமையல் அறையை அணுகினார். உடல் அறைக்குள் கிடந்தது. அறை வாசல் கதவு உடைத்துத் திறந்திருந்ததற்கு அடையாளம் இருந்தது.

"யாரு துணி போட்டு மூடினுங்க! திறங்க!"

உடல் திறக்கப்பட, மைகாட்! நிமிஷத்தில் பற்றிக் கொண்ட நைலான் புடவையின் தீ நாக்குகளின் அணைப்பில் உடம்பு பூரா திட்டுத்திட்டாக கருகி வெளுத்து நீர்வடிந்து...கோரம்! "மூடிவிடுங்கள் ப்ளீஸ்!" அருகே ஒரு கெரொஸின் டின் கவிழ்ந்து கிடந்தது.

"அது எப்படி நடந்தது?"

"அனார்கலி! அம்மாஜி!" அவள்தான் முதலில் அவள் கூக்குரலைக் கேட்டாள்.

தாயார். ஏராளமான மாது. வெண்புடவை அணிந்து மூக்கு மிளகாய்ப்பழம் போலச் சிவந்து அழுது கொண்டே சொன்னாள். "காலை சமையல் அவள்தான் செய்வாள். நான் பின்பக்கம் குளித்துக் கொண்டிருக்கிறேன். மயிர் எரிகிற நாற்றம், கெரஸின் நாற்றம்... உடனே கூக்குரல் கேட்டது. ஓடி வந்தேன். சமையலறை உள்பக்கம் தாளிட்டிருக்கிறது. என் மகன் வாசலில்

பேப்பர் படித்துக் கொண்டிருந்தான். அவனும் கூக்குரல் கேட்டு ஓடிவந்தான். இரண்டு பேரும் கதவை இடித்தோம். இடித்துத் திறந்தோம். ஒரே புகை! உள்ளே பார்த்தால் இவள் தன்னைப் பற்ற வைத்துக் கொண்டிருக்கிறாள். என் கண்ணே! உன்னை என் பெண் போல வளர்த்தேனே! ஏனடி இப்படிச் செய்தாய்! ஏனடி! மூன்று மாசம் கர்ப்பம் வேறு!'' என்று அடக்க முடியாமல் அழுதாள்.

''சம்பவம் நடந்தபின் இந்த அறையில் எதையாவது கலைத்தீர்களா?''

''இல்லை.''

இன்ஸ்பெக்டர் அறையைக் கவனமாக நோக்கினார். சம்பிரதாயமான சமையலறை... எத்தனையோ... இல்லத் தரசிகளின்...சதாகால இருப்பிடம்...

''சம்பவம் நடந்தபோது வேறு யார் வீட்டில் இருந் தார்கள்?''

''நான் என் மகன் இரண்டு பேர் மட்டுத்தான்''

''பெரியம்மா, என்னிடம் நீங்கள் உண்மையைச் சொல் கிறீர்களா?''

''சொல்கிறேன்.''

''உங்கள் மகனுக்கும் மருமகளுக்கும் உறவு எப்படி?''

அவள் சற்று தயங்கி, ''பொய் சொன்னால் பகவான் என்னைத் தண்டிக்கட்டும். இரண்டு பேருக்கும் அடிக்கடி சண்டைதான். ஒத்துப்போகவே இல்லை. தினப்படி அடிதடி தான். நானும் எவ்வளவோ சமாதானம் சொல்லிப் பார்த் தேன். ஆனால்...இப்படிச் செய்து கொள்வாள் என்று நாங்கள் எதிர்பார்க்கவே இல்லை...''

''சண்டை எது பற்றி...?''

மறுபடி தயக்கம். அப்பவும் தீர்மானம்.

''சில சந்தேகங்கள் பற்றி. அவனுக்கு அவள் மேல் எதற்கு பொய் சொல்ல வேண்டும் ... இருவருக்கும் பொருத்தமே இல்லை தான்...ஆனால் இந்த மாதிரி தற்கொலை வரை போகுமென்று...''

''பெரியம்மா, உங்களுக்கும் அவளுக்கும் எப்படி உறவு?''

''நான் அவளை என் பெண் போல்தான் பாவித்துக் கொண்டிருந்தேன்.''

''இன்ஸ்பெக்டர், ஏன் இப்படி கேட்கிறீர்கள்? இது க்ளியராகத் தற்கொலை தான்! உள்ளே கதவைச் சாத்திக் கொண்டு தன்மேல் கெரொஸின் ஊற்றிப் பற்ற வைத்துக் கொண்டு...''

என்றான் மூத்த மகன்.

''ஐம் நாட் ஷ்யூர் மிஸ்டர் பூல்சந்த்!'' என்றார் இன்ஸ்பெக்டர்.

நடந்தது விபத்தா தற்கொலையா இல்லை வேறு விபரீதமா? நீங்கள் சொல்லுங்கள்.

வாசகர்கள் கவனிக்கவும். குற்றவாளிகளைக் கண்டு பிடிக்க ஜெயராஜின் படமும் உதவி செய்யலாம்.

□ □ □

விடை : (1) மூன்று மாசம் கர்ப்பமாக இருப்பவர்கள் தற்கொலை செய்து கொள்ள, என்னதான் வீட்டில் சண்டை இருந்தாலும் தயங்குவார்கள்.

(2) தன்னைப் பற்ற வைத்துக்கொண்டவள் அலமாரியின் மேல் தட்டில் பத்திரமாக நெருப்புப் பெட்டியைத் திரும்ப வைப்பாளா?

கொலைக்கான சந்தேகம் இருக்கிறது.

4. உங்களில் ஒரு கணேஷ்

—சுஜாதா—

ரெயில் முதல் வகுப்பு கம்பார்ட்மெண்ட். நான்கே நான்கு பேர். ஒரு பெண்மணி வயது 40 இருக்கும், ஒரு சர்தார்ஜி, ஒரு தென்னிந்திய ப்ரொபஸர், ஒரு இளைஞன். நால்வரும் ஒருவருக்கொருவர் சம்பந்தமில்லாதவர்கள். இருந்தும் ஒரு மணி நேரப் பிரயாணத்திற்கு ஒன்றாக ஒரு கம்பார்ட்மெண்ட்டில் தற்செயலாகச் சேர்ந்தார்கள். சென்னை-டில்லி. முதல் தினம் இரவு, அந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

ரெயில் நின்றது. யாரோ வண்டியில் தலை கொடுத்து விட்டார்களோ • என்று நினைத்தார்கள் இவர்கள். இருள். அந்த கம்பார்ட்மெண்ட்டின்பகுதியில் சரேலென்று இரண்டு ஆட்கள் புகுந்தார்கள். 'உடைமை அத்தனையும் எடு' என்றார்கள். கொள்ளை... வந்தவர்கள் இளைஞர்கள். துப்பாக்கி வைத்திருந்தார்கள். அது பொம்மையா, நிஜமா, தோட்டா இருக்கிறதா என்று பரிசோதிக்க ஒருத்தருக்கும் தெரியவில்லை. எல்லோரும் இருப்பதைக் கொடுத்து விட்டார்கள். ரயில் சங்கிலியைக் கொள்ளைக்காரர்கள் இழுத்திருக்கிறார்கள். இழுத்து நிறுத்தி இந்தக் கொள்ளை நடந்திருக்கிறது. இதேமாதிரி அதே முதல் வகுப்புப் பெட்டியில் மற்ற அறைகளிலும் பயமுறுத்திப் பணம் பறித்துச் சென்றிருக்கிறார்கள். மொத்தம் இருபதினாயிரத்திற்கு மேல் போய்விட்டது, நகைகள் உட்பட!

ஆர். பி. எஃப்பும் விசாரணை செய்தார்கள். அதன்பின் போலீஸ் அதை ஏற்றுக்கொண்டு அவர்களுடன் ஒத்துழைத்துச் செயல்பட்டது. வண்டியைத் துப்புரவாக விரல்



ரேகைக்குத் தேடினார்கள். பிரயாணிகளிடம் கொள்ளைக் காரர்கள் எப்படி இருந்தார்கள் என்று ஞாபகப்படுத்திச் சொல்லச் சொன்னார்கள். அவர்கள் சரியாக ஞாபகப் படுத்திக் கொள்ள முடியவில்லை. திடீரென்று வந்தார்கள். பிடுங்கினார்கள் என்றார்கள். வேறு ஒரு சாட்சியமும் இல்லை.

இருந்தும் அந்த இரண்டு பேரையும் பற்றிய அடை யாளம் தகவல் சொல்லிக் கண்டுபிடித்து இரண்டு வாரத் திற்குள் பிடித்து விட்டார்கள்.

எப்படி?

□ □ □

விடை : கம்பார்ட்மெண்ட்டில் எப்படியும் கண்டக்டர் இருப்பார். இரவு வேளைகளில் உள்ளே தாளிடப்பட்டு சாத்தியே இருக்கும் கம்பார்ட் மெண்டின் உள்ளே சங்கிலி இழுக்கப்பட்டால்தான் இந்தத் திருட்டு சாத்தியம். வேறு கம்பார்ட்மெண்டில் இழுத்திருந்தால் உள்ளே நுழைய முடியாது. இரண்டு பேர் செய்த திருட்டு. எனவே அவர்கள் கூப்பே பகுதி யில் இருந்திருக்க வேண்டும். மற்ற பகுதியில் இருந் தால் சக பிரயாணிகள் அடையாளம் கண்டு கொண் டிருப்பார்கள். கூப்பே பகுதியில் உட்கார்ந்திருந்தவர் களை கண்டக்டர் பார்த்திருக்கிறார். அவர் அடையாளம் தெரிந்திருப்பார். மேலும் கூப்பே பகுதியில் உள்ள விரல் ரேகைகளை ஆதாரமாக வைத்துக் கொண்டு இது திட்டமிட்டுச் செய்யப்பட்ட கொள்ளை என்பது தெளிவாகத் தெரிவதால் தெரிந்த குற்றவாளிகளின் விரல் ரேகைகளோடு ஒப்பிட்டுக் கண்டுபிடித்திருக் கிறார்கள்

5. உங்களில் ஒரு கணேஷ்

—————————— சுஜாதா ——————

மூன்று லட்ச ரூபாய் நூறு ரூபாய்க் கட்டுகளாக பாங்கில் வாங்கி அவைகளை சற்றுப் பெரிசான ப்ரீஃப் கேஸில் போட்டு அதன் வாயைப் பூட்டினார். சாவியைப் பைக்குள் போட்டுக் கொண்டு ப்ரீ:.ப் கேஸில் காதுடன் சங்கிலி வைத்துத் தன் கைக்குள் நுழைத்துக் கொண்டு செண்ட்ரி கூட வர பாங்கை விட்டு வெளியே வந்து ஆபிஸ் வானில் ஏறிக்கொண்டார். வான் புறப்பட்டது.

பதினைந்து வருஷங்களாக ஒவ்வொரு மாதமும் இதையே தான் செய்து கொண்டிருக்கிறார் காஷியர் சர்மா. ஒரு மாறுதல் இல்லை. இதோ இன்னும் கொஞ்ச நாளில் ரிடையர் ஆகிவிடுவார்....துல்லியமான சர்விஸ். சிக்கலில்லாத வாழ்க்கை, சிக்கனமான மனைவி, ஒரே மகன்...வாழ்க்கையில் வேறு என்ன வேணும்? இதோ வண்டி. நேராகத் தொழிற் சாலை ஆபிஸுக்குப் போகும். அங்கே கிளார்க்குகள் பணத்தைப் பிரித்துப் பிரித்துப் பழுப்புக் கவர்களில் போடுவார்கள். மத்யானத்திற்குள் அத்தனை பேருக்கும் சம்பளம் பட்டுவாடா முடிந்துவிடும். மற்றொரு மாதம் மனைகளில் கொஞ்சம் சிரிப்பு, சந்தோஷம்.

வான் பெரம்பூர் போய் ஏ எஸ் ஸியைத் தாண்டி, அந்தச் சின்ன பாலத்தைத் தாண்டி ஸப்ளை ரோடில் தனிமையில் ரெயில்வே கேட்டை அணுகியது. கேட்டு சாத்தியிருந்தது. சர்மா வெளியே பார்த்தார். நீலவானத்தில் ஒரே ஒரு மேகத்துணுக்கு. தூரத்தில் ஷெட்...“என்ன பெரியசாமி பொண்ணுக்கு எப்ப கல்யாணம்?” என்றார். அந்த இரண்டு பேரும் அருகே நெருங்கியதைக் கவனிக்கவில்லை. நிமிர்ந்தபோது அவர்கள் திடுதிடுப்பென்று வானின் கதவைத் தட்டுவதும், அதை ஏறக்குறைய உடைக்கிற



மாதிரி குலுக்குவதும், சரக்கென்று திறப்பதும்... "வெளியே வா! சுட்டுருவேன். வெளியே வா?"

கையில் துப்பாக்கி வைத்திருந்தான் சென்ட்ரி. தயாரில்லாமல் இருந்து மார்பில் பாதிக்கப்பட்டான். டிரைவர் உதை பட்டார். சர்மா மூர்க்கத்தனமாக மண்டையில் அடிபட்டார். அவர் கை சங்கிலி இழுக்கப் பட்டது. பையை அவர் அணைத்துக் கொள்ள, மறுபடி உதை வாங்கினார். பை திறக்கப்பட்டு...உள்ளிருந்த அந்த நூறு ரூபாய்க் கட்டுக்கள் அவசரமாகக் கவரப்பட்டன... அருகே இருந்த காரில் அவர்கள் பாய்ந்து அது ரிடர்ன் அடித்து எதிர்ப்பக்கம் செல்ல, நிமிஷமாய்க் காரியம் முடிந்துவிட்டது. அவர்கள் இளைஞர்கள் என்பது மட்டும் தெரிந்தது. அடையாளம் ஞாபகம் இல்லை. மயங்கி விட்டார்...எல்லாப் பணமும் பறி போய் விட்டது.

போலிஸ் : பிற்பாடு தீர விசாரித்தார்கள். ஏ எஸ் ஸி செண்டரிலிருந்து ஒரு ஜவான் ரெயில்வே கேட் அருகில் கசமுசா வென்று நடப்பதைக் கவனித்து அங்கே ஓடி வருவதற்குள் பியட் கார் கிளம்பி விட்டது. ஒன்றும் நம்பர் சரியாக ஞாபகமில்லை. 38 ஏதோ என்று சொன்னார். மிக வேகமாக தூள் பறந்தது கார்...

ரெயில்வே கேட் சிப்பந்தி கந்தசாமி : "நான் கேட்டை மூடிவிட்டு சிக்னல் இறக்கிவிட்டுக் காத்திருந்தேன். என் அறையில் இருந்ததால் சரியாகப் பார்க்க முடியவில்லை. தனியாக அந்த வான் வந்து நின்றதைப் பார்த்தேன். பியட் கார் அப்புறம்தான் வந்திருக்கவேண்டும். நான் வெளியே வந்தபோது சப்தம் கேட்டது. கார் வேகமாகச் சென்று விட்டது. "எதிர் திசையில்...கேட்டுக்கு அருகே வராததால் அவர்கள் முகத்தைப் பார்க்க இயலவில்லை" என்றார்.

சென்ட்ரி : "திடீரென்று அந்த இளைஞன் உள்ளே நுழைந்து சற்றும் எதிர்பாராமல் தாக்கிவிட்டான். என் ரைஃபில் அருகே இருந்தது; அதை எடுப்பதற்குள் அடிபட்டு மயங்கிவிட்டேன். நான் எக்ஸ் சர்விஸ்..."

டிரைவர் : "அவர்கள் வருவதை நான் கவனிக்கவே இல்லை திடுதிப்பென்று தாக்கினார்கள். இரண்டு பேரா, மூன்று பேரா என்று கூடத் தெரியவில்லை."

சர்மா : "என்னால் முடிந்தவரை பணத்தைக் காப்பாற்ற முயற்சி செய்தேன். என் உயிருக்கு ஆபத்து ஏற்படும்என்கிற நிலையில்தான் பையைக் கைவிட்டேன்!"

இந்தக் குறைவான சாட்சியங்களை வைத்துக்கொண்டு அதற்கு மேல் விசாரித்த போலீசார் குற்றவாளி இளைஞர் களைச் சரியாக இரண்டு வாரங்களில் பிடித்துவிட்டார்கள். எப்படி என்று உங்களால் ஊகிக்க முடிகிறதா? பாருங்கள்.

□ □ □

விடை : கொடுத்த சாட்சியங்களிலிருந்து எதுவும் துப்பு இல்லை இருந்தும் போலீசார் கண்டு பிடித்து விட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. ஒவ் வொரு மாதமும் ஒரே சமயத்தில் வருஷக் கணக்காக இது நடக்கிறது என்றால் ரயில்வே கேட் மூடியிருப்பது பற்றித் தெரிந்திருக்கும். அவ்வளவு பணத்துடன் நிற்க விரும்பாமல் வேறு பாதையில் மேம்பாலத்தில்தான் சென்றிருப்பார்கள் (படம்). எனவே, அன்று ரயில்வே கேட் மூடியிருப்பது எதிர்பாராத சம்பவம் என்பது தெரிகிறது கேட் தற்செயலாக மூடப்பட்டிருக்கலாம், அல்லது வேண்டுமென்றே மூடியிருக்கலாம். எனவே போலீசார் கேட் கீப்பரை சற்றுத் தட்டி விசாரித்திருக் கிறார்கள். இது திட்டமிடப்பட்ட செயலாக இருந்தால் (அப்படித்தான் இருக்கவேண்டும். பியட் கார் தயாராக இருக்கிறது.) கேட் கீப்பரும் அதற்கு உடந்தையாய் இருக்க வேண்டும்.

கேட் கீப்பரை மூன்று நாள் புரட்டி எடுத்து விசாரித்ததும் இந்தப்படி ஒப்புக்கொண்டு அவன் கூட்டாளிகளைக் காட்டிக் கொடுத்துவிட்டான். மற்ற வர்கள் எழுந்திருந்ததும் சோதனை போட்டுக் கண்டு பிடித்திருக்கலாம் அல்லவா?

சென்னை
40
கி.மீ.

6. உங்களில் ஒரு கணேஷ்

—சுஜாதா—

போக்குவரத்து அதிகமில்லாத மத்தியான வேளையில் நெடுஞ்சாலையில் அந்த விபத்து நிகழ்ந்தது. ஒரு ஆசாமி அடிபட்டு இறந்திருந்தான். உடலின் மேல் வாகனம் ஏறியிருந்ததாகத் தெரியவில்லை. அதிவேகத்தில் வந்து பிரேக் போட்டு தவிர்க்க முடியாமல் இடித்து அந்த அதிர்ச்சியில் அவனை வீழ்த்திவிட்டு நிற்காமல் சென்றுவிட்டதாகத் தெரிந்தது. விபத்து நடந்த சிறிது நேரத்தில் ஒரு பஸ் அந்த வழியே சென்றபோது உடலைக் கண்டு, உடனே அருகாமை டவுனில் உள்ள போலீஸ் நிலையத்திற்குத் தகவல் சொல்ல, அந்த டவுனைச் சேர்ந்த டிரா:.பிக் போலீசார் தாமதமின்றி ஸ்தலத்திற்கு வந்தனர். வந்து பார்த்து, அளந்து விசாரித்து அனுமானித்து சில முடிவுகள் எடுத்தனர். அந்த முடிவுகள் இவை :

1. இறந்தவன் பெயர் கந்தசாமி என்பது.
2. அவர் அருகாமை பள்ளிப்பாளையம் கிராமத்தில் ஒரு ஆரம்பப் பள்ளி ஆசிரியர்.
3. அவரை அடித்துவிட்டுச் சென்றது சென்னையில் உள்ள ஒரு நீலநிற அம்பாஸிடர் கார்.
4. காரில் இரண்டு புதிய அல்லது புதுப்பிக்கப்பட்ட டயர்கள்.
5. இடித்த வேகம் சுமார் தொண்ணூறு கிலோ மீட்டர்.
6. காரை ஓட்டியவர் திரு சாம்ராஜு என்பவர் என்பது பிறகு கண்டுபிடிக்கப்பட்டு அவர் கைது செய்யப்பட்டார்.

போலீசார் பார்த்த காட்சி உங்களுக்குப் படமாக வரையப்பட்டிருக்கிறது. போலீசார் எப்படி இந்த முடிவு களுக்கு வந்தார்கள் என்று உங்களால் ஊகிக்க முடிகிறதா? பாருங்களேன்!

□ □ □

விடைகள் : 1, 2. இறந்தவர் தபால் பெட்டியில் கடிதம் போட வந்திருக்கிறார். அவர் பையிலிருந்த கடிதத்திலிருந்து இந்த விவரம் தெரிந்துவிடும்.

3. கார் சென்னையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது [விபத்து சாலையின் இடது பக்கம் நிகழ்ந்திருக்கிறது.] கார் இடித்த வேகத்தில் அவரது உடலிலோ, சைக்கிளிலோ நீலநிறம் ஒட்டிக் கொண் டிருக்கும். டயர் மார்க், டயர்களுக்கு இடையே உள்ள தூரத்திலிருந்து அம்பாசிடர் கார் என்பது தெரிந்து விடும்.

4. காரின் டயர் மார்க்குகளில் இருந்து புதிய வடிவங்கள் தெளிவாகப் பதிந்திருக்கிறது.

5. உடலுக்கும் டயர் மார்க்கிற்கும் உள்ள தூரத்திலிருந்து காரின் வேகத்தைக் கணக்கிடலாம்.

6. போலீசார் உடனே சென்னைப் போலீசா ருடன் ஒயர்லஸ் மூலம் தொடர்பு கொண்டு காரின் நிறம், புதுப்பிக்கப்பட்ட டயர் பற்றிய விவரங்களைத் தெரிவித்தவுடன், காரைக் கண்டுபிடித்துவிட்டார்கள்.

விஷம்

திரும்ப வீடு வந்தபோது நள்ளிரவு. காரின் ஹெட் லைட் வெளிச்சம் ரோட்டைப் பெருக்கிக் கொண்டுவர பங்களாவுக்குள் நுழையும்போது அதை அணைத்து விட்டேன். ஹரிஹரனை எழுப்பாமல் இருக்க அணைத்திருக்க வேண்டாம், ஹரியின் அறை விளக்கு இன்னும் எரிந்து கொண்டிருந்தது. விழித்துக் கொண்டிருக்கிறான் போல. இல்லை, விளக்கை அணைக்காமல் தூங்கிப் போயிருக்க வேண்டும்.

காரை ஷெட்டில் நிறுத்திவிட்டு மெதுவாக நடந்தேன். இதோ வானத்தில் கைநீட்டி மையை ஈஷிக் கொள்ளலாம் போல இருட்டு. இருட்டில் 'மனக்கணக்'காக அஞ்சு படி ஏறி பால்கனிக்கு வந்தேன். பால்கனியைக் கடந்து கதவைத் திறந்தேன். நுழைந்தேன். ஹால் விளக்கைப் போட்டேன். மெள்ள ஹரியின் அறைக்குச் சென்றேன். திறந்தேன். பார்த்தேன்.

படுக்கையில் படுத்திருந்தான். விழித்துக் கொண் டிருந்தான். ஆனால் நகரவில்லை. என் பக்கம் தலையைக் கூடத் திருப்பவில்லை. ஆனால் அவன் கூப்பிட்டது கேட்டது. "சம்பத்! சம்பத்! இங்கே வா."

மெதுவாகப் பேசினான். ஒவ்வொரு வார்த்தையையும் அளந்து உதட்டில் தனித் தனியே உச்சரித்தாற்போல, மிக மெல்லிசாக, பேசுவதற்கே பயப்பட்டாற்போல கதவை நன்றாகத் திறந்து அவன் அருகில் செல்லப் புறப்பட்டேன்.

"நில்லு! இரு! சம்பத்..." அவன் பேசுவது மிக மெல்லி சாக இருந்தது. ஒவ்வொரு வார்த்தைக்கும் கோடிப் பிரயத்தனம் செய்வதுபோலிருந்தது.

"ஹரி, என்னடா?"

"ஷ்ஷிஷ்..." மறுபடி முணுமுணுப்பு. "ஷ்ஷ்ஷ், சத்தம் போடாதே சனியனே! செருப்பைக் கழட்டிவிட்டு கிட்ட வா. ப்ளீஸ் சம்பத், சொன்னபடி செய்."

அவன் பேசும் விதம் விநோதமாக இருந்தது. தமிழ் சினிமாவில் கடைசி சீனில் இரண்டாவது கதாநாயகன் குண்டடிப்பட்ட பிற்பாடு வயிற்றைப் பிடித்துக்கொண்டு முக்கி முக்கிக் கரகரத்த குரலில், "எப்படியாவது என் தங்கைக்கு மறுவாழ்வு...தா...' என்று பேசுவானே அது போல! ஏன்?

"சீக்கிரம் சம்பத்! வா! செருப்பைக் கழட்டி வெச்சுட்டு வாயேன்!"

செருப்பை எதற்குக் கழற்ற வேண்டும்? புரியவில்லை! என்னமோ அவனுக்கு உடம்பு சரியில்லை. பேச்சிலேயே தெரிகிறது...இந்தச் சமயத்தில் வெறுப்பேற்ற வேண்டாம். செருப்பைக் கழற்றி விட்டுவிட்டு அவன் படுக்கைக்குச் சென்றேன்.

"படுக்கையைத் தொட்டுடாதே! ப்ளீஸ் படுக்கையைத் தொட்டுடாதே!" இன்னும் அந்த 'குண்டடிப்பட்ட தமிழ்ச் சினிமா' குரல்தான்! மல்லாக்கப் படுத்திருந்தான். மார்பு வரை போர்த்தியிருந்தான். வரிவரியாகச் சட்டை தெரிந்தது. அப்பா! எத்தனை வியர்வை! ராத்திரி உஷ்ண மாகத்தான் இருந்தது? எனக்கும் கொஞ்சம் வியர்த்துத் தான் இருந்தது. ஆனா ஹரிக்கு முகம் முழுக்க வியர்த்து தலையணையெல்லாம் நனைந்து, திட்டுத்திட்டாக ஈரம்! மலேரியாவா என்ன?

"என்னடா ஹரி?"

"பாம்பு!" என்றான்.

"பாம்பா! மை காட்! எங்கடா கடிச்சது? எப்படா?"

"ஷட் அப்!" என்ருன். முணமுணப்புத்தான்.

"ஹரி, கேள்டா!" அவன் அருகே சென்று அவன் தோளைத் தொட்டுச் சொன்னேன். "பாம்புக் கடின்ஞ உடனே ஏதாவது செய்யணும். எங்கடா கடிச்சது சொல்லுடா." அப்படியே அசையாமல் கிடந்தான், வலி தாங்காமல் அமுக்கிப் பிடித்துக்கொண்டிருக்கிறவன் மாதிரி!

"இன்னும் கடிக்கலேடா!" என்ருன் மெதுவாக. "இன்னும் இல்லே. என் வயத்துமேல் படுத்துக்கிட்டிருக்கு. தூங்கறது."

சட்டென்று நான் பின்வாங்கினேன். "என்னது!"

"ஆமாம். கட்டுவிரியன்."

"அய்யோ!" நான் அவன் வயிற்றை வயிற்றின் மேலிருந்த போர்வையைப் பார்த்தேன். உள்ளே என்ன இருக்கிறது என்று சொல்ல முடியாதபடி கசங்கி இருந்தது. எனக்குத் திக்திக்கென்று மார்பில் இதயம் குத்த ஆரம்பித்து விட்டது.

"என்னடா சொல்றே? வயத்திலே ஒரு கட்டுவிரியன் பாம்பு கிடக்குதா?"

"ஆமாண்டா, சத்தியம்!"

"எப்படிடா? அங்க வந்து படுத்துக்கிச்சு?" கேட்டிருக்கக் கூடாதுதான்.

அந்த வியர்வை! அவன் கண்களில் அந்த பயம்! அவனைப் பேசாமல் இரு என்று சொல்லியிருக்கவேண்டும்.

"படிச்சுக்கிட்டிருந்தேன்." மெதுவாகப் பேசினுன். மிகமிக மெதுவாக ஒவ்வொரு வார்த்தையையும் யோசித்து கவனமாக வெளிப்படுத்தி...வயிற்றில் ஒரு தசையும் அசை

யாதபடி மெல்ல...மெல்ல... "மல்லாக்கப் படுத்துட்டுப் படிச்சுக்கிட்டிருந்தேன். மார்ல, புஸ்தகத்துக்குப் பின்னுல் ஏதோ குறுகுறுன்னது. என்னடான்னு பார்த்தா, இந்தப் பாம்பு மெதுவா பைஜாமா மேல ஊர்ந்துட்டு இருக்கு! சின்னது, பத்து இஞ்ச்தான் இருக்கும். எனக்குச் சகலமும் நின்னுபோச்சு! அப்படியே உறைஞ்சுட்டேன். அது மேல ஏறிப் போயிடும்னு நினைச்சுட்டு..." ஹரி கொஞ்ச நேரம் மௌனமாக இருந்தான்! அவன் கண்கள் அந்த இடத்தில் நோக்கின...பேசும்போது வயிற்றுப் பாகத்தில் சலனம் ஏற்படக்கூடாதே என்று அவன் கவலை தெரிந்தது.

"போர்வையில் ஒரு மடிப்பு இருந்தது. அதுக்குள்ள... அதுக்குள்ள சட்டுனு பூந்துடுச்சு!" அவன் சொல்வது சரியாகக் கேட்காமல் அருகில் குனிந்து கேட்க வேண்டி யிருந்தது. "உள்ள இருக்குடா! இன்னும் இருக்குடா! பைஜாமா வழியா என் வயிற்றுப் பக்கம் வந்து அதுக்கப் புறம் அது நகரலே. வயிற்றில்...காட்டிய இடத்தில் அப்படியே இருக்கு! தூங்கிப் போயிட்டதோ என்னவோ! அப்பா! உனக்காகக் காத்துக் காத்து..." மெல்ல விழிகளை மட்டும் உயர்த்தி என்னைப் பார்த்தான்.

"எப்படா இது?"

"மணிக்கணக்கில் ஆச்சு!" என்ருன் மெல்லிசாக. "எத்தனை நேரமா இப்படியே கிடந்துட்டிருக்கேன் தெரியுமா? முடியலேடா! இருமல் வந்துடும்போல இருக்குடா. சம்பத் ஏதாவது செய்டா."

திகிலில் யோசித்தேன். அவன் சொன்னது நிச்சயம் சாத்தியமே! எஸ்டேட் காடு! தனியான வீடு! கட்டுவிரியன் பாம்பு இந்தப் பிரதேசத்தில் அதிகம் என்று சொல்லியிருக் கிருர்கள்! ஓ மை காட்! என்ன செய்வது! ஹரி இதுவரை தப்பித்திருக்கிருன். இதுவரை கடிக்கவில்லை கட்டுவிரியன்! கடித்தமாத்திரத்தில் ஆள் க்ளோஸ்! இந்த வங்காளப் பகுதியில் உலாவும் பாம்புகளுக்கு அவ்வளவு விஷம்.

''ஆல் ரைட் ஹரி!'' நானும் முணுமுணுக்கத் துவங்கி விட்டேன். ''நகராதே! இனிமே பேசாதே! அவசிய மில்லாம பேசவேண்டாம்......அது பயப்பட்டாத்தான் கடிக்கும். ஏதாவது செய்யறேன் இரு!''

மெதுவாக நடந்து வந்து சமையல் அறைக்குப் போய் ஒரு சின்ன கூர்மையான கத்தி கொண்டு வந்தேன். அதை மடக்கி பாண்ட் பைக்குள் போட்டுக்கொண்டேன். நான் என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கையில் அவன் ஏதாவது இருமி, அல்லது நகர்ந்து அது எழுந்து கடித்துவிட்டால் உடனே கடித்த இடத்தில் கத்தியால் வெட்டி விஷத்தை உறிஞ்சித் துப்புவதற்குத் தயாராக இருக்கவேண்டும்!

மறுபடி பெட்ரூமுக்கு வந்தேன். ஹரி அப்படியே கிடந்தான். அசைவில்லாமல் மூஞ்சி எல்லாம் வியர்வை. நான் அறைக்குள் நடக்கையில் அவன் கண்கள் என்னுடன் வந்தன. என்ன செய்யப்போகிறான் என்கிற பயம் அவன் கண்களில் தெரிந்தது. நான் அவன் அருகில் நின்றேன். என்ன செய்வது, எனக்குத் தோன்றவேயில்லை. என் கைகள் நடுங்கின.

அவன் காதருகில் சென்று கிசுகிசுத்தேன். ''ஹரி, போர்வையை மெள்ள பூ மாதிரி எடுத்துடறேன். முதல்ல அதைப் பார்க்கலாம். என்ன செய்யறதுன்னு பார்க்க லாம். கொஞ்சம்கூட டிஸ்டர்ப் பண்ணுமப் பார்க்கிறேன்.''

''முட்டாள்!'' அவன் உச்சரிப்பில் கோபமில்லை. ஒவ் வொரு வார்த்தையையும் ரொம்பக் கவனமாக, மெதுவாக மெலிதாகத்தான் பேசினான். அவன் கோபம், கண்களின் ஓரத்தில் மட்டும் தெரிந்தது. லைட்டைப் பார்த்து அது பயந்துடும். போர்வைக்குள்ள இருட்டா இருக்கு!''

''இல்லைன்னா சட்டுனு போர்வையை விலக்கிட்டு அது கடிக்கிறதுக்குள்ள சட்டுனு அதைத் தள்ளி விட்டுர்

றேண்டா!'' என் குரலிலேயே அதைச் செய்கிற நம்பிக்கை இல்லை.

''ஏய்! ஒரு டாக்டரைக் கூப்பிடேண்டா!'' என்முன் என்னை முறைத்துப் பார்த்துக்கொண்டே.

''டாக்டர்! ஆமாண்டா! அதான்! நான் உடனே டாக்டர் சின்ஹாவைக் கூப்பிடறேன்!''

நான் மெதுவாக ஹாலுக்கு அடிமேல் அடி வைத்து வந்து அந்தப் பழைய டெலிபோனை அடைந்து அழுக்கு டைரக்டரியைப் பார்த்து டாக்டர் சின்ஹாவின் நம்பரைத் தேடி டெலிபோனை எடுத்து அதன் தலையில் தட்டுத் தட்டுத் தட்டி, ''ஆபரேட்டர்! ஆபரேட்டர்!'' என்றேன் பொறுமையற்று.

''நம்பர் ப்ளீஸ்!''

டாக்டர் சின்ஹாவின் நம்பரைச் சொல்லி, ''அவசரம் சீக்கிரம்'' என்றேன்.

''டாக்டர் சின்ஹா! நான் சம்பத் குமார் பேசறேன்!''

''ஹலோ ஷொம்போதி! இந்த நேரத்திலே! தூங்கலையா நீங்க?''

''டாக்டர், நீங்க உடனே வரணும். கட்டுவிரியன் கடிச்சதுக்கு ஸீரம் கொண்டு வாங்க.''

''யாரைக் கடிச்சுது?'' அந்தக் கேள்வி என் காதில் வெடித்தது.

''இல்லை. இன்னும் ஒருத்தரையும் கடிக்கலே. ஹரிஹரன் ...அவன் படுத்துக்கிட்டிருக்கான். ஒரு பாம்பு அவன் போர்வைக்குள்ள புகுந்து வயிற்றின்மேல் படுத்துத்தூங்கிக் கிட்டு இருக்கு!''

மூணு செகண்டுக்கு மௌனம். அதன்பின் டாக்டர் சின்ஹா மெதுவாக, பதட்டமின்றி, ''அவனை அப்படியே அசையாமல் இருக்கச் சொல். பேசவே கூடாது. தெரிகிறதா?'' என்றார்.

''தெரிகிறது!''

''உடனே வரேன்!''

டெலிபோனை வைத்துவிட்டு ஹரிஹரனிடம் சென்றேன். அவன் கண்கள் நான் வருவதைத் தொடர்ந்தன.

''டாக்டர் சின்ஹா வரார். அசங்காம அப்படியே படுத்திருக்கச் சொன்னார்!''

''வேற என்ன செஞ்சுட்டிருக்கேனாம்! என்ன மனுசண்டா!''

''இத பாரு ஹரி! பேசக் கூடாது. ரெண்டு பேரும் பேசவே கூடாது!''

''நீதான் வாயை மூடிக்கயேன் முதல்ல!'' என்றான் எரிச்சலுடன். அவன் வாயோரம் சற்றுத்துடிக்க ஆரம்பித்து விட்டது. பேச்சை நிறுத்தின பிற்பாடும் அந்தத் துடிப்பு நிற்கவில்லை. நான் என் கைக்குட்டையை எடுத்துமெதுவாக அவன் முகத்தில் கழுத்தின் வியர்வையைத் துடைத்து விட்டேன். துடைக்கும்போது அவன் வாய்ப் பக்கம் இன்னும் துடிப்பதை உணர்ந்தேன். பாவம்! எத்தனை நேரம் அப்படியே இருப்பான்! சித்திரவதை! இருமக் கூடாது. தும்மக் கூடாது. நகரக் கூடக் கூடாது...

சமையல் அறைக்குச் சென்று ஐஸ் பெட்டியைத் திறந்து ஐஸ் கட்டியை உடைத்து ஒரு துண்டில் சுற்றிக் கொண்டு வந்தேன். அதை அவன் நெற்றிமேல் வைத்தேன்.

''கொஞ்சம் உன்னை நிதானப் படுத்தும்,'' என்றேன்.

"வேண்டாம், எடுத்துடு. இருமல் வரும்போல இருக்கு," என்முன் நெற்றியைச் சுருக்கிக் கொண்டு.

மறுபடி வாய்ப் பக்கம் துடிக்க ஆரம்பித்து விட்டது. அதிக நேரம் இவனுல் ஸ்திரமாக இருக்க முடியாது. எங்கே இந்த டாக்டர் கிழம்!

ஜன்னலின் வழியாக டாக்டரின் கார் வெளிச்சம் தெரிய, நான் அவரைச் சந்திக்க வாசற் பக்கம் போனேன்.

"எப்படி இருக்கு?" என்முர் டாக்டர் உள்ளே நடந்து கொண்டே. "எங்கே அவன்? எந்த ரூம்?"

ஹாலில் தன் பையை வைத்துவிட்டு என் பின்னே ஹரியின் அறைக்கு வந்தார். வயசானவர்தான். பிசிறு பிசிருக நரைத்த தலை. தீர்க்கமான மூக்கு. முன் ஜாக்கிரதை யாக பாத்ரூம் ஸ்லிப்பர் போட்டுக்கொண்டு வந்திருந்தார். படிய, பைய, கவனமாக பூனைபோல நடந்தார். ஹரி அவரைக் கண் ஓரத்தில் பார்த்தான். அவர் ஹரியின் அருகே வந்து புன்னகை செய்தார். "இத பார் ஹொரிஹரன், நான் வந்து விட்டேன். கவலேயே படாதே! கொஞ்சம் பொறு. டாக்டர் சின்ஹாவிடம் எல்லாப் பொறுப்பையும் விட்டுவிடு!" என்று சொல்லிவிட்டு, "சம்பத் கொஞ்சம் வரீங்களா?" என்று ஹாலுக்கு நடந்தார். நான் அவர் பின் சென்றேன்.

"முதல்ல அவனுக்குக் கொஞ்சம் ஸீரம் இன்ஜெக்ஷன் கொடுத்துடணும். அசங்காம...இன்ட்ராவீனஸ்ஸா குடுத் தாகணும். ஆனு அதை நான் ரொம்பக் கவனமா குடுத்தாகணும். அவன் சிணுங்கக் கூடாது." அவர் தன் பையைத் திறந்து இன்ஜெக்ஷன் சாதனங்களை எடுத்தார்.

சமையல் அறைக்குச் சென்று ஊசியை ஸ்டெரிலைஸ் செய்தோம். ஸிரிஞ்சில் ஊசியைப் பொருத்தி ஒரு சின்ன

பாட்டிலின் ரப்பர் மூடிக்குள் குத்தி அதனுள் இருந்த மஞ்சள் திரவத்தை ஜிவ் என்று உறிஞ்சிக் கொண்டார். ஊசியை என்னிடம் கொடுத்தார்.

"வெச்சுக்க. நான் கேட்கிற வரைக்கும்." பையை எடுத்துக் கொண்டார்.

இருவரும் ரூமுக்குத் திரும்பி வந்தோம். ஹரி கண்களைப் பெரிசாக விழித்துக் கொண்டிருந்தான். டாக்டர் அவன் அருகில் சென்று அவன் கையை ஏதோ ஓர் அபூர்வ மான பதினாறும் நூற்றாண்டு வஸ்துவைப் போல் எடுத்து சட்டையை மடக்கிக் கட்டில்மேல் படாமல்...

மெல்லச் சொன்னார். "ஹரிஹரன், உங்களுக்கு ஒரு இன்ஜெக்ஷன் குடுக்கப் போறேன். ஸீரம்...சின்ன குத்து தான். அசக்காம இருங்க! அசையாம இருங்க. வயிற்றில் தசைகளை குறுக்கிக்கிடாதீங்க! அப்படியே தொள தொளன்னு இருக்கட்டும், என்ன?..."

ஹரி என் கையில் ஸிரிஞ்சைப் பார்த்தான். டாக்டர் சின்ஹறா சிவப்பாக ஒரு ரப்பர் குழாயை எடுத்தவர் எழுந்து அவன் புஜத்தில் சுற்றி இறுக்கினார். முடிச்சுப் போட்டுக் கட்டினார். முன் கையில் ஒரு இடத்தில் பஞ்சால் ஸ்பிரிட் தடவினார். என் கையிலிருந்த ஊசியை வாங்கிக் கொண்டார். அதன் ஸிரிஞ்சில் கோடுகளை ஒரு கண்ணைக் குறுக்கிக் கொண்டு பார்த்து பளிச்சென்று கொஞ்சம் மஞ்சள் மருந்தை ஊசிமுனை வழியாகப் பீச்சிப் பார்த்தார். நான் சலனமற்றுப் பார்த்துக் கொண்டு நின்றேன். ஹரியும் பார்த்துக் கொண்டு தான் இருந்தான். முகமெல்லாம் வியர்வை. ஏதோ வெண்ணெ யால் பளபளவென்று மேக்கப் போட்டாற் போலத் தெரிந்தது. தலையணையெல்லாம் வழிந்திருந்தது,

ஹரியின் கையில் ரத்தக் குழாய் புடைத்து நீலமாகத் தெரிந்தது. ஊசியைத் தோலுக்குள் நுழைத்து ரத்தக்

குழாயை நெருடினார். ஹரி மேலே பார்த்துக் கண்ணை மூடிக் கொண்டான். நகரவில்லை. எனக்கு உடம்பை பயம் ஒரு உருவு உருவி விட்டது.

இன்ஜெக்ஷன் முடிந்ததும் டாக்டர் சின்ஹா ஹரியின் காதருகில் வந்து, ''இப்ப அது கடித்தாலும் ஒன்றும் ஆகாது. அதுக்காக நகர்ந்துராதே. இதோ வர்ரேன்! வந்துர்ரேன்.''

அவர் பையை எடுத்துக் கொண்டு அறைக்கு வெளியே வர, நான் அவர் பின்தொடர்ந்தேன்.

''இப்ப பயமில்லையா டாக்டர்?'' என்றேன்.

''சொல்ல முடியாது!''

''மருந்து கொடுத்திட்டிங்களே!''

டாக்டர் குள்ளமாக இருந்தார். தன் தாடையை வருடிக் கொண்டார். ''இந்த ஸீரம் அவனைக் காப்பாற்றும்னு நிச்சயமாச் சொல்ல முடியாது. காப்பாற்றலாம். காப்பாற்றாமலும் இருக்கலாம். வேறே என்னமும் செய்ய நம்மாலே முடியுமான்னு யோசிச்சுக்கிட்டிருக்கேன்...'' மெதுவாக வராண்டாப் பக்கம் நடந்தார். கதவு சாத்தியிருந்தது. ஜன்னல் வழியாக வெளியே கரிய மேகத்தைப் பார்த்தார்.

''சட்டுனு போர்வையை நீக்கிட்டுப் பாம்பு கடிக்கிறதுக்குள்ள தள்ளிறலாமா?''

''கூடவே கூடாது. அந்த ரிஸ்க் நாம எடுக்கக்கூடாது.' அவர் பேச்சில் நிர்ணயம் இருந்தது. சற்றுக் கீச்சுக் குரல் கேட்டது.

''அவனை இப்படியே விட்டுர்றதா! ஏற்கனவே கொஞ்சம் நெர்வஸாயிட்டான்!''

''ப்ளீஸ்! மிஸ்டர் ஷொம்போத்! ப்ளீஸ்! என்னை அவசரப்படுத்தாதீங்க! கொஞ்சம் யோசிக்க விடுங்க!''

அவர் தன் நெற்றியைக் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டார். நெற்றி சுருங்கியிருந்தது. உதட்டைக் கடித்துக் கொண்டிருந்தார்.

''பாருங்க, ஒரே ஒரு வழிதான் இருக்கு. பாம்புக்கு அது படுத்துக்கிட்டு இருக்கிறவாகிலேயே மயக்க மருந்து கொடுக்கணும்.''

''நல்ல ஐடியாதான்.''

''அவ்வளவு பத்திரமானதில்லே. பாம்புக்கு ரத்தச் சூடு கிடையாது. மயக்க மருந்து அவ்வளவு வேகமா வேலே செய்யாது. சரியாவும் வேலே செய்யாது. ஆனு தற்சமயம் இது ஒண்ணுதான் செய்ய முடியும். வேற எதுவும் இல்லேயே! ஈத்தர் உபயோகிக்கலாம்...இல்லே க்ளோரோஃபார்ம்?...''யோசித்துக் கொண்டே பேசிஞர்.

''எது?'' என்றேன்.

''க்ளோரோஃபார்ம்! சாதாரண க்ளோரோஃபார்ம்! அதுதான் உத்தமமானது! இத பாருங்க...'' என்னே பால்கனிக்கு இழுத்துச் சென்முர். ''என் வீட்டுக்குக் கார் எடுத்துட்டு போங்க. நான் அதுக்குள்ள பையனுக்கு டெலிபோன் பண்ணி அலமாரியைக் காட்டச் சொல்றேன். இதுதாங்க அலமாரிச் சாவி. ஒரு பாட்டில் க்ளோரோஃபாம் எடுத்துக்கங்க. பாட்டில் மேல் சிவப்பா லேபில் இருக்கும். க்ளோரோஃபார்ம்னு எழுதி யிருக்கும். நான் இங்கேயே இருக்கேன். அவரைப் பார்த்துக் கறேன். நீங்க சீக்கிரம் போய் எடுத்திட்டு வந்துருங்க!''

மிக வேகமாக ஓட்டினேன்! பதினேந்து நிமிஷத்தில் ஒரு க்ளோரோஃபாரம் சீசாவுடன் திரும்பி வந்தேன். டாக்டர் அவசரமாக வந்து என்னேச் சந்தித்து, ''கொண்டு வந்திட்டீங்களா? குட், குட்! இப்ப தான் ஹரிஹரன்கிட்டே நான் சொல்லிகிட்டிருந்தேன். சீக்கிரம்! அவராலே அதிக

நேரம் அப்படிப் படுத்திருக்க முடியாது. நகர்ந்துருவார்னு பயமா இருக்கு,'' என்றார்.

இரண்டு கைகளாலும் பாட்டிலைப் பிடித்துக் கொண்டு அவர் பின் சென்றேன். ஹரி அப்படியேதான் கிடந்தான், முகம் வெளிறிப் போயிருந்தது. கண்கள் என்னை ஓரம் பார்த்தன. நான் அவனைப் பார்த்துப் புன்னகைத்து, கட்டை விரலை உயர்த்திக் காட்டினேன். அவன் கண்ணை மூடிக் கொண்டான். டாக்டர் சின்ஹா தரையில் அருகில் உட்கார்ந்தார். இன்ஜெக்ஷன் குத்தும்போது உபயோகித்த ரப்பர் குழாயை எடுத்துக் கொண்டார். காகிதத்தால் ஒரு புனல் செய்து கொண்டார். அதை ரப்பர் குழாயின் ஒரு முனையில் பொருத்தினார்.

மெதுவாக ஹரியின் வயிற்றுப் புறத்தில் போர்வையின் முனையைச் சன்னமாக சாமர்த்திய விரல்களால் தொட்டு இழுத்தார். மிக சன்னம்! அவர் விரல்களோ, போர்வையோ நகர்வது தெரியவில்லை...வெற்றி! போர்வைக்கு அடியில் ஒரு சின்ன இடைவெளி செய்து கொண்டு விட்டார். ரப்பர் குழாயை எடுத்து அதன் மறு முனையை அதனுள் சொருகி படுக்கையோடு படுக்கையாக அதைச் செலுத்தினார். ஒருசில இன்ச்சுகள் நகர்த்துவதற்கு எத்தனை நேரம்! குழாய் நகர்வதாகவே தெரிய வில்லை. அத்தனை மெள்ள; இருபது நிமிஷமா நாற்பது நிமிஷமா? குழாய் உள்ளே செல்வது என்னவோ தெரிந்தது. போர்வைக்கு வெளியே இருந்த பாகம் மெல்லக் குறைந்து கொண்டிருந்தது. ஆனால் பாம்பு எந்தவித சலனமும் உணர்ந்திருக்க முடியாது. டாக்டர் சின்ஹாவுக்கே வேர்த்து விட்டிருந்தது. நெற்றியில், மேல் உதட்டில் எல்லாம் வியர்வை முத்துக்கள். அவர் கைகள் மட்டும் நடுங்காமல் இருந்தன. கண்கள் எப்போதும் ஹரியின் வயிற்றுப் பகுதிப் போர்வையையே கவனித்துக் கொண்டிருந்தன.

நிமிராமல் கை நீட்டி என்னிடம் க்ளோரோபார்ம் கேட்டார். தான் கண்ணாடி மூடியைத் திருகித் திறந்து

சீசாவை அவர் கையில் பதிய வைத்தக் கொடுத்தேன். என்னைக் கிட்ட வரும்படி சொன்ஞர். "படுக்கை பூரா க்ளோரோஃபார்ம் வைத்து நனைக்கப் போகிறேன். ரொம்பச் சில்லென்று இருக்கும். அதற்குத் தயாரா இருக் கணும். உடம்பை நடுங்கக் கூடாது நகர்த்தக் கூடாது. அவன் கிட்டேசொல்லிடு," என்ருர்.

நான் ஹரிஹரனிடம் குனிந்து சொன்னேன்.

"ஆரம்பிக்கச் சொல்லேண்டா!" என்ருன்.

"ஆரம்பிக்கப் போருர். ரொம்பச் சில்லுனு இருக்கும்!"

"மை காட்! ஏதாவது பண்ணுங்க! சீக்கிரம்! செஞ்சு தொலைங்க." முதல் தடவையாக அவன் குரல் சற்று உயர்ந்தது. சின்ஹா சட்டென்று நிமிர்ந்து முறைத்தார். இரண்டு மூன்று செகண்ட்...மறுபடி தன் வேலையைத் துவக்கினுர். சின்ஹா பேப்பர் புனலில் ஒன்றிரண்டு சொட்டு க்ளோரோஃபார்ம் ஊற்றினுர் மெல்ல. அது ரப்பர் குழாய் வழியாக உள்ளே வடியும்வரை காத்திருந்து இன்னும் கொஞ்சம் ஊற்றினுர். காத்திருந்தார். ரூம் பூரா க்ளோரோஃபார்ம் வாசனை கும்மென்று பரவ எனக்குச் சின்ன வயசில் டான்சில்ஸ் ஆப்பரேஷன் ஞாபகம் வந்தது. வெண்மை உடை நர்ஸுகள், டாக்டர்கள், நீளமான வெள்ளை மேஜை... 'ஒண்ணு ரெண்டு எண்ணப்பா!' என்று யாரோ சொன்னது. மெலிதான வாந்தி உணர்ச்சி...

சின்ஹா இப்போது சீராகப் புனலில் ஊற்றிக் கொண் டிருக்கப் பேப்பர் புனலின்மேல் க்ளோரோஃபார்ம் ஆவி மெலிதாக நடனமாடியது. நினைத்து பாட்டிலில் மிச்ச அளவைப் பார்த்து இன்னும் கொஞ்சம் புனலில் ஊற்றி விட்டு என்னிடம் பாட்டிலைத் திரும்பக் கொடுத்து விட்டார். மெதுவாக் மெதுவாக ரப்பர் குழாயைப் போர்வைக்கு அடியிலிருந்து உருவி வெளியே எடுத்து விட்டார். நிமிர்ந்தார் நின்ருர்.

அந்தச் செயலின் ஆயாசம் டாக்டரின் குரலில் தெரிந்தது. களைத்திருந்தார். ''பதினைஞ்சு நிமிஷம் பார்க்கலாம். ஒருவித ஜாக்கிரதைக்குத்தான்!''

நான் ஹரியின் அருகில் சென்று, 15 நிமிஷம் ''காத்திருக்கப் போறம்டா. எதுக்கும் ஒரு பத்திரத்துக்குத்தான்! இப்பவே கூட அது மயங்கிப் போயிருக்கும்,'' என்றேன்.

''திறந்து பாரேன்! கடவுளே!'' என்று மறுபடி இரைச்சலாகப் பேசினான்.

சின்ஹா அவனை மிகக் கடுமையான கோபத்துடன் முறைத்தார். ஹரியின் வாய் ஓரம் மறுபடி துடிக்க ஆரம்பித்தது. நான் கைக் குட்டை எடுத்து அவன் ஈரமுகத்தைத் துடைத்து விட்டேன். நெற்றியைத் தடவிக் கொடுத்தேன். ''பொறுடா. இன்னும் கொஞ்சம் பொறு,'' என்றேன்.

காத்திருந்தோம். டாக்டரும் நானும் படுக்கையருகில் நின்றுகொண்டு. சின்ஹா வெளியில் மேகத்தையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருக்க அந்தப் பார்வையிலேயே சும்மா இரு என்று அதட்டல் இருந்தது. 'சும்மா இரு! இவ்வளவு தூரம் உயிர் விட்டோம்! இன்னும் கொஞ்சம் தான்...இந்தச் சமயத்தில் ஏதாவது செய்து எல்லாவற்றையும் கெடுத்து வைக்காதே!' என்ற அதட்டல். ஹரியின் வாயோரம் இன்னும் துடித்துக் கொண்டிருந்தது. வியர்வை. கண்ணை மூடுகிறான். திறக்கிறான். என்னைப் பார்க்கிறான். போர்வையைப் பார்க்கிறான். மேலே உத்திரத்தைப் பார்க்கிறான். மறுபடி என்னைப் பார்க்கிறான். சின்ஹாவை மட்டும் பார்க்கவே இல்லை. இருந்தும் சின்ஹா எப்படியோ அவனைக் கட்டிப் பிடித்து வைத்திருந்தவர் போலத் தோன்றியது. க்ளோரோஃபார்ம் வாசனை மூக்கைத் துளைத்தது. ஆனால் என்னால் அறையை விட்டு விலக முடியவில்லை. யாரோ ஒரு பெரிய பலூனை ஊதிக் கொண்டே இருப்பதுபோல் உணர்ந்தேன். பெரிசாகிப்

பெரிசாகி... வெடிக்கப் போகிறது...விட்டுச் செல்ல மனம் வரவில்லை.

கடைசியில் சின்ஹா திரும்பினர். தலையாட்டினர்... அவர் ரெடி!

"நீ படுக்கைக்கு அந்தப் பக்கம் போய் நில்லு. போர்வையின் ஒரு பக்கத்தைப் பிடிச்சுக்க. மெள்ள ரெண்டு பேரும் சேர்ந்து போர்வையை விலக்கலாம். ஆனு மெதுவா! மெல்ல ரொம்ப மெல்ல! அசங்காம! என்ன!"

"ஹரி, கொஞ்சம் அசையாம இரு," என்று சொல்லி விட்டுப் படுக்கையின் அந்தப் பக்கம் சென்றேன். சின்ஹா எனக்கு எதிரில் நிற்க இருவரும் போர்வையை மெதுவாக நீக்க ஆரம்பித்தோம். ஹரியின் மேல் படாமல், படுக்கையிலிருந்து சற்றுத் தள்ளி நின்று சற்று முன் பக்கம் குனிந்து உள்ளே ஏதாவது தெரிகிறதா என்று பார்க்க முயற்சி பண்ணி... க்ளோரோஃபார்ம் நெடி குமட்டியது. மூச்சை அடக்கிப் பார்த்தேன். அதிகம் அடக்க முடியாமல் போன போது லேசாக மூச்சு விட்டேன். நெடி!

இப்போது ஹரியின் மார்பு தெரிந்தது. அவன் அணிந்திருந்த பட்டை போட்ட சட்டையின் பட்டன்கள் ஒவ்வொன்ருகத் தெரிந்தன. பட்டன் பளபளவென்று இருந்தது— அப்புறம் அவன் சட்டை மேல் முடிச்சுப் போட்டு இறுக்கியிருந்த பைஜாமாவின் நாடா தெரிந்தது. அதிலும் பட்டன். பளபள பட்டன்! சீ, பட்டனைப் பற்றி யோசிக்க வேண்டிய சமயமா இது!

ஆனுல் அவன் வயிற்றின் மேல்!

பாம்பு எங்கே?

அவன் வயிற்றின் மேல் அந்தப் பைஜாமா பட்டனைத் தவிர வேறு எதுவும் இல்லை.

போர்வையைக் கொஞ்சம் வேகமாகவே விலக்கினேம்.

அவன் கால் தெரிந்தது. பாதங்கள் தெரிந்தன. போர்வை முழுவதும் விலகித் தரையில் விழுந்தது.

''நகராதே!'' என்றார் டாக்டர். ''நகராதே ஹரி!'' என்று சொல்லி ஹரியின் பக்கவாட்டில், கால்களுக்குக் கீழே எல்லாம் எட்டிப் பார்த்தார்.

''ஜாக்கிரதை! எங்கேயாவது ஒளிந்து கொண்டு இருக்கும். பைஜாமாவுக்குள் புகுந்து கொண்டிருக்கலாம். ஜாக்கிரதை!'' என்றார் டாக்டர்.

இதைக் கேட்டதும் ஹரி சட்டென்று தலையைத் தூக்கித் தன் காலைப் பார்த்தான். முதல் தடவை நகர்ந்திருக்கிறான். திடீர் என்று எழுந்தான். படுக்கை மேல் நின்றான். இரண்டு கால்களையும் உதறி உதறிப் பார்த்தான்.

பைஜாமாவுக்குள்ளிருந்து பாம்பு அவனைக் கடித்திருக்க வேண்டும் என்றுதான் நினைத்தோம். டாக்டர் தன் பெட்டியிலிருந்து கத்தியை எடுத்து விட்டார்.

ஹரி உதறுவதை நிறுத்தி விட்டான். படுக்கையைப் பார்த்தான். ''இல்லை'' என்று கத்தினான்.

சின்ஹா நிமிர்ந்தார். அலறிப் படுக்கையைப் பார்த்தார். அப்புறம் ஹரியைப் பார்த்தார். ஹரிக்கு ஒன்றும் இல்லை. எதுவும் கடிக்கவில்லை, அவனை. எதுவும் கடிக்கப் போவதில்லை, அவனை. அவன் இறந்து போக மாட்டான் எல்லாம் சரியாகி விட்டது...எல்லாம்...இருந்தும் மூவரும் பேஸ்தி அடித்தாற்போல் நின்றோம்.

''மிஸ்டர் ஹரி! நிஜமாவே அதை முதல்ல பார்த்தீங்களா?'' என்றார் டாக்டர். அவர் குரலில் சற்றுக் கேலி இருந்தது. ''இல்லை, கனவு ஏதாவது கண்டீங்களா?'' டாக்டரின் நெற்றியில் இன்னும் வியர்வை! கண்களில் அடிபட்ட தன்மை.

ஹரி படுக்கை மேல் நின்றுகொண்டு டாக்டர் சின்ஹாவை முறைத்தான்.

"நான் என்ன பொய் சொன்னேன்னு சொன்னீங் களா?" என்று இரைந்தான்.

"ஆமாம்."

"மை காட்! நான் பொய்யா சொல்றேன்! அடேய் டாக்டர் கிழவா கேளு! நான் சொன்னது பொய்யில்லே! பாம்பு வந்தது! என் மேலே ஊர்ந்தது! நான் பார்த் தேண்டா! பின்ன எதுக்கு ஊசி குத்திக்கறேன். எதுக்கு இத்தனை நேரம் அப்படியே அசங்காம கிடந்தேன்! எனக்கு என்ன பைத்தியமா? பைத்தியம்னு சொல்றே? பெங்காலிக் கிழவா, ஏய்!"

"ஷட் அப் ஹரி!" என்று இரைந்தேன். கெட்ட வார்த்தைகள் உபயோகிக்க ஆரம்பித்து விட்டான்.

டாக்டர் சின்ஹா அந்த அறையில் ஒருவரும் இல்லாத மாதிரி வெளியே வந்தார்.

"டாக்டர்! ரொம்பப் பிரமாதமா செயல்பட்டீங்க! நீங்க வந்ததுக்கு ரொம்ப ரொம்பத் தாங்க்ஸ்!" என்றேன்.

"உங்க ஃப்ரெண்டுக்கு...ரெஸ்ட் தேவை! அவர் பார்க்க வேண்டியது வேறே ஒரு டாக்டரை," என்று என்னைப் பார்க்காமல் காரில் ஏறி அதன் இன்ஜினைக் கிளப்பிப் புறப்பட்டு இருட்டில் மறைந்தார்.

'சுஜாதா'

(ரேவதி ரபீந்திரன் பேட்டி)

''சுஜாதா'' — பெயரில் மட்டும் அல்லாது, இவரின் கதையிலும் கவர்ச்சியுண்டு. இவரைப் பேட்டி காண வேண்டும் என்பது எனது நீண்டநாளைய கனவு. கனவை, நினைவாக்கியவர் ஓவியர் ஜெயராஜ், எங்களுக்கு எந்த விதமான சிரமத்தையும் வைக்காமல், தானே, எல்லா வற்றையும் முன்நின்று முடித்ததோடு, தன் வீட்டிலேயே பேட்டிக்கான ஏற்பாடுகளையும் செய்து கொடுத்த அவரின் அன்பு—உண்மையானது. பேட்டிக்காக, அதிக நேரம் ஒதுக்க வேண்டும் எனக் கேட்டபோது, ''½ மணி நேரத் திற்கு மேல் என்ன பேசப் போகிறேன்?'' என்று வேடிக்கை யாகக் கூறியவர், ஒரு மணி நேரத்திற்கும் மேல் பேசிக் கொண்டிருந்தார் நிதானமாக. Trainக்கு அவர் கிளம்ப, நேரமாகி விட்டதை உணர்ந்து, நாங்கள்தான் அவரிட மிருந்து விடுபட வேண்டியிருந்தது. நல்ல உயரம், முன் நெற்றியில், விழுந்த முடிக் கற்றைகளை விலக்கியபடி, எந்த வித பந்தாவுமின்றி, சாதாரணமாக அவர் உரையாடி யதைக் கேட்டபோது ''கதைகள் எழுதும் பிரபல எழுத்தாளர் இவர்தானா?'' என்று சந்தேகமே வந்து விட்டது. ஜெ... & சுஜாதா இருவருக்கும் பாவையின் மூலம் சக்தி சங்கத்தினரின் நன்றியைத்தெரிவித்துக் கொள்கிறேன்.

கேள்வி : ''சுஜாதா''ன்னு ஆரம்பத்திலேயே இந்தப் பெயரை வைத்து எழுத ஆரம்பித்து விட்டீர்களா?

பதில் : கல்யாணத்துக்கு முன்னாடி, S. ரங்கராஜன்ற பெயர்ல்ல ஒரு வருஷம் எழுதிக்கிட்டு இருந்தேன்,

கல்யாணத்துக்கு அப்புறம்தான் "சுஜாதா"ங்கிற பெயர்ல்ல எழுத ஆரம்பிச்சேன்.

கேள்வி: உங்களுடைய இளமைப் பருவத்தைப் பற்றிச் சொல்ல முடியுமா?

பதில்: நான் பிறந்தது மெட்ராஸ். படிப்பெல்லாம் ஸ்ரீரங்கத்தில். கிளாசில் I-st. வந்ததாகவோ, நிறைய மார்க் வாங்கியதாகவோ சரித்திரம் இல்ல. Nothing remarkable, பிரமாதமா ஒண்ணும் பண்ணல்ல. கிரிக்கெட் போன்ற விளையாட்டில்ல எல்லாம் ஒருத்தரும் இல்லேன்னுதான் என்னை சேத்திக்கிடுவாங்க. ஸ்ரீரங்கத்தில் S.S.L.C. முடிச்சிட்டு, திருச்சி ஜோஸப் காலேஜ்ல்ல B.Sc., படிச்சேன். அதுக்கப்பறம் எலெக்ட்ரானிக்ஸ் படிக்கிறதுக்கு மெட்ராஸ் வந்தேன். M. I. T.யில் படிச்சேன். அப்புறமா வேலை கிடைச்சி டெல்லிக்குப் போனேன்.

கேள்வி: டெல்லியில் இருக்கும்போதுதான் கதை எழுத ஆரம்பித்தீர்களா?

பதில்: டெல்லில்ல இருக்கும்போது அடிக்கடி, tourன்னு, 2 மாதம் 3 மாதம் அனுப்புவாங்க. ஏதாவது ஒரு deserted Aerodromeக்கு electronic equipment install பண்ண வேண்டியிருக்கும். அந்த வேலையா போகும் போது தங்குவதற்கு தனியா portion மாதிரி கொடுப் பாங்க. அப்ப நிறைய time கிடைக்கும். சினிமா பாக்கிறதுக்கு பதிலா படிப்பேன் அல்லது கதை எழுதுவேன். அதற்கு முன்பே, டெல்லியில் தெரிஞ்ச பையன் ஒரு சிறு கதை எழுதிக் கொடுத்தான்; அதை திருத்திக் கொடுத்தேன். அது அவன் பெயரில் பிரசுர மாச்சு. அதற்குப் பிறகு நானே எழுத ஆரம்பிச் சுட்டேன்.

கேள்வி: அப்பதான் உங்ககிட்ட திறமை இருக்கிறது வெளியே தெரிய ஆரம்பித்தது இல்லையா?

பதில் : இல்ல...திறமை இருக்காங்கிறது இப்பவே தெரிய மாட்டேங்கிது...(சிரிப்பு) நான் எழுத்தாளனுகி இந்த அளவுக்கு புகழ் பெறுவேன்னு அப்ப, நான் கனவில கூட நினைக்கல...

கேள்வி : உங்களின் முதல் கதை எப்ப எதில் பிரசுர மானது?

பதில் : முதல் கதை குமுதத்தில் பிரசுரமானது. ஆனு அதற்கு முன்பு, B Sc., படிக்கும் போது தெரியாத் தனமா ஒரு கதை எழுதினேன். ''சிவாஜி'' பத்திரிகை ஆபீஸ் அப்ப திருச்சி பெரியகடை வீதியில் இருந்தது. அதுதான் என்னோட real முதல் கதை. அதற்குப் பிறகு எழுதல. படிப்பு நிறைய இருந்தது. செயிண்ட் ஜோஸப் காலேஜில, ஜோஸப் சின்னப்பான்னு ஒரு லெக்சரர் இருந்தாரு. நான் B.Sc., படிக்கும்போது Air Book ஆக பிரிட்டிஷ் short stories, non detail-Text Book ஆக இருந்தது. அந்த short storiesஐ அவர் சொல்லிக் கொடுத்த விதம் ரொம்ப அருமையா இருந்தது. He was responsible for creating interest in me to write short stories. அது ஒரு அஸ்திவாரம் மாதிரி இருந்த துன்னு சொல்லலாம். Somerset Maugham Catherime Mansfield, மற்ற English authors எழுதிய short stories எல்லாம் interest ஆகப் படிக்க ஆரம்பித்தேன். '63ல் எழுத ஆரம்பிக்கும் முன்பு 53லிருந்து 63 வரை' படிச்சிக் கிட்டு இருந்தேன்.

கேள்வி : ''சிவாஜி'' பத்திரிகைக்கு எழுதிக் கொடுத்தது என்ன கதைன்னு சொல்ல முடியுமா?

பதில் : அது ஞாபகமில்லே. அந்த copy என்னிடமும் இல்லே; அவுங்களிடமும் இல்லே. அதைப்பற்றி அலே ஓசையில் ஒரு கட்டுரை கூட எழுதி இருந்தேன். அதில், என்னோட இந்த முதல் கதையை கண்டுபிடிச்சுக்

கொடுக்கிறவங்களுக்கு, என்னோட பொண்ணை கல்யாணம் பண்ணிக் கொடுத்து, பாதி சாம்ராஜ்யத்தையும் தர்ரேன்னு எழுதி இருந்தேன். கதையும் கிடைக்கல்ல...எனக்கு பொண்ணும் இல்ல...பாதி சாம்ராஜ்யமும் இல்ல...(சிரிப்பு)

கேள்வி : *உங்களுக்கு என்னென்ன மொழிகள் தெரியும்?*

பதில் : ஹிந்தி எழுதப் படிக்கத் தெரியும், English, கன்னடம் தெரியும், தமிழ் சுமாராத் தெரியும்.

கேள்வி : *ஆங்கிலத்தில் ஏன் நாவல் எழுதுவதில்லை?*

பதில் : Englishல்ல எழுதறதுக்கு, creative wordsன்னு சொல்வாங்க...ரொம்ப புலமை வேணும்...எழுதலாம் ஆனு...நாவல் எழுதற அளவுக்கு போறாது.

கேள்வி ; *ஜெ...படம் போட்டு வெளிவந்த உங்கள் கதை எது?*

பதில் : குமுதத்தில் "சுஜாதா"ன்னு பெயர் போட்டு வெளி வந்த முதல் கதைக்கு ஜெயராஜ் படம் போட்டாரு. அது என்ன கதைன்னு...ஒரு ஓட்டல்ல வந்து, எதிர்த்தாப்பில ஒரு பொண்ணு வைர நெக்லஸ் போட்டிருக்கா. அத பிளான் பண்ணி திருடணும்னு திட்டம் போடறான் ஒருவன். அந்த ஓட்டல்ல இருக்கிற மெயின் ஸ்விட்சை அணைச்சிட்டு கவரணும்னு நினைக்கிறான். அந்த ஹோட்டல் வந்து ஒரு தியேட்டரோட attached. அதனால இவன் வந்து ஸ்விட்சை off பண்ணியதும், தியேட்டர்ல உள்ள ஜெனரேட்டர் ஓட ஆரம்பிச்சிருது. உடனே அவனை பிடிச்சிடறாங்க. கதையின் பெயர் "என் எதிரில் ஒரு பெண்," S. ரங்கராஜன்ற பெயர்ல 5, 6 கதைகள் அதற்கு முன் எழுதி இருக்கேன். அதற்கு வந்து பாலு, ராமு இவங்கத்தான் படம் போட்டாங்க.

கேள்வி : *ஆரம்பத்தில் அனுப்பிய கதைகள் திரும்பி வந்திருக்கிறதா?*

பதில் : வந்தது. உடனே கிழிச்சிப் போட்ருவேன்.

கேள்வி : *ஆபீஸ்ல வேலையும் பாத்துக்கொண்டு, எழுதுவதற்கும் நேரம் கிடைக்குமா?*

பதில் : ஞாயிற்றுக் கிழமைகளில் எழுதுவேன். 63-ல் எழுத ஆரம்பித்து 17 வருஷமா எழுதறேன். இவ்வளவு வருஷம் எழுதிகிட்டு இருக்கிறதால, எழுதற அந்த பிராக்டீஸ் (Practice) இருக்கு பாருங்க; அதற்கு அதிக நேரம் எடுத்துக்கிறதல்ல. இப்ப ஒரு chapter இருக்கு; "நடுப்பகல் மரணம்னு" எழுதறேன். ஒரு chapter எழுத 2 மணி நேரம் ஆகுது. type அடிப்பேன். யோசிக்க ½ மணி நேரம் ஆகும். plot வந்து என்ன எழுதணுங்கிறது mindல்ல clear ஆக இருக்கும். அத எழுதிய உடனே மறந்திடுவேன். ஸ்விட்சை on பண்ற மாதிரி அடுத்த வாரம், அடுத்த chapterஐ எழுதும் போது, போன வார copyயில் கடைசி வரியை மட்டும் படிச்சுப் பார்ப்பேன். அப்படியே அது continue ஆகும். இடை இடையே சில மாற்றங்கள் பண்ணினாலும், கதையோட outline இல்லாம எழுதவே மாட்டேன்.

கேள்வி : *கதைகளை எல்லாம் கேட்டாதான் கொடுப்பீங்களா?*

பதில் : கதைகள் கேட்டுக்கிட்டே இருக்காங்க; கொடுத்துக்கிட்டே இருக்கேன். இந்த தேதில 1983 வரை கேட்ருக்காங்க.

கேள்வி : Computers Aeroplanes, சேரி, குடும்பக் கதைகள்' துப்பறியும் கதைகள் என்று வெரைட்டியாக எழுதுகிறீர்களே? அது எப்படி முடிகிறது?

பதில் ஒண்ணு—பழக்கத்தில் வர்றது. சாதாரணமா, நிகழ்ச்சியைப் பற்றி எழுதறதுக்கு முன்னாடி தெரிய லேன்னு, அதப்பற்றிய புத்தகங்களை லைப்ரரி போய் எடுத்துப் படிச்சிருவேன்.

கேள்வி : கவிதைகள் எழுதுகிறீர்களா?

பதில் : ஏதோ விளையாட்டுத்தனமா எழுதி இருக்கேன் மரபுக் கவிதைகள் எழுதுவதில் interest உண்டு. வரதட்சணைங்கிற தலைப்பில், தினமணிக்கதிர் வெண்பா போட்டியில் கூட எழுதி இருந்தேனே.

கேள்வி : கதை அளவுக்கு கவிதை எழுதவில்லையே... ஏன்?

பதில் : Improve பண்ணல்ல. Just அதையும் தொட்டுப் பார்க்கலாமேன்னுதான் எழுதினேன்.

கேள்வி : கதைகளுக்கு வாசகர்களிடமிருந்து நிறைய பாராட்டுக் கடிதங்கள் வரும்; ஆனா பத்திரிகை ஆசிரியர்கள் வந்து தனிப்பட்ட முறையில் பாராட்டுவ துண்டா?

பதில் : லெட்டர் எழுதுவாங்க; டெலிபோன்ல கூப்பிட்டு சொல்வாங்க சிலர். chapter நல்லா இருந்ததுன்னு "Great Chapter"ன்னு தந்தி அடிப்பாங்க. எனக்கு ஊக்கமா இருக்கும் எழுதறதுக்கு.

கேள்வி : சில எழுத்தாளர்களின் "ஒருவரி" ஒரு பாரா வாக அமையும்; ஆனா உங்களின் எல்லா வரிகளுமே ரொம்பவும் Short ஆக இருக்கும். அது எப்படீன்னு விவரம் சொல்ல முடியுமா?

பதில் : அதற்கு சில டெக்னிக் இருக்குது. ஒரு ஆக்ஷன் fastஆ, போகும்போது short sentences, கொண்டு வரலாம். அதே சமயத்தில் slow ஆக்ஷனின் போது you must have noticed, long sentences, use பண்ணு

வேன். அவன் அங்கே போனுன்னு எழுதி இருப்பேன். அதை திருப்பிப் பார்க்கும் போது ''அங்கே போனன்'' றதிலேயே ஒரு 'அவன்' இருக்கிறதால, ''அவனே'' எழுதிடுவேன். ஒரு பேட்டில கூட கேட்டாங்க. ''இந்த மாதிரி அம்சங்கள் இந்தப் படத்தில் இருக்கின்றனவா?''ன்னு. ''கின்றன''ன்னு பதில் சொன்னேன். ஆனு இதையே திருப்பி பண்ணக் கூடாது. எப்பவாது use பண்ணலாம். ''நைலான் கயிறு'' கதையிலிருந்து அந்த மாதிரி எழுத ஆரம்பிச்சேன். அது ஒரு gimmick in writing.

கேள்வி : *நீங்கள் எழுதிய கதைகள் பற்றி கேட்டா ஞாபகம் இருக்குமா?*

பதில் : சிறு கதைகள் கொஞ்சம் மறந்து போயிடும். வாசகர்கள் என்னவிட அதிகமா ஞாபகம் வச்சிருப்பாங்க. ஆனு, கேள்வி கேட்கும்போது strike ஆகிடும் தன்னுல்.

கேள்வி : *எத்தனை சிறு கதைகள், நாவல்கள் எழுதி இருக்கிறீர்கள்?*

பதில் : 120 சிறு கதைகள். 25, 30 நாவல்கள் இருக்கும்.

கேள்வி : *ரேடியோவில் கதை ஏதாவது கேட்கும் போது, அதில் ஏதாவது ஒரு வரி inspire ஆகலாம். அல்லது ஒரு புத்தகத்தைப் படிக்கும்போது அதில் ஏதாவது ஒரு வரி inspire ஆகலாம். ஏதாவது ஒரு பழைய புத்தகத்தைப் படிக்கும்போது அதில் ஒரு வரியில் கூட உங்களுக்குக் கதையின் கரு கிடைக்கலாம். அது எப்படீன்னு கொஞ்சம் விளக்கமா சொல்ல முடியுமா?*

பதில் : என்னைப் பொருத்தவரை, எழுத்தாளர்களுக்கு ரொம்பத் தேவையானது நல்லா கவனிக்கணும். இப்ப உங்களோட பேசிக்கிட்டு இருக்கும்போதே, உங்களை எல்லாம்விட நான் கொஞ்சம் ஜாஸ்தி கவனிப்பேன்

சில observations இருக்கும். For example; "பார்வை"ன்னும் ஒரு கதை எழுதினேன். அதற்கான கரு எப்படி உருவாச்சினு, ஒரு டாக்டருக்காக வெயிட் பண்ணிக்கிட்டு இருந்தேன். அப்ப ஒரு மெடிக்கல் மேகஸின்ல உள்ள ஒரு வரியைப் பார்த்தேன். "அப்பா பண்ணிய தப்பினுல் குழந்த வந்து Bllnd ஆ பிறந்திருச்சி சில complicatoins னுல." இந்த விஷயத்த அப்படியே மனசில போட்டு வச்சிடவேண்டியது. அப்புறம் ஒரு நாள் பிருந்தாவன் எக்ஸ்பிரஸில் போயிட்டு இருக்கும்போது பக்கத்தில் ஒரு Blind man ஒருவன் வந்து உட்கார்றுன். அதப் பார்க்கும்போது இரண்டும் Connect ஆகும். எத்தனையோ தரம் அந்த ரயில்ல போகிறேம். எத்தனையோ மனிதர்களைச் சந்திக்கிறேம். அது எல்லாம் ஒண்ணு வரும் அந்த சமயத்தில். அந்த மனிதன் நல்லா படிச்சிருக்கான். "படிச்சதே தப்பா போயிருச்சி. படிச்ச பிறகு தான் கேள்வி எல்லாம் கேட்க ஆரம்பிச்சிட்டேன் நான் ஏன் blind ஆ பிறந்தேன்னு?" கேள்விக்குப் பதில் எனக்கு கிடைச்சிருச்சின்னு—கடைசியில் அவன் அதிர்ச்சியோட சொல்வான். பேசாமா படிக்காமலே இருந்திருக்கலாம். இந்தக் கேள்விய வச்சிக்கிட்டு நான் என்ன பண்ணப் போறேன்னு, அவன் வருத்தப்படற மாதிரி கதையை முடிச்சிருந்தேன்.

இன்னொரு சம்பவம்: ஒரு மெக்கானிக்குக்காக வெயிட் பண்ணிக்கிட்டு இருக்கும்போது, எதிரே ஒரு ஆக்ஸிடென்ட் பார்த்தேன். ஒரு ஆள் வந்து விழுந்தான். ரோட்ல அரிசி சிந்திக்கிடக்கு. அத அப்படியே describe பண்ணினேன். எவ்வளவோ ஆக்ஸிடென்ட் பார்க்கிறேம். அது வந்து கதை இல்ல. அரிசி விழுந்து கிடக்கு; அத வந்து ஒரு சின்னப் பையன் பொறுக்கிறுன் பாருங்க. அதில வந்து இந்தியாவின் ஏழ்மையைப் பத்தி எவ்வளவோ Comments இருக்கு.

கேள்வி: அந்த ஆக்ஸிடென்ட் பற்றிய storyயில் கூட "நான் கூட உதவி செய்ய முடியலே"ன்னு எழுதி இருந்தீங்க?

பதில்: ஆமா...help பண்ணனும்னு நினைச்சேன். போலீஸ் வந்து "கோர்ட்டுக்கு இழுப்பாங்க. நீங்க ஏன் இதில மாட்டிக்கணும்; வேடிக்க பாத்துட்டு போங்கன்னு" சொன்னாங்க. இந்த விஷயத்த வந்து, நான் சீர்திருத்தத்திற்காகவோ, பிரச்சாரமாகவோ எழுதல. அந்த நிகழ்ச்சியின் முடிவை readers intellegenceக்காக விட்டுட்டேன்.

கேள்வி: துப்பறியும் நாவலில் எல்லாம் போலீஸ், கோர்ட் பற்றி எல்லாம் எழுதுறீங்க; அதை எப்படி தெரிஞ்சிக்கிறீங்க?

பதில்: எல்லா புத்தகமும் படிப்பேன், Academic interestக்காக இதை எல்லாம் study பண்ணி வைத்துக்கொள்வேன். சந்தேகமிருந்தால் சம்பந்தப்பட்டவர்களிடம் refer பண்ணிக்குவேன்.

கேள்வி: நைட்ல படுத்தா கதை ஞாபகம்தானே வரும்?

பதில்: இல்ல...நல்லா தூங்குவேன் (சிரிப்பு) எழுப்ப எழுப்ப தூங்குவேன்.

கேள்வி: படிக்கறீங்க; வேலையும் பார்த்துக்கொண்டு கதையும் எழுதுறீங்க. உங்களுக்கு நேரம் சரியாக இருக்கும். சில நேரங்களில், சிலவற்றை நீங்க செய்யணும்னு உங்க மனைவி எதிர்பார்ப்பாங்க இல்லையா? அதை செய்ய முடியாம போகும்போது, உங்க மனைவி கோபித்துக் கொள்வார்களா?

பதில்: அந்த நிலைமைக்கு இதுவரை வல்லே. ½ மணி கிடைச்சா டைப் அடிப்பேன். எங்காவது கூப்பிட்டா

அப்படியே நிறுத்திட்டு போயிடுவேன். பசங்க கூட pop musicக்க போட்டுட்டு, பாட்டு கேட்பாங்க. தடால் தடால்ன்னு சத்தம் கேட்கும். அப்ப கூட பேசாம டைப் அடிச்சிக்கிட்டு இருப்பேன்.

கேள்வி : கதை எழுதியவுடன் மனைவியிடம் காண்பிப்பீர்களா?

பதில் : சில effects வர்றதுக்காக, சில நேரம் காண்பிப்பேன். பொதுவா, பிரசுரமான பின்தான் படிக்கிறதுண்டு.

கேள்வி : பொதுவா, மனைவி வந்து, வீட்டுக்காரன் செய்ற வேலைய கிள்ளுக்கீரையா நினைப்பாங்க...ஆமா என்ன பெரிய வேலைன்னு? உங்க மனைவி சுஜாதா உங்க கதைகளைப்பற்றி அப்படி ஏதும் சொல்வாங்களா?

பதில் : அப்படி ஒண்ணும் சொல்லமாட்டா...உதாரணமா "எப்படியும் வாழலாம்னு" ஒரு கதை எழுதினேன் பாருங்க. அந்த கதையப் படிச்சிட்டு "எங்க பாத்தீங்க? எப்ப பாத்தீங்கன்னு கேட்டா?" Typical doubt. அந்த விஷயத்தில் பொய் சொல்ல வேண்டியதில்ல...பொய் சொன்னா ரொம்ப ஞாபகம் வச்சிக்கிட வேண்டியிருக்கும். (சிரிப்பு).

கேள்வி 21—6—81 இதயம் பேசுகிறது இதழில் வெளியான "எப்படியும் வாழலாம்"ங்கிற கதையில் தொடரும் போட்ட இடம் நல்ல நகைச்சுவையுடன் இருந்தது. அந்த மாதிரி நகைச்சுவை எல்லாம் எப்படி எழுதுவீர்கள்?

பதில் : எழுதும் போதே வந்திரும். அது வந்து I saw a raid. அத வச்சிதான் நான் கதை எழுதினேன். பொதுவா, எல்லா கதையில வர்ற காரெக்டரும், நான் சந்திச்சவங்கதான். வேற வேற இடத்தில சந்திச்சவங்க ஒரே கதையில வருவாங்க. அதில ஜெ...

நல்லா படம் போட்டிருந்தாரு. அவர் போட்ட அந்த "பொட்டிலேயே", அந்தப் பெண்ணோட காரெக்டரை காட்டிட்டாரு. பொட்டக் கொஞ்சம் பெரிசா போட்டுட்டாரு. அதிலேயே அந்தக் காரெக்டர காட்டிட்டாரு கம்ளீட்டா. நான் சொல்றேன். நான் போனதைவிட ஜெயராஜ்தான் போயிட்டு வந்திருக்காரு (சிரிப்பு) படத்தில, அந்தப் பொண்ண, ரொம்ப பக்கத்தில உட்கார்த்தி வச்சிட்டாரு. அந்த stageல்ல எனக்கே கொஞ்சம் பயமாயிருந்தது.

கேள்வி : ரெய்டு (raid) பற்றி சொல்லுங்க...

பதில் : நேர்ல பாக்கிறதுக்கும், எழுதறதுக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்குன்னு அப்பதான் தெரிஞ்சுது. போலீஸோடு நான் போகும்போது, Indian Express லிருந்து ஒரு சிறு வயசுப்பெண்—அதும் ஒரு ரிப்போர்ட்டர்; எல்லாப் பெண்களேயும் interview பண்றதுக்காக கூட வந்தது. நாங்க போகும்போது, அவங்களுக்கும் last minuteலே information கிடைச்சிருக்கு. அதனால, எல்லாம் விழுந்தடிச்சி ஓடறான். நேரே அப்படியே ஸ்டேஷனிலிருந்து வந்திருக்கான். அவுங்க ஓடும்போது அப்படியே லக்கேஜை எல்லாம் விட்டுட்டு, ஒரு கால் செருப்பைக் கூட விட்டுட்டு ஓடறான். யாருமே இல்லே. அந்தப் பொண்ணுங்க எல்லாம் கூரை மேல ஏறிக் குதிச்சி விழுந்தடிச்சி ஓடுது. அரெஸ்ட் பண்றதால அவங்களுக்கு ஒண்ணும் இல்ல. 3 நாள்ல்ல வெளியே வந்திடலாம். But 3 நாள், அவுங்க வருமானம் போயிடுது, அதனால குதிச்சி கால்ல அடி பட்டாலும் நொண்டி, நொண்டி ஓடறுங்க. what a pitiful sight. அவங்க இருந்த இடத்த Open பண்ணினங்க பாருங்க, ஆஸ்பத்திரி மாதிரி படுக்கைங்க. ஆஸ்பத்திரியில் உள்ள ஜெனரல் வார்டு மாதிரி வரிசையா படுக்கைகள். No privacy. Empty beds. No girls. பெண்கள் யாருமில்ல..., அவங்களுக்கு Secret walls

எல்லாம் இருக்கு, அதத் தொறந்தா, எல்லா பெண் களும் உள்ள இருந்து வர்றாங்க. சம்பந்தமே இல்லாத மாதிரி இருக்கு. பார்த்தவுடனே முதல்ல, வயத்ல ஒரு பரிதாப உணர்ச்சிதான் உண்டாகுது. They are very young. Teenage. 16, 17 வயசுதான். அப்புறம் அந்தப் பொண்களோட லக்கேஜை எல்லாம் உடைச்சிக் காட்டினாங்க. சினிமா எக்ஸ்பிரஸ் இருக்கு; குமுதம் இருக்கு...இந்தப் பொண்ணு நம்ம எழுதறத எல்லாம் கூட படிச்சிக்கிட்டு இருக்கா...

"I Want an interview"ன்னு அந்தப் பெண் ரிப் போர்ட்டர் கேட்டாங்க. அவங்க இங்கிலீஷில் கேள்வி கேட்டாங்க; அந்தப் பொண்களுக்கு இங்கிலீஷ், கன்னடம், தமிழ் ஒன்றுமே தெரியல. தெலுங்கு மட்டும் தெரியுது. ரிப்போர்ட்டருக்கு தெலுங்கு தெரி யாது. அவுங்க பேசற மொழி இவங்களுக்கு புரியல்ல. ஆனா, அவுங்க தொழிலுக்கு பாஷை தேவையில்லேன்னு நினைக்கிறேன் (சிரிப்பு).

இன்னொரு சம்பவம் ஒரு பெண் சப் இன்ஸ் பெக்டர்; very courageous girl. திருப்பி, திருப்பி, ஒருத்தி வந்து மாட்டிக்கிறான்னு சொல்லி, ஒரு நாள்; அவள் தலைமயிரை வெட்டிவிட்டுட்டாங்க. கம்ளீட் டாக மொட்டை அடிச்சிட்டாங்க. "உனக்கு முடி இல்லாததால கோரமா இருக்கு; உன்னை ஒருத்தரும் பார்க்க மாட்டாங்க; இனிமே இந்தத் தொழிலுக்கு போவாதே" ன்னு சொல்லி அனுப்பிட்டாங்க. அந்தப் பொண்ணு வந்து உடனே சப் இன்ஸ்பெக்டர் பெண் மேலே கேஸ் போட்டு. அவளை transfer பண்ணிட்டா. அவுங்களுக்குன்னு தனி லாயர் இருக்காங்க.

கேள்வி: பொதுவாக, சில எழுத்தாளர்களின் கதைகளில், தவிர்க்கமுடியாமல், திருப்பி திருப்பி சில வார்த்தைகள் வரும். உங்களுடையதில் அப்படி வருவதில்லையே?

பதில் : வாஸ்தவமா, நான் அதை முடிஞ்சவரை avoid பண்றேன்.

கேள்வி : உங்களுக்குப் பிடித்தமான நிறம்?

பதில் : Blue.

கேள்வி : உங்கள் கதைகளில் அதிகப் பாராட்டுதல்களைப் பெற்றது எது?

பதில் : காகிதச் சங்கிலிகள்.

கேள்வி : கதைகளில் ''கணேஷை'' அறிமுகப்படுத்திவிட்டு நீங்கள் பெங்களூர் வந்தப்பதான் ''வஸந்தை'' அறிமுகப்படுத்தினீங்களா?

பதில் : கணேஷ் வந்து ''நைலான் கயிறு''ல்ல வந்தான் '68ல்ல. வஸந்த் வந்து ''பிரியா''லதான் அறிமுகமானது. கணேஷ் முதல்ல ''Solo''வா இருந்தான். ஆனா கதை எழுதறபோது, Structureல்ல கஷ்டமா இருந்தது. கணேஷ் வந்து மனசில நினைச்சிக்கிட்டு இருந்ததை சொல்ல Counterpoint character தேவையா இருந்தது. கணேஷ் வந்து matured, வஸந்த் immatured-childish ஆ இருக்கான். கூட்டங்களுக்கெல்லாம் போனா ''வஸந்த்த'' ஏன் அழைச்சிட்டு வரல்லேன்னு கேக்கறுங்க. பஸ்ல பார்த்தேன்னு... சொல்றுங்க. பெண்கள் நிறையப் பேர் வஸந்துக்கு கல்யாணம் பண்ணிவைக்காதீங்கன்னு எழுதறுங்க. psychologicalஆ அது ரொம்ப interest ஆ இருந்தது. கல்யாணத்தை கலைச்சிடுங்க; வேண்டான்னு சொல்றுங்க, They feel they will lose something charming. அது மட்டுமல்ல... one reader sent a telegram ''நான் அவனுக்கு வந்து என் bloodஐ கொடுக்க தயாரா இருக்கேன்னு''. They believe that Vasanth exists எல்லோருக்கும் அவன் character பிடித்து இருக்கு. அந்த மாதிரி இருக்க ஆசைப்படறுங்க.

கேள்வி : Aeroplanes பற்றி ரொம்ப detail ஆக எழுதுறீங்க; கனவு தொழிற்சாலை almost research material மாதிரி. இப்ப ஏதாவது அந்த மாதிரி work பண்ணிக்கிட்டு இருக்கீங்களா?

பதில் : Modern trendல் political sideல் ஏதாவது எழுதலாமான்னு பார்க்கிறேன்.

கேள்வி : "கறுப்பு சிகப்பு, வெளுப்பு" நின்று போனதில் எங்களுக்கெல்லாம் ஒரே வருத்தம். அதை வேறு வழியில் வெளியிட முடியாதா?

பதில் ; இல்ல .. அது தேவையில்ல... நான் யாரையும் புண் படுத்த விரும்பல. ஒரே வருத்தம் என்னென்னு விதி... அது வந்து "தமிழக நாடார் வரலாறு"ன்னு ஒரு புத்தகம் வாங்கினேன் It is a doctrate thesis by an American professor, who came here and spent 5 years on this subject. 100 வருடங்களுக்கு முன் இருந்த பழக்க வழக்கங்கள் எல்லாம் facts and figures உடன் record பண்ணியிருக்கிறார். கேரளாவில் உள்ள நாயர் வந்து 25 அடி தள்ளி நில்லுன்னு சொல்வாங்களாம்; செருப்பு போடக் கூடாதுன்னு சொல்வாங்களாம். இதப் படிச்ச பிறகுதான் அந்தக்கதையை எழுதினேன். அதில் "மாடன்" என்கிற காரெக்டர், முதலில் சாதாரணமாக இருந்து, பின் எஜமான விசுவாசத்தால், உயர்ந்த நிலைக்கு உயர்த்தி, ஒரு ஹீரோ அளவுக்கு வருவதாக அமைச்சிருந்தேன். ஆனால் அந்தக் கட்டம் வருமுன்பே பலத்த எதிர்ப்பு வந்தது. குறிப்பிட்ட ஒரு caste பற்றி எழுதுவதாக நினைத்து objection வந்தது. ஆனா எந்த ஒரு குறிப்பிட்ட ஒரு சமுதாயத்தையும் குறைவாக எழுதுவது என் நோக்கமில்ல. எனக்கு கீழ work பண்ற, கம்ப்யூட்டர்ல வேலை பார்க்கிற 4, 5 பேர் நாடார் கம்யூனிட்டி. அவுங்க வந்து இதப் படிச்சிட்டு, "இதில எந்தப் பாயிண்ட்ட ஜனங்க object பண்றாங்

கன்னு'' கேட்டாங்க. நான் வந்து ''அதில்ல...you are all educated people. உங்க view pointயே வேற. கதையில வர்ற சமுதாயத்தினருக்கு மனவருத்தம் ஏற்படற மாதிரி எழுத விரும்பலே'' ன்னு சொல்லிட்டேன்.

கேள்வி : அப்ப நீங்க படிச்சி, எழுதியதெல்லாம் Waste இல்லையா?

பதில் : இல்ல...அத ''ரத்தம் ஒரே நிறத்திற்''காகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறேன்.

கேள்வி : கம்ப்யூட்டர் (computer) பற்றி ''மயனி''ல் எழுதினீர்களே; அதை எழுதுவதற்கு முன் வாசகர்கள் இதைப் புரிந்துகொண்டு ஏற்றுக் கொள்வார்களா என்ற தயக்கம் இருந்ததா?

பதில் : தயக்கம் முதல்ல இருந்தது. கம்ப்யூட்டர் பற்றி எழுதும் போது 5-வது 6-வது chapterல் ஒரு ''க்விஸ்'' ஒன்னு போட்டிருந்தேன். அதில வந்து 600, 700 பேர் answer பண்ணி இருந்தாங்க. அதில ஏழு பேர் சரியா answer பண்ணி இருந்தாங்க. போலீஸ் கான்ஸ்டேபிள், விவசாயி, சாக்கு தைப்பவர், சந்திரிகா சோப் விற்பவர்ன்னு... அவங்க எல்லாம் எழுதினது ரொம்ப ஆச்சரியமா இருந்தது.

கேள்வி : உங்க குடும்பம் பற்றி?

பதில் : 2 Boys... பெயர் ரங்கபிரசாத், + 2 படிக்கிறான். அடுத்தவன் பெயர் கேசவன்... 10th std படிக்கிறான். ஸ்கூல்ல தமிழ் கிடையாது. கன்னடம்தான். தமிழ் அவ்வளா தெரியாது; ஆன பேசுறது தமிழ்தான்.

நன்றி சுஜாதா...

ரேவதி ரபீந்திரன்.

"அடிக்குப் பயந்தே தமிழ் படித்தேன்!"

1

எழுத்துங்கறது ஒரு கலை. இந்தக் கலை எல்லோருக்கும் கை வந்துடறதில்லை. சிலர் ஸ்போர்ட்ல இன்ட்ரஸ்ட்டா இருப்பாங்க. சிலர் பேசறதுல, சிலர் நடிக்கிறதுல, நடனத்துல, கைத்தொழில்ல. இப்படி ஒவ்வொரு துறையிலும் சிறப்பாச் செய்யறவங்க இருக்காங்க.

எழுத்தைப் பொறுத்தவரை 'சாதாரணமா எல்லோராலயும் எழுத முடியாது. அதுக்குன்னே பொறந்து வந்திருக்கணு'ம்பாங்க. இரத்தத்தோட ஊறியிருக்கணும். பரம்பரையா எழுதறவங்களுக்குத் தான் எழுதவரும்னு இன்னும் சிலர் சொல்வாங்க.

"நீ என்ன பெரிய இவன்? ஒன்னோட்டம் டயம் கிடைச்சா நானும் எழுதுவேனுக்கும்" என்பார்கள் வேறு சிலர்.

என்னைக் கேட்டா, எழுத்தாளன் என்பவன் பெரிய 'இவன்' இல்லைதான். ஆனா அதுக்குன்னு ஆர்வம், திறமை, சாதுர்யம் எல்லாம் இருக்கறவங்கதான் எழுத முடியும்னு நினைக்கிறேன்.

இந்த திறமை தானா வந்துடறதில்லை. நாமா வளர்த்துக்கறதுதான்.

என்னையே எடுத்துக்குங்க, நான் எழுத வந்ததே ஆக்ஸிடெண்டாதான். எனக்கு ஆரம்ப காலத்துல எழுதறதுல அவ்வளவு ஆர்வம் இருந்ததில்லை. படிக்கும்போதுகூடப் பாடமா இருந்த சில சிறுகதைகளை ரசிச்சுப் படிச்சு, நாமும்

அதுபோல எழுதணும்னு நினைச்சிருக்கேன். ஆனு எழுதின தில்லே.

சொல்லப் போனு, நான் தமிழ் படிச்சதே சமஸ்கிருதத் தையும், அந்த வாத்தியாரின் அடியையும் கண்டு பயந்து தான்!

எனக்கு இருபத்து நாலு வயசுன்னு நினைக்கிறேன். படிச்சு முடிச்சுட்டு வேலேதேடிட்டு இருந்த சமயம். அப்போ ஒரு சமயம் டில்லியில் இருந்தேன். ரூம்மேட் ஒருத்தன் ஒரு சிறுகதை எழுதிவந்து காட்டினுன். திருத்தித் தரச் சொன்னுன்.

அதைத் திருத்திச் சரிபண்ண முடியாதுபோல இருந்தது! சரின்னு நானே அதை எழுதிக் கொடுத்தேன். அனுப்பினுன். ஆச்சரியப்படும்படி அது 'குமுதம்' பத்திரி கையிலே வந்துடுச்சு. அதுக்குச் சன்மானம்னு சொல்லி இருபத்தஞ்சு ரூபாய்க்கு செக் அனுப்பியிருந்தாங்க!

அதை எல்லோரிடமும் காட்டி, தான் எழுதின கதைக்கு இருபத்தஞ்சு ரூபா சன்மானம் வந்திருக்கிறதென்று சொல்லிப் பெருமைப்பட்டான் — பெருமைப்படுத்தப் பட்டான்! என்னைப்பற்றியே குறிப்பிடலே. பெரிய துரோகம் பண்ணிட்டான். உடனே எனக்கு வேகம் வந்தது. அந்த வேகத்திலேயே எழுதித் தள்ளினேன். ஆரம்பத்துல பத்திரிகைகளும் வேகமாகவே அதையெல்லாம் தள்ளி விட்டுட்டாங்க. அப்புறமா படிப்படியாத்தான் பிரசுர மாச்சு.

சரி, நம்மிடமும் ஏதோ விஷயம் இருக்குன்னு தொடர்ந்து எழுத ஆரம்பிச்சேன்; எழுதறேன்.

சமீபத்துல சேலத்துல ஒரு மீட்டிங் போயிருந்தேன்' முடியறதுக்கு நடுராத்திரி ஆயிடுச்சு. ஒரு குயர் நோட்டு முழுவதும் கவிதை எழுதி வந்து காண்பித்தார் ஒருவர்,

அப்போதே எல்லாவற்றையும் படித்துப் பார்க்கச் சொன்னார். வேறே வழி இல்லாம, தப்பிக்க முடியாம கொட்டாவியோட படிச்சுப் பார்த்தேன்.

எல்லாமே நல்ல கவிதைகள். எதுக்குச் சொல்ல வரேன்னா திறமை மேல் மட்டத்தில் மட்டுந்தான் இருக்குங் கிறதில்லே. அடி மட்டத்திலேயும் இருக்கு. எழுதறதை நோட்டுல எழுதி மூடி வைச்சிருந்தா போதாது. அதைச் சரியா வெளிப்படுத்தணும்.

எழுதற ஒவ்வொரு விஷயத்தையும் எளிமையா, அதே சமயத்துல சுவையா எழுதணும். படிக்கிறவங்க அதோட ஒன்றிப் போகணும்.

நாம எழுதற விஷயம் படிக்கிறவங்க அனுபவத்தோட ஐக்கியமாப் போகணும். அப்பதான் எழுத்தும் வெற்றி பெறுது. எழுத்தாளனும் வெற்றி பெறுகிறான். வீணா நாமும் குழம்பி, வாசகர்களையும் குழப்பறதுல அர்த்தமே இல்லே.

ஒரு சமயம், பெங்களூருக்கு என் வீட்டிற்கு ஒருத்தர் வந்திருந்தார். காலேஜில் படிக்கிறாராம். அனுப்பின கதைகள் எல்லாம் திரும்பி வந்துடுச்சு, இதைப் படிச்சுப் பாருங்கன்னு சொல்லி இருபத்தைஞ்சு சிறுகதைகளைக் கொடுத்தார்.

"என் கதைகள்ளே என்ன குறை இருக்குன்னே தெரியலே; ரொம்ப வருத்தமா இருக்கு சார். ஒண்ணுமே ஓடலே. தற்கொலை கூடப் பண்ணிக்கலாம்னு இருக்கு"ன்னு சொல்லி ஓவென்று அழுதே விட்டார்.

ஏன் மனைவியின் பெயரில் எழுதுகிறேன்?

2

அவைகளை வாங்கிப் பார்த்தேன். காதல், ஹியூமர், சஸ்பென்ஸ் என்று பலவிதமாகவும் எழுதியிருந்தார். ஆனால் சில நேச்சுரல் விஷயங்களை விட்டிருந்தார். ''எந்தக் காலேஜில் படிக்கிறீர்கள்?'' என்றேன். சொன்னார்.

''காலேஜ் நுழையும் வழியில் என்ன இருக்கிறது?''

கொஞ்ச நேரம் விழித்தார். ''என்ன ஒரு பெரிய மரம்.''

''என்ன மரம்?''

''ஏதோ ஒரு மரம். சரியாத் தெரியல?''

''அதுல பூ இருக்கா, காய் இருக்கா?''

''அதெல்லாம் கவனிக்கல சார்!''

''நீங்கள் தினம் புழங்கற இடம். அங்கே என்ன இருக்குன்னு தெரிஞ்சுக்கற ஆர்வம் உங்களுக்கு இல்ல. தெரிஞ்சுக்க முயற்சியும் செய்யலே. அப்புறம் எப்படி எழுத்துல வெற்றி பெற முடியும் உங்களால?'' என்றேன்.

காலேஜ் காதலைப் பற்றி எழுதுகிறவர், அதைப் பற்றி வர்ணிக்க வேண்டாமா? சூழ்நிலையை விளக்க வேண்டாமா?

எழுத்தாளனோட பார்வை எப்போதும் வித்தியாசமாகவே இருக்கணும். பார்க்கிற ஒவ்வொரு பொருளையும், நிகழ்ச்சியையும் அப்படியே கற்பனையில வர்ணிக்கப் பார்க்கணும்.

உதாரணத்திற்குத் தெருவுல ஒரு காட்சி நடக்குது.

பெரிய யானை ஒண்ணு நிற்கிறது. அதைச் சின்ன மனிதன் ஒருவன் அடிக்கிறான். அதுவும் பயப்படுது. அவன் சொல்படி நடக்குது. இதைப் பார்க்கிறபோது என்ன தோன்றும் நமக்கு?

இதுல பெரிசா என்ன இருக்கும்பாங்க?

அதைப் பார்த்தா, எனக்கு என்ன தோணும் தெரியுமா?

'பெரிய யானைதான் மக்கள். பாகன்தான் அரசியல் வாதி. யானைங்கிற மக்களைப் பாகன்கிற அரசியல்வாதி ஆட்டிப் படைக்கிறான். யானை நினைச்சாப் பாகனைத் தூக்கி எறிஞ்சுடலாம். அதேபோல மக்கள் நினைச்சாலும் அரசியல் வாதியைத் தூக்கி எறிஞ்சுடலாம். ஆனா பயந்து பயந்து யானையும் அப்படிச் செய்யறதில்லை. மக்களும் செய்யற தில்லை.' இப்படித்தான் நான் கம்பேர் செய்வேன்.

கதைங்கறதே பொதுவா அனுபவம்தான். அனுபவத்தை அடிப்படையா வெச்சுத்தான் கதையே அமையுது. அதுக்காக 'கொலைக் கதைகளெல்லாம் எழுத றீங்களே, அதுவும் அப்படித்தானா?'ன்னு கேக்கக் கூடாது! அது வேற விஷயம்.

ஒவ்வொருவரும் அவுங்கவுங்க இடத்துல நடக்கிற, பார்க்கிற விஷயங்களை வைத்து அழகாய் எழுதலாம். ஊருக்கு ஊர், மாவட்டத்திற்கு மாவட்டம், மாநிலத்திற்கு மாநிலம், பண்பாடு, பழக்க வழக்கம் எல்லாமே வித்தியாசப் படும். அதையெல்லாம் வித்தியாசமா எழுதலாம்.

எழுதற கதை எல்லாம் மெட்ராஸ், பாம்பே, பெங்களூர்ன்னுதான் எழுதணுங்கறதில்லை. ஒரு முறை 'குமுத'த்துக்கு இமாசலப் பிரதேசத்துல இருந்து ஒருத்தர் கதை அனுப்பியிருந்தார். கதை நன்றாகத்தான் இருந்தது.

இன்னென்று; தொடர்கதை எழுதறதை விட, சிறு கதை எழுதறதுதான் கஷ்டம்பேன். சிறுகதையிலே சொல்லவர விஷயத்தைச் சிக்கனமா, சுருக்கமா அதே சமயத்துல விளக்கமாச் சொல்லியாகணும். அதுதான் சிரமம். சிறுகதைன்னு நான்கைந்து முறை எழுதியே பிறகு அனுப்பறேன்.

கதையைப் பார்த்து எவரும் செலக்ட் செய்யறதில்லே. பெயரை வைத்துதான்னு எல்லோரிடமும் ஓர் அபிப்ராயம் இருக்கு. அது தவறு. நான் பெண் பெயரில் எழுதுவது போல் நிறையப் பேர் அப்படி எழுதுகிறார்களாம்.

நான் என் மனைவி பெயரில் எழுத ஒரு காரணம் இருந்தது. ஆரம்ப காலத்தில் வாசகர்கள் என்னையும் 'குமுதம்' ரா. கி. ரங்கராஜனையும் கன்ஃப்யூஸ் செய்து கொண்டார்கள். கடிதங்கள் மாறி மாறி வரும். அதனாலேயே மனைவி பேரில் எழுத ஆரம்பித்தேன். மேலும் அப்போதுதான் திருமணமாகி இருந்தது. புதுப் பெண்டாட்டி மோகம் வேற!

ஆரம்ப காலத்தில் நான் சில எழுத்து ஜாலங்களை செஞ்சேன். அதையே இப்போதும் சிலர் தொடர்கிறார் களாம். அது அவ்வளவு நல்லதில்லை. அவுங்க அவங்க பாணியிலே எழுதறதுதான் நல்லது.

இதுவரைக்கும் என்னோட அனுபவத்தை வைத்து எழுத்து சம்பந்தமான விஷயங்களைச் சொன்னேன். எழுத்துங்கற இந்த கலையைக் 'கொலை' யாக்கிடாம எழுதற துக்கு இந்த அனுபவம் உதவுன்னு நினைக்கிறேன்.

கொச்சி முத்தமிழ்ச் சங்கத்தில் சுஜாதா
சொல்லக் கேட்டவர் : என். சி. மோகன்தாஸ்.

சுஜாதா—சிவகுமார்

சுயதரிசனம்

வீடும், ஸ்டூடியோவும், காமிராவும்தான் வாழ்க்கை என்றாகிவிட்ட சிவகுமார் என்கிற நடிகனை உதறி விட்டு, உள்ளே உறைந்து கிடக்கிற பழனிச்சாமி என்கிற ஆதார கலைஞனை உரசிப் பார்க்க கடற்கரை மணலில் கால் புதையப் புதைய பேசிக் கொண்டே நடந்து சென்ற போது தான், சென்னையில் ஆகஸ்டு 10-ம் தேதி சுஜாதாவின் "டாக்டர் நரேந்திரனின் விநோத வழக்கு." நாடகத்தை சிவகுமார் பார்த்தது பற்றிய பேச்சு வந்தது.

சுஜாதாவின் அந்த நாடகம் சிவகுமாரை மிகவும் பாதித்ததில் ஆச்சரியம் ஏதுமில்லை. தன் வாழ்க்கையில் நாடகம் பார்த்து தான் தேம்பித் தேம்பி அசிங்கமாக அழுதது. அன்று இரண்டாவது தடவை என்று மனம் விட்டுச் சொன்னார் சிவகுமார். அன்று இரவு பூராவும் அந்த நாடகமும், சுஜாதாவும் அவரை முழுமையாய் ஆக்கிரமித்துக் கொள்ள, விடியற்காலை இரண்டு மணிக்கு திடீரென்று ஏற்பட்ட உந்துதலில் எழுந்து உட்கார்ந்து, சுஜாதாவுக்கு ஒரு கடிதம் எழுதினாராம். என்ன எழுதினார் என்பதை கோர்வையாய்ச் சொல்லாமல் அங்கங்கே தொட்டுத் தொட்டுப் பிரித்தார் சிவகுமார்.

சிவகுமார் கடிதம்

"நேற்று பார்த்த நாடகம் என்னை மெய் சிலிர்க்கச் செய்து விட்டது. சுமார் 750 முறை இந்தியாவின் முக்கிய நகரங்கள் உள்பட பல மேடைகளில் பல வேஷங்களில்

நாடகங்களில் நடித்திருக்கிறேன். ஆனால், நாடகம் பார்த்து நான் முதன்முதல் கண்ணீர் வடித்தது கே. பி. யின் 'எதிர் நீச்சலில்'தான். நாகேஷின் நடிப்பைக் கண்டு, அதற்குப் பின்னால் 15 ஆண்டுகள் கழித்து, 'டாக்டர் நரேந்திரனின் வினோத வழக்கில்' தன் சாவைப் பற்றி டாக்டரை விட அதிகம் தெரிந்து வைத்திருந்த ரவி—க்ஷணத்தில் ஒடிந்து போய்,"டாக்டர் என்னை எப்படியாவது காப்பாற்றுங்கள், நான் இன்னும் கொஞ்சம் படிக்க வேண்டும். நான் சாக விரும்பவில்லை" என்று சொல்லும் கட்டத்தில் அசிங்கமாக தேம்பித் தேம்பி அழுதேன். பூர்ணம் அவர்களுக்கு 'லைஃப் டைம் காரக்டர்' தந்திருக்கிறீர்கள். இதுவரை அவர் நாடகங்களிலும், திரையிலும் நடித்த அத்தனை காரக்டர்களையும் விட நோபிள் காரக்டர் இது. நாடகத்தில் நடித்த அத்தனை பேருமே உங்கள் எழுத்துக்களை பிசகில்லாமல், பிசிறில்லாமல் பிரதிபலித்தார்கள். திரை வடிவில் உங்களை, உங்கள் எழுத்துக்களை எந்த டைரக்டரும் முறையாகப் பிரதிபலித்திருக்கவில்லை. நாடகம் மூலமாய் உங்களை மட்டுமே பார்க்கச் செய்த பெருமை பூர்ணம் விஸ்வநாதன் அவர்களையே சாரும்."

திரையில் முழு சுஜாதாவையும் பிரதிபலிக்கும் படம் ஒன்று உருவாகும் பட்சத்தில், அதில் பிரதான வேடமேற்று, சுஜாதாவின் எழுத்துக்களை உயிர்த்துவத்தோடு திரையில் காட்டும் வாய்ப்பு கிடைத்தால் அதைப் பெரும் பேறாகக் கருதுவதாகவும் சிவகுமார் எழுதியிருக்கிறார். ஓவியக் கலைஞனாக வாழ்ந்த அந்தக் காலத்தை நெகிழ்வோடு சுஜாதாவிடம் வெளிப்படுத்தியிருக்கிறார் சிவகுமார்.

"ஓவியக் கலைஞனாக உருவானதைத்தான் நான் பெரிதாகவும், பெருமையாகவும் நினைக்கிறேன். என் திரைப் படங்களில் ஏதாவது சிறப்புகள் இருக்குமாயின், அது உண்மையில் பலருக்குச் சொந்தம். ஆனால் எனது ஓவியங்களின் சிறப்புக்கு, உயர்வுக்கு நான் மட்டுமே பொறுப்பு. அந்த ஒப்புயர்வற்ற உன்னதமான கலைக்கு, என் குறுகிய

வாழ்க்கையில் எட்டு ஆண்டுகளை அர்ப்பணித்திருப்பதை எண்ணி என்றுமே மகிழ்கிறேன். அவற்றின் தரம் பற்றி மற்றவர்கள் விமர்சிக்கலாம். ஆனால், அக்கலை பயின்ற அந்த நாட்களில் நான் நூறு சதம் அதற்காகவே வாழ்ந்தேன் என்பதை எவரும் மறுக்க முடியாது. என்னைப் பார்ப்பதற்கு முன்னால், என் ஓவியங்களைத்தான் நீங்கள் முதலில் பார்க்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

''உங்கள் 'கனவுத் தொழிற்சாலை'யில் நீங்கள் காட்டியுள்ள சினிமாக் கதாநாயகன் என்னிலிருந்து மாறுபட்டவன். முற்றிலும் வேறானவன். இன்றைக்கு புகழின் உச்சியிலிருக்கிற சில கதாநாயகர்களின் பண்பை, உணர்வுகளையே பெரும்பாலும் அவை பிரதிபலித்தன. ஆனால் எனது ஆரம்பமே வேறு. ஸ்ரீரங்கத்தையும் திருச்சியையும் கல்லூரி நாட்களில் எப்படி இருந்தது என்று நீங்கள் எழுதியது போல, வளமான சூழ்நிலையில், தரமான கல்வி பயிலும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை.''

''கிராமம், சிறு கிராமம். முதலில் எஸ். எஸ். எல். சி. தேறியவனே நான்தான் என்னும் போது பத்திரிகை படிப்போரையோ, உலகியல் தெரிந்தோரையோ சந்திக்க வேண்டுமென்றால் கூட மூன்று மைல் சென்றுதான் அவர்களுடன் தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டும். தந்தையார் பள்ளி ஆசிரியர்—நான் பிறந்தவுடனே மறைந்து விட்டார். பக்கத் துணையோடு நின்ற அண்ணன் எனக்கு நாலு வயதிருக்கும் போதே 'பிளேக்கில்' போய் விட்டான். மக்கி மண்ணோடு கலந்து விடுவதற்கான அத்தனை சாத்தியக் கூறுகளும் இருந்த சூழ்நிலையில், வெறி பிடித்து, வெடித்துச் சிதறி எண்ணெய் விளக்கில் பள்ளிப் படிப்பை முடித்த நான் 15-வது வயதிலேயே ஓவியம் பயில சென்னை வந்து விட்டேன்.''

''நடிக்க நுழைந்த போது என்னை பூஜ்ய நிலைக்கு திருப்பி வைத்துக் கொண்டு, ஒவ்வொரு விஷயத்தையும்

முழுமையாகத் தெரிந்து கொண்டு ஒவ்வொரு நிலையையும் கடந்து வந்திருக்கிறேன். இதிலும் நான் பாதி வழிதான் வந்திருக்கிறேன். சாதிக்க வேண்டியவை முன்னால் தெரிகின்றன.

இங்கும் நான் மனப்பூர்வமாய்ப் பெருமைப்படுவது உங்களது, சினிமா கதாநாயகர்களுக்கு முற்றிலும் வேறாக. கவர்ச்சியும், ஆர்ப்பாட்டமும், போலித்தனமும், பிரமையும் மண்டிக் கிடக்கிற இந்தத் துறையில் எள்ளளவும் பாதிக்கப்படாது, அதே கிராமத்து இளைஞனின் ஆரோக்கியத்தோடு, துறுதுறுப்போடு இருப்பதுதான். உயர்ந்த நடிகனாகக் கருத இமேஜைக் காப்பாற்றிக் கொள்ள நான் கடைப் பிடிக்கும் பழக்கங்களல்ல அவை. என்றுமே மனிதனாக வாழ வேண்டும் என்று பிஞ்சு உள்ளத்தில் எடுத்துக் கொண்ட சபதம் இன்றுவரை தூய்மையோடு, சிரத்தையோடு காப்பாற்றப்பட்டு வந்திருக்கிறது.

சார்லஸ் டிக்கன்ஸ், எமிலஜோலா பேர்ல்பக் போன்றோரே, அன்று என்னைக் கவர்ந்த நாவலாசிரியர்கள். வாழும் நாவலாசிரியர்களில் தி. ஜானகிராமனும், ஜெயகாந்தனும். நான் உங்களைப் படிக்கும் முன் என்னைக் கவர்ந்தவர்கள். நான் எந்தப் புதிய நவீனங்களையும் கடந்த பதினைந்து ஆண்டுகளில் ஊன்றிப் படிக்கவில்லைதான். 'ஆனந்த ராகம்' படப்பிடிப்பிற்காக ரயிலில் திருநெல்வேலி புறப்பட்ட அன்று, யார் மூலமோ என் வீட்டில் இடம் பிடித்திருந்த உங்கள் 'மேகத்தைத் துரத்தினவன்' குறு நாவல் முதன்முதலாகப் படித்தேன்.''

''என் வீட்டில் பணிபுரியும் இளைஞன் ஒருவனின் இரு மாறுபட்ட உணர்வுகளைக் கிட்டத்தட்ட அந்த நாவலில் சித்தரித்திருந்தது. ஒருவனின் வெளிப்பேச்சு, நடவடிக்கைகளுக்கும் உள் மனதின் உணர்வுகளுக்கும் சம்பந்தமே இருக்காது என்பதை விளக்குவதுடன் ரொம்ப ரியலிஸ்டிக்காக இருந்தது. அதுதான் ஆரம்பம். பின்னர் ஊட்டி

படப்பிடிப்பின்போது, 'நைலான் கயிறு' 'வைரங்கள் சில வித்யாசங்கள்' 'பெண் இயந்திரம்' 'கொலையுதிர் காலம்' என்று வாசிக்க ஆரம்பித்து இப்போது கிட்டத்தட்ட 30 புத்தகங்கள் சேர்ந்துவிட்டன. அவை அனைத்தையும் இன்னும் படித்துவிடவில்லை. நைலான் கயிறில், துப்பறியும் முறை, டைரிக் குறிப்புகள், வித்யாசமாய்க் கவர்ந்தது. 'வைரங்களில்' சேட்டுப் பையனிடமிருந்து கதாநாயகியின் கற்பைக் காப்பாற்ற சிறுவன், வீட்டு மாடி வழியே இறங்கி வந்து, அவளை வெளியே அனுப்பிவிட்டு டென்னிஸ் மட்டையால் அடிவாங்கி-'இலவச வைரங்கள் மண்டைக்குள் தெறித்தன...கோமா நிலையில் அக்கா, இன்னும் அடிச்சுக்கிட்டே இருக்காரே, கவலைப்படாதேப்பா...நான் உனக்கு மருந்து போடறேன்...' விஷயங்கள் நெஞ்சில் உறைந்துவிட்டன.

உங்கள் எழுத்துக்களைப் படித்தபோது, 1982-ல் உலகம் எப்படி முன்னேறியுள்ளது; மனித வாழ்வில் குணச் சித்திரங்கள் எப்படி உள்ளன என்பதை உணரமுடிகிறது. ஒரு கொலை, துப்பறிதல் என்பது உங்கள் நாவல்களின் பொதுவான விஷயங்கள் என்று மேலோட்டமாகச் சொன்னாலும் கதாபாத்திரங்கள் உயிரோடு உலவுகின்றன. எங்களைப் போன்றோருக்கு வீடும், ஸ்டூடியோவும்தான் வாழ்க்கை என்றாகி விட்டபோது, வெளியுலகைப் புரிந்துகொள்ள உங்கள் நாவல்கள் பெரிதும் உதவுகின்றன.''

ஆகஸ்டு 11-ம் தேதி சிவகுமார் எழுதிய கடிதம் அடுத்த நாள் சுஜாதாவுக்குக் கிடைத்து 13-ம் தேதியே பதில் எழுதியிருக்கிறார் சுஜாதா.

சுஜாதாவின் பதில் கடிதம்

''அன்புள்ள சிவகுமார்,

உங்கள் கடிதம் இன்று கிடைத்தது. 'அமுதவன்' உங்களைப்பற்றி நிறையச் சொல்லியிருக்கிறார். ரொம்ப நாட்க

ளாக உங்களைச் சந்தித்துப் பேச ஆவலாக இருந்தது. சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொள்ளாததற்குப் பொய்க் காரணங்கள் கூற விரும்பவில்லை. உங்கள் கடிதம் ஒரு விதத்தில் உங்களோடு பேசுவதுபோல் இருந்தாலும், நேரில் சந்தித்து உங்கள் ஓவியங்களைப் பார்க்கவும், உங்கள் அனுபவங்களைக் கேட்கவும் இப்போது ஆர்வம் அதிகமாயிருக்கிறது.

''உங்கள் தமிழ் உரைநடை தெளிவாக இருக்கிறது. சொல்ல வந்ததை உண்மையாகச் சொல்லும் நளினம் இருப்பதைக் கண்டு வியப்புற்றேன். நீங்கள் தமிழில் நிறைய எழுதலாம் என்று தோன்றுகிறது.''

''நீங்கள் நடித்திருக்கும் திரைப்படங்களை அவ்வப்போது பார்த்ததுண்டு. 'சொல்லத்தான் நினைக்கிறே'னிலிருந்து சமீப 'வண்டிச்சக்கரம்' வரை. உங்கள் நடிப்பில் உங்கள் குரல், வாய்ஸ் மாடுலேஷன் என்னை முதலில் கவர்கிறது. இயல்பான, அதிகம் மிகைப்படுத்தாத, அதே சமயம் தமிழ் சினிமாவின் தேவைகளுக்கு உட்பட்டிருந்தும் தனித் தன்மையைக் காட்டும் நடிப்பு. குறிப்பாக: 'ரோஜாப்பூ ரவிக்கைக்காரி'. இத்தனை பேர் வந்துபோயும் அமைதியாக, ஸ்திரமாக உங்களுக்கென்று ஒரு இடத்தைக் காப்பாற்றிக்கொண்டிருப்பதே ஒரு சாதனைதான். அதன் காரணம் உங்கள் கடிதத்திலிருந்து எனக்குத் தெளிவாகப் புரிகிறது. நீங்கள் கஷ்டப்பட்டு முன்னுக்கு வந்த சூழ்நிலையும், உங்கள் அடக்கமும், பண்பும், தன்னம்பிக்கையும்தான் காரணம்.

''தன்னம்பிக்கையுள்ளவன் பிறரைப் பாராட்டத் தயங்கமாட்டான் என்பது என் ஆதார சித்தாந்தம். ஓவியத்தில் உங்களுக்கு ஈடுபாடு இருப்பதைப் பற்றிப் பத்திரிகைகளில் படித்திருக்கிறேன். பத்திரிகைகளில் வெளி வந்த சில ஓவியங்களிலிருந்து உங்களுக்கு ஆயில்ஸ் மற்றும் போர்ட்ரைட்ஸ் பிடிக்கும் என்று தோன்றியது. ஓவியம்

வரையத் தெரிந்திருப்பது ஒரு வரப்பிரசாதம்தான். உங்களைப் போன்ற நடிகர்களுக்கு படப்பிடிப்பின் இடையில் கிடைக்கும் அவகாசங்களில் நிறையப் படிக்கலாம். வரைய லாம். பற்பல இடங்களுக்கு நீங்கள் செல்வதால் இந்தத் திறமை உங்கள் தனிமையைத் துரத்தும். 'ஸ்கெட்ச் புக்' ஒன்று வைத்துக்கொண்டு அங்கங்கே முகங்களையும், காட்சி களையும் விரைவில் வரையுங்கள். 'டிரா ஃப்ரம் லைஃப்' ஓவியமும், புத்தகங்கள் படிப்பதும் மறைமுகமாக உங்கள் நடிப்புத் திறமையை வளர்க்கும் என்று சொன்னால் ஆச்சரியப்பட வேண்டாம். என் அனுபவத்தில் படிப்பதும் சங்கீதம் கேட்பதும் என் எழுத்தை பட்டை தீட்டுகின்றன. கலைஞனுக்கு ஆதாரத் தூண்டுதல்கள் ஒன்றுதான். வெளிப் பாட்டில்தான் வித்தியாசம்.

"சினிமா உலகை நான் இதுவரை வேடிக்கை பார்த்து வந்திருக்கிறேன். உங்களைப் போன்ற புத்திசாலித்தனமான நடிகர்கள் சம்மதித்தால் நிஜமாகவே ஒரு நல்ல திரைக் கதை எழுதிப் பார்க்கலாம் என்றுதான் தோன்றுகிறது. உங்களுடன் பேசினால், எனக்கு எழுத நிறைய விஷயங்கள் கிடைக்கும். நிச்சயம் வந்து சந்திக்கிறேன்."

சிவகுமாரின் 'லெட்டர் ஹெட்'டில் 'கிருஷ்ணராவ் நாயுடு தெரு' என்று பெயர் காணப்பட்டதை, தன்னுடைய கடித முடிவில் "பி.கு: உங்கள் தெருக்காரரர் (கிருஷ்ண) ராவா? நாயுடுவா?" என்று சுஜாதா வினவியிருப்பது பளிச்சென்று அவரை அடையாளம் காட்டுகிறது!

நரேந்திரனும் நானும்

பங்களூரில் பல கன்னட, மலையாள, மராத்தி நாடகங்களைப் பார்க்கும் சந்தர்ப்பம் எனக்கு ஏற்படுகிறது. ஒப்பிடும்போது பெரும்பாலான தமிழ் நாடகங்கள் சோனியாக இருக்கின்றன. பெரும்பாலானவை மேம்போக்காகவும், துணுக்குத் தோரணங்களாகவும் இருக்கின்றன. இதற்குக் காரணமாக எல்லோரும் இரண்டைச் சொல்கிறார்கள். 1. சபா சிஸ்டம். 2. தமிழ்நாடக ரசிகர்களின் ரசனை. இரண்டுமே தப்பு.

கோட்டை என்று சொல்லப்படும் 'சபா' சூழ்நிலையில் கூட டாக்டர் நரேந்திரன் போன்ற நாடகத்திற்கு இடமும் ஆதரவும் இருக்கிறது. நாடகத்தில் ஜோக் ஏதும் இல்லை. ஃப்ளாஷ்பாக் முறையில் வெட்டி வெட்டி சொல்லப்படும் தீவிர நாடகம்; பலர் இறந்து போகிறார்கள்; சதி செய்கிறார்கள். டாக்டர் ஒரு வியாதியை வருணிப்பதற்கு ஒன்றரைப் பக்கம் வசனம் பேசுகிறார்; வஸந்தி லெக்சர் அடிக்கிறாள். ஆடியன்ஸைப் பார்த்து தி ஷோ இஸ் ஓவர், எழுந்து போ என்கிறாள். அத்தனை சுதந்தரங்களையும் உபயோகித்து நாடகம் எழுதப்பட்டிருந்தாலும் 'சபா சிஸ்டம்' இதையும் ஏற்றுக்கொள்கிறது.

தமிழ் நாடக ரசிகர்கள் துணுக்குத் தோரணங்களையும் ஹாஸ்ய வெடிகளையும்தான் ரசிப்பார்கள். அவர்களிடம் சீரியஸாக எதையும் சொல்ல முடியாது என்று என்னை எச்சரித்தார்கள். நரேந்திரனின் முதல் காட்சியின்போது நகத்தைக் கடித்துக்கொண்டு சற்று நெர்வஸாகத்தான் இருந்தேன். மேடையில் ஒரு இடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு பாத்திரங்கள் நகரும்போது அவர்கள் வேறு இடம், வேறு சமயத்திற்குச் செல்கிறார்கள் என்பதை எவ்வளவு

தூரம் அவர்கள் புரிந்துகொள்வார்கள் என்று பயப் பட்டேன். பூர்ணம் அந்த சமயத்தில் (விளக்கம் தரும் உத்தேசத்துடன்) ஃப்ளாஷ்பாக் சங்கீதத்தை உபயோகித் தார். இடைவேளையின்போது பலர் என்னிடம் வந்து 'முதல்ல அந்த மியூசிக்கை எடுத்து வரச் சொல்லுங்க ஸார். எங்களுக்கெல்லாம் புரியாது என்று நினைச்சிங்களா?" என்றார்கள். நாடகத்தின் இறுதியில் அத்தனைப் பேரும் எழுந்து தன்னிச்சையாகக் கை தட்டியபோது அந்த இரண்டாவது 'மித்' உடைந்தது.

மோசமான நாடகங்களுக்கு காரணங்களைத் தேடி அலையவேண்டாம். டி.வி.யையும் சினிமாவையும் காரணம் காட்டவேண்டாம். என்ன கந்தல் படமாக இருந்தாலும் நம் அறையில் இலவசமாக விழுகிறது என்றால் யாரும் அந்த முட்டாள் பெட்டியைவிட்டு விலகமாட்டார்கள். விலக வைக்கவேண்டும். விலக வைக்கக் கூடியது நல்ல நாடகங்கள்தாம்.

பூனா, கல்கத்தா, திருவனந்தபுரம் போன்ற நகரங்களில் தினசரி நாடகம் நடக்கும் பிரத்தியேகத் தியேட்டர்கள் உள்ளன. சென்னையில் அந்த நிலையை ஏற்படுத்தும் பொறுப்பு நாடகம் எழுதுபவர்களிடம்தான் இருக்கிறது என்று நம்புகிறேன்.

—யூகோ பாங்க் ரிக்ரியேஷன் கிளப்பின் சார்பில் 'டாக்டர் நரேந்திரனின் விநோத வழக்கின்' போது சுஜாதா.

'என் மனைவி கூப்பிட்டால் வர மறுக்கிறாள்'

சொன்னவருக்கு சுஜாதா சூடு!

கதை ஒரு பாதி என்றால் வாசகன் மறுபாதி. வாசகனால் படிக்கப்பட்ட பின்னால்தான் ஒரு கதை பூர்த்தியாகிறது.

"நான் வாசகர்களைப்பற்றி கவலைப்படுவதில்லை. இப்போது எனது நூல் படிக்கப்படவில்லையென்றால், நூறு ஆண்டுகள் கழித்துப் படிக்கப்படலாம்..." என்று சிலர் கூறலாம். நூறு ஆண்டுகளுக்குப் பின்னால் காகிதமே இல்லாமல் போய்விடும். எல்லாம் கம்ப்யூட்டர் மயமாகிவிடும்.

பிறர் படிக்கவே நாம் எழுதுகிறோம். பிறர் படிக்கும்படியாகவும் எழுதவேண்டும்.

எழுத்தாளர்களிடம் போய், "நீங்கள் எப்படி எழுதுகிறீர்கள்?" என்று கேட்டால் பொய்தான் சொல்வார்கள்.

நீங்கள் எழுதுகிறீர்கள் என்றால் உங்களுக்குள் இருக்கும் ஈகோ (Ego) தான் காரணம்.

அண்மையில் துணுக்கு எழுத்தாளர் கருங்கல் ஜார்ஜ் என்னைச் சந்திக்க வந்திருந்தார். அவர் எப்படியென்றால், எல்லாப் பத்திரிகைகளையும் வாங்குவார். தன் பெயர் வந்திருக்கிறதா என்று புரட்டிப் பார்ப்பார். இல்லையென்றால் அவர் கவலைப்படுவதில்லை. அந்தந்த பத்திரிக்கைகளுக்கேற்ப எழுதி போட்டுக்கொண்டே இருப்பார். ராணியில்

'அல்லி'யிடம், ''என் மனைவி, கூப்பிட்டால் வரமறுக்கிறாள். நான் என்ன செய்யவேண்டும்?'' என்று கேட்பார். ''நீங்கள் இப்படி கேட்கிறீர்களே உங்களுக்குத் திருமணம் ஆகி விட்டதா?'' என்று கேட்டேன், ''இல்லை...'' என்றார். ''பின், ஏன்...?'' என்று அவரைப் பார்த்தேன். ''என் பெயரு வருமில்லே...அவன் பெயரு பத்திரிகையில வந்திருக்கின்னு பலரும் பேசுவாங்கல்ல. அதான்'' என்றார். தான் பலராலும் பேசப்பட வேண்டும் என்பது அவரை எழுத வைத்துக்கொண்டிருக்கிறது.

நல்ல தரமான கதைகள் பிரசுரமாகிவிடும். ஒரு வேளை தப்பான பத்திரிகைக்கு அனுப்பினால் அது திரும்பி வரலாம். சங்கராச்சாரியார் பற்றி குமுதத்திற்கு எழுதி அனுப்பினால் அவர்கள் பிரசுரிக்காமல் இருக்கலாம். கலைமகளுக்கு அனுப்பினால் அது வெளிவரலாம்.

கதையை எழுதியவுடன் ஒருவரிடம் வாசித்து, அபிப்பிராயம் கேட்கவேண்டும். நான் எனது மனைவியிடம் படித்துக் காண்பிப்பேன். அவள், ''என் உயிரை ஏன் வாங்குகிறீர்கள்? வெளிவந்த பின்னால் பத்திரிகையில் பார்த்துக்கொள்கிறேன்...'' என்று சொன்னாலும் நான் விடுவதில்லை.

என்ன சொல்லுகிறோம் என்பதைவிட, ஒரு எழுத்தாளனுக்கு எப்படி சொல்லுகிறோம் என்பது முக்கியமல்ல.

அவசர கோலத்தில் கதை எழுதவே கூடாது. கதை எழுதி முடித்துவிட்டு பத்து நாட்கள் கழித்து, படித்துப் பார்க்கவேண்டும். அப்போது ஒரு வாசகனின் பார்வை வரும்.

எழுத்தாளனுக்கு 'ஞாபகம்' மிக அவசியம். அவன் நிறைய நிறைய படிக்கவேண்டும்.

—நளன்

விண்வெளிப் பயணம்

சுஜாதா ரசித்தவை

ராகேஷ் சர்மாவும், பெயர் நாக்கில்நுழையாத ரஷ்யர்களும் விண்வெளி சென்று திரும்பியதில் எனக்கும் ரொம்ப பெருமைதான். உற்சாகம்தான். ராகேஷை அழைத்துச் சென்றது, ரஷ்யர்கள் நமக்கு அளித்த பெரும் சலுகை. ஆபத்துக் காலத்தில் நமக்குநிஜமாக உதவப் போகிறவர்கள் வேறு யார்? ஆப்கானிஸ்தானில் அங்கே இங்கே ஒன்றிரண்டு ரஷ்யர்கள் நுழைந்தால் என்ன...

6.38க்கு என்றால் 6.38க்கு ராக்கெட் கிளம்புகிறது. ஓரிரண்டு நிமிஷங்களில் ரஷ்யர்கள் கை தட்டி கை குலுக்கிக் கொள்கிறார்கள். அச்சடித்தாற்போல் docking. தாய்க் குலத்துக் கதவைத் திறந்துகொண்டு மிதந்து செல்கிறார்கள். 'சப் சப்' என்று முத்தம் கொடுத்துக்கொள்கிறார்கள். முடிந்தது காரியம். இதெல்லாம் அவர்களுக்கு மாமூல். பரபரப்பில்லாத ஆரவாரமில்லாத நிகழ்ச்சி.

கைமேல் கை வைத்துக்கொண்டு கிண்டிபோல குதித்த தெல்லாம் இங்கிருந்து பராக்கு பார்க்கப்போன இந்தியர்கள் தாம். சந்தோஷத்தில் பேருக்குப் பேர் மைக்கைப் பறித்துக்கொண்டு உளறினார்கள். பிரஸ்கான்ஃபரன்ஸில் குழந்தைத்தனமாக கேள்வி கேட்டார்கள். ராகேஷ்! திடீரென ஒரு E.T. வந்தால் என்ன செய்வாய்? ராகேஷ்! இப்போதாவது கடவுளை நம்புகிறாயா? விண்வெளியில் மிதக்கும் புத்தம் புது இந்தியனிடம் கேட்க வேறு கேள்வி இல்லையா?

இடையிடையே இந்தியைப் போட்டுக் குழப்பினர்கள். டெலிகாஸ்ட் ரகளே. சர்தார்ஜி பேசிக் கொண்டிருக்கும் போது *(பஞ்சாபிற்குப் பிறகு எதிலும் ஒரு சர்தார்ஜி இருந்தே ஆகவேண்டியது கட்டாயம்) நடுவே அமிதாப்பச்சன் படப்பாட்டு. அரைமணி நேரம் மாப்பையே காட்டிக்கொண்டு "ஸாரி 11 மணிக்குச் சந்திப்போம்!"

கப்ராஸ்கா, கப்ராஸ்கா என்று ரஷ்யன் மொழியில் இடையிடையே பப்பாதி இங்கிலீஷில் மொழிபெயர்ப்பு.

நான் ரசித்த விஷயங்கள்:—

1. நம் காம்ஸ்மநாட் ரஷ்ய மொழியை இத்தனே எளிதில் கற்றுக்கொண்டது.

2. எடையில்லா சூழ்நிலையில் காமிராக்களும் கர்ச்சீப்புகளும் மிதந்தது.

3. ராகேஷ் அலட்டிக் கொள்ளாமல் அமைதியாக அளித்த பதில்கள்.

இந்த விண்வெளி மிதப்பினுல் என்ன உபயோகம் என்று கேட்டால் பலபேர் பலதும் சொல்வார்கள். சுருக்கமாகச் சொன்னுல் மிதப்பு! அவ்வளவுதான்!

ரவிஷ் மல்ஹோத்ரா — ஏமாற்றத்தை நன்றுகச் சமாளித்தார்.

பத்து விஷயம்

எல்லோரும் அக்கக்காக விமரிசனம் பண்ணி விட்டார்கள். லைஃப் ரிப்போர்ட்டர் பெண்ணைக் காட்டிய தற்கு அம்பேத்காரை ஒரு வரி காட்டியிருக்கலாம். தாத்தா கட்டுமஸ்தாக இருக்கிறார். நேரு, பட்டேல் முகங்களை ஒப்புக்கொள்வது கஷ்டம், காந்தியை உடை மாற்றிய தென்னிந்திய யாத்திரை எங்கே, ராஜாஜி எங்கே, நேதாஜி எங்கே, சேவா கிராமத்தில் அவருடன் இருந்த என் சித்தப்பா எங்கே போன்ற குற்றச்சாட்டுக்கள் எல்லாம் அட்டன்பரோவின் 'சின்ஸியரிட்டி'யில் அடிபட்டுப் போகிற தால் படத்தில் எனக்குப் பிடித்த பத்து அம்சங்களைச் சொல்கிறேன்.

1. ஆரம்பத்தில் கோட்ஸே அவரைக் கொல்ல வருகை யில் ரவிசங்கரின் பின்னணி சங்கீதத்தில் பஜனை கீதம் கொஞ்சம் கொஞ்சமாக நாதம் சேகரிக்க உச்ச கட்டத் திற்கு நம்மைத் தயார்ப்படுத்தும் திகில்.

2. தென் ஆப்ரிக்காவில் ஊருக்கு வெளியே ஆசிரமத் திற்கு ஆண்ட்ரூஸ், காந்தியைச் சந்திக்கக் குதிரை வண்டி யில் வந்து சேர, காந்தி கஸ்தூரிபாவிடம் மூன்று பேருக்குச் சாப்பாட்டுத் தட்டு வை என்று சொன்னதும் நீக்ரோ குதிரை வண்டிக்காரனின் கண்களில் ஆச்சரியம்.

3. தென் ஆப்ரிக்கா நகரத் தெருவில் வழி மறைத்து வன்முறைக்காக நிற்கும் வெள்ளைக்கார இளைஞர்களை நோக்கி நடக்கையில் பென் கிங்ஸ்லியின் கண்களில் தென் படும் தயக்கம், பயம், அப்புறம் தீர்மானம். (கண்களால் இவ்வளவு நடிக்கமுடியுமா என்ன?)

4. நதிக்கரையில் தூரத்துக் கந்தல் உடைப் பெண்ணை நோக்கி காந்தி மிதக்கவிடும் மேல் வேஷ்டி.

5. பா இறந்து போகும்போது காந்தியின் கண்ணில் உதிரும் ஒரு சொட்டுக் கண்ணீர்.

6. தண்டி யாத்திரையில் குதூகல நடை.

7. சொந்த ஊரில் பதின்மூன்று வயசில் கல்யாணமான தினத்தை இரண்டு கிழங்களும் நதிக்கரையில் திரும்ப வாழும் காட்சி.

8. காட்சி அமைப்புக்களில் காணப்படும் சிரத்தை. (உ-ம். கலகச் செய்தியைத் தெரிவிக்க வரும்போது கிரிக்கெட் மாட்ச்.)

9. சிறந்த இந்தியத் திறமைகளை அட்டன்பரோ பயன் படுத்திக்கொண்டிருக்கும் சாமர்த்தியம். ரவிசங்கர், விஜய் ராகவ ராவ் சங்கீதம், அம்ரீஷ் ஓம் பூரி நடிப்பு, கோவிந்த் நிஹ்லானி காமிரா டைரக்ஷன் உதவி.

10. ஒரு தாத்தாவைப் பற்றிய இந்தப் படத்திற்கு ஹவுஸ்ஃபுல்லாகி பிளாக்கில் டிக்கெட் விற்பது.

பாலசந்தர் மகள் திருமணம்

டைரக்டர் கே. பாலசந்தர் மகள் செல்வி புஷ்பலதாவுக்கும் செல்வன் கந்தசாமிக்கும் ஏப்ரல் நாலாம் தேதி விவாஹம் இனிது நடந்தது. 'விவாஹம்' என்றுதான அதைச் சொல்லவேண்டும். ஜானவாச ஊர்வலத்திலிருந்து ஆரம்பித்து சம்பிரதாயங்கள் எதையும் விட்டு வைக்காமல் விஸ்தாரமான விவாஹம். வீடியோவும் காமிராக்களும் வெளிச்ச வெள்ளத்தில் சிவாஜி, ஷேக், ராஜகோபால சாஸ்திரிகள் என்று பல்வேறு முகங்களைத் தேடிக் கொண்டிருக்க, மந்திரங்களுக்கு அவ்வப்போது விளக்கம் வந்தது புதுசாக இருந்தது.

பெரிய கல்யாணங்களில் எனக்கு ஒரு வசீகரமான பொழுதுபோக்கு V. I. P. Watching. இந்த முறையும் ராஜேஸ்வரி வாசல் அருகில் புல்தரையில் நாற்காலிபோட்டு பஞ்சு, சாருஹாசனுடன் உட்கார்ந்துகொண்டேன். அவ்வப்போது விருந்தினர் வரவர அவர்களை வரவேற்க வாசலை நோக்கிச் செல்லும் கூட்டத்தின் அளவிலிருந்து வருவது யார் என்று யூகிப்பது சுவாரஸ்யமான விஷயம். மணமக்களையும் சாஸ்திரிகளையும் பாலசந்தரையும் தவிர மற்றபடி எல்லோருமே வாசலை விரைந்தால் எம். ஜி. ஆர். சிறுவர்கள் பிரதானமாக ஓடினுல் ரஜனி. பட்டுப் பாவாடைச் சிறுமிகள் ஓடினுல் கமல். 'வாங்கண்ணே' என்று ஒருத்தர் மட்டும் கையை நீட்டிக்கொண்டு நடந்தால் செங்கல்பட்டு டிஸ்ட்ரிப்யூட்டரின் தம்பி.

சிலுக்கு வந்தால் வரவேற்க ஓடலாம் என்று தயாராக இருந்தேன். அதற்குள் சாப்பிடக் கூப்பிட்டார்கள்.

பக்கத்தில் சாப்பிட்டுக்! கொண்டிருந்தவருடன் சம்பாஷணைகள்!

அவர் ; இடது பக்கம் எதுத்தாப்பல பச்சைப் புடவை உடுத்தியிருக்காங்களே, சீதாதானே?

நான் : ஆமாங்க (சீதா யார்?) வலப் பக்கத்தில் நீலமா சட்டை போட்டுக்கிட்டு ஸ்டைலுக்கா அது யாருங்க?

அவர் : அது எம் பொண்ணுங்க. ஆமா நீங்க யாருங்க?

நான் : நான் வந்து சுஜாதாங்க...

அவர் , ஓ அப்படியா? ரொம்ப சந்தோஷம். 'அவன் ஒரு தொடர்கதை'யில நல்லாவே செய்திருக்கீங்க...

நான் : நீங்க மணமக்களுக்கு உறவினருங்களா?

அவர் : இல்லிங்க.

நான் : தெரிஞ்சவருங்களா?

அவர் : இல்லிங்க. சும்மா கேட்கிரரஷ் பண்ணி வந்தம்!

சுஜாதா என்று ஒரு ராகம் அமைக்க ஆ...

ஒரு கல்யாணக் கச்சேரியில் சேஷகோபாலன் பாடிக் கொண்டிருந்தார். அருகில் போய் உட்கார்ந்து கொண்டு கடைசி வரை கேட்டேன்.

கர்நாடக சங்கீதத்தை நேரில் ரசிப்பது கொஞ்சம் கஷ்டம். காரணம் சில வித்வான்களின் அங்க சேஷ்டைகள் கச்சேரியில் ஈடுபாட்டைக் குறைக்கும். பளேர்பளேர் என்று தட்டித் தொடையை உண்டு இல்லை என்று பண்ணி விடுவார்கள். மேல் பஞ்சமத்துக்கு எழுந்தே நின்று விடுவார்கள். முகத்தில், தசை நார்களில் அஸ்ஸாம் தெரியும். சேஷகோபாலனிடம் இதெல்லாம் இல்லை. லேசாகச் சிரித்துக் கொண்டே அனுயாசமாக இரண்டு 'ஆக்ட்டேவ்' சஞ்சரிக்கிறார்.

பின் சீட்டில் வந்து உட்கார்ந்து கொண்ட சந்துரு, "யார் இது? சேஷகோபாலன் மாதிரியே பாடறாரே!" என்றார்.

"சேஷகோபாலன்தான் இது."

"அட! இத்தனை சின்னவரா?"

ஆம்! அவருடைய இளமைத் தோற்றம், அவர் பாட்டில் அபார சாதகத்தையும் வீச்சையும் மெச்சூரிட்டியையும் நம்ப மறுக்க வைக்கிறது. நெற்றியில் லேசாக ஒற்றை ஸ்ரீசூர்ணம். வகிட்டுக்கோ, வாரலுக்கோ அடங்காத அடர்த்தியான தலை மயிர். A handsome face மேடை அவர் இருப்பதால் கொஞ்சம் பிரகாசமாக இருக்கிறது. மிகுந்த தன்னம்பிக்கையுடன் பாடுகிறார். பிருந்தாவன

சாரங்காவில் ரா. தா. பல்லவி பாட தைரியம் வேண்டும். சுர ராகமாலிகையில் ஹம்சானந்தியில் சுதிபேதம் பண்ணிக் கொஞ்ச நேரம் ஏங்க வைத்தார். பூபாளம் போலவும் பூபாளம் இல்லை போலவும் கண்ணுமூச்சி காட்டிய அந்த ராகத்துக்குப் பெயர் வாஸந்தியாம்!

அவரோகணத்தில் மட்டும் நிஷாதம் பிரயோகம் பண்ணி, 'சுஜாதா' என்று ஒரு ராகம் அமைக்க, கம்ப்யூட்டர் ப்ரோக்ராம் எழுத எனக்கு ஒரு சின்ன ஆ, ரஞ்சனி பாடச் சொன்னேன். ஒரு புரட்டுப் புரட்டிக் காட்டினார். ப்ருகாக்களில் பீம்ஸென் ஜோஷி வகை திறமை தெரிந்தது. பூச்சி சீனிவாசய்யங்காருக்குப் பிறகு கர்நாடக சங்கீதம் தேங்கிப் போய் விட்டது என்று சொல்பவர்கள் இன்றும் இருக்கிறார்கள். முப்பது வருஷமாக கர்நாடக சங்கீதம் கேட்டுக் கொண்டு வருகிறேன். இன்றைக்கு முன்னணியில் இருக்கும் பாலமுரளி, சந்தானம், ஜெயராமன், எம். எஸ். ஜி., சங்கர் சகோதரர்கள், ரமணி, சுரேஷ், சிட்டிபாபு, சூர்யநாராயணு இவர்களை எல்லாம் (பலபெயர்கள் விட்டுப் போயிருக்கலாம்) கேட்கும்போது கர்நாடக சங்கீதத்தின் விஸ்தாரமும், சாத்தியக் கூறுகளும் அதிகமாயிருக்கிறதாகத்தான் சொல்லுவேன். சமீபத்தில் எல். சங்கர் விநாயகராமுடனும் ஒரு அமெரிக்க கித்தாரிஸ்ட்டுடனும் 'சக்தி' என்று க்ரூப்பில் கொடுத்திருந்த எல். பி. இசைத்தட்டைக் கேட்டபோது இந்த சங்கீதத்தில் இத்தனை முடியுமா என்று பிரமிப்பாக இருந்தது.

புதிய இளைய தலைமுறையில் முன்னணி வரிசையில் சேஷகோபாலனும் இருக்கிறார்.

மகேந்திரனின் ஹோண்டா!

இந்தியாவிலேயே அதிக சக்தி வாய்ந்த ஒரே ஒரு மோட்டார் சைக்கிள் திருச்சியில் எனது நண்பர் மகேந்திரன் காமக் வைத்திருக்கிறார். ஜப்பானிய வண்டி. ஸி—எக்ஸ் 500 மாடல். ஜிலுஜிலுவென்று அலுமினியப் பளபளப்புடன் ரேடியேட்டர் என்ஜின் (ஐம்பது குதிரை சக்தி—பத்தாயிரம் ஆர். பி. எம்!)

ஏதோ ஃபோர் ஸ்ட்ரோக் பஞ்சகல்யாணி போல் இருக்கிறது. விரலை வைத்தால் ஸ்டார்ட் ஆகிவிட்டது என்று சொல்லித்தான் தெரிந்தது. இன்ஜின் ரகசியம் பேசுகிறது. ஐந்தே ஆரங்களுடன் சக்கரம். பங்க்ச்சர் ஆனால் தானாக ஒட்டிக்கொள்ளக் கூடிய ட்யூப்லஸ் டயர். ''உட்காருங்களேன், ஒரு ரவுண்டு போகலாம்,'' என்றார் மகேந்திரன்.

''ரொம்ப வேகம் வேண்டாம்,'' என்று தயக்கத்துடன் அவர் பின்னால் உட்கார்ந்தேன். முதல் கியரிலேயே க்ஷண காலத்தில் அறுபது கிலோ மீட்டரைத் தொட்டார்.

''ஈஸி! ஈஸி!'' என்றேன்.

''இன்னும் நான்கு கியர் பாக்கியிருக்கிறது,'' என்றார். திண்டுக்கல் ரோடில் வெகு தூரத்தில் ஒரு பஸ் தெரிந்தது. அதை ஓவர்டேக் செய்யலாமா என்றார். ''அப்படி ஒன்றும் அவசியமில்லை,'' என்று சொல்லி முடிப்பதற்குள் பஸ் ஷ்... என்று எங்கள் பின்னால் போய்க் கொண்டிருந்தது.

''ப்ரேக் எப்படி?'' என்று தவறுதலாகக் கேட்டு விட்டேன். குறக்களி மென்னி எல்லாவற்றையும் ஒருங்கே

பிடிப்பது போல் ஒரு பிரேக் போட்டு அச்சாக அதே இடத்தில் நிறுத்திக் காட்டினார்.

"இருநூறு கிலோ மீட்டர் வரை வேகம் போகலாம். நூற்றைம்பதைத்தான் இதுவரை தொட்டிருக்கிறேன். அதற்கு மேல் கண்ணில் தண்ணீர் வந்துவிடுகிறது." என்றார். "வாஸ்தவம்," என்றேன் கண்ணீருடன்.

எனக்கு ஹோண்டாவை ஓட்டிப் பார்க்க ஆசைதான். ஏரோப்ளேன் போல இருந்த மீட்டர் பானலைப் பார்த்தேன். எழுத வேண்டிய தொடர்கதைகளை யோசித்தேன்.

"வேண்டாம்" என்று வந்துவிட்டேன்.

குதுரேமுக் என்று ஓர் இடம்!

இது டூரிஸ்ட்டு கட்டுரை இல்லை. குதுரேமுக்குக்கு வழி சொல்ல மாட்டேன். பெங்களூர் மங்களூர் பாதையில் சிக்மகளூரில் சைடு வாங்க வேண்டும்! வழியில்' 'களஸா' என்றெல்லாம் ஊர்கள் வரும்! பஸ்ஸில் போனால் பெரும் அவஸ்தை! காரில் போனாலும் அப்படி ஒன்றும் அவஸ்தைக்குக் குறைவில்லை. சுழற்றிச் சுழற்றி அடிக்கும் பாதை. கைவசம் ஸ்டெமாட்டில் வைத்திருக்கவும். களைப்பான பிரயாணத்தின் இறுதியில் கிடைப்பது மரகதம். போய்ச் சேர்ந்த மாலை நேரம் மழை ஓய்ந்து ஒரு சில ஹெக்டேர்களுக்கு ஈரம், பசுமை. 'மலைமகளின் மார்பகத்தில் பச்சைப் பட்டாடை' என்றெல்லாம் கவிதை உளறல்கள் தோன்றியது. பசி வேளையாதலால் தமிழன்னையின் கழுத்தில் மற்றொரு கவிதை மாலை விழாமல் இருந்தது!

குதுரேமுக் மத்திய சர்க்காரின் ப்ராஜெக்ட் மலையெல்லாம் இரும்புக் கனிமம்—ஹேமடைட், மாக்னடைட்டென்று படுடைட்டாகத் திரும்பும் இடம் எல்லாம் இரும்பு. அதை மலையின் முகத்தைச் சுரண்டி, உதிர்த்து, பொடி பண்ணி, பைப் மூலம் மங்களூர் துறைமுகத்துக்கு அனுப்புகிறார்கள். அவ்வளவுதான் மொத்த விஷயமே. சுமார் மூவாயிரம் பேர் இந்த வேலை'யில்தான் கவனமாக இருக்கிறார்கள். ஆதலால் எல்லாமே மகா! மகா சுரண்டல், மகா பொடிபண்ணல், மகா அனுப்பல் ராட்சஸ இயந்திரங்

கள் மலைமண்ணைச் சுரண்டுவதற்கு! ஒரு கோபுர உயரத்துக்கு மஞ்சள் கழுத்துடன் இரும்பு ஒட்டகங்கள் (இந்தத் தலைப்பில் நாவல் எழுத உத்தேசமில்லை). அருகே 'ஹால்பேக்' என்று 120 டன் மண்ணை முதுகில் தூக்கிக் கொட்டவல்ல லாரிகள் உள்ளன. டயர் சக்கரங்களே பத்தடி உயரம் இருக்கும். மலை உச்சியில் சுயாட்சி பெற்று விட்ட ப்ரிஹிஸ்டாரிக் மிருகங்கள் போல இவ்வியந்திரங்கள் உலவி சுரண்டித் தள்ளுகின்றன. அங்கிருந்து விழும் மண், கல் கலவையை உடனே பொடி செய்து சைஸ் குறைத்துச் சுமாரான அரவையில் சுமாரான பதத்தில் கீழே மலையடிவாரத்துக்கு அனுப்புகிறார்கள். அடிவாரத்தில் சுமார் ஐந்து மாடிக் கட்டிட உயரத்துக்கு மீண்டும் அரைக்கும் இயந்திரங்கள், சல்லடைகள். முகப்பவுடரை விட ஸன்னத்துக்கு அரைத்து கான்ஸண்ட்ரேட்டர் என்று கனிமத்தின் காட்டத்தை அதிகரிக்கிறார்கள். பின்பு ஜாதி பிரிக்கிறார்கள். நீருடன் கலக்கிறார்கள். ஒரு மாதிரி கொழ கொழவென்று பண்ணி பைப் மூலம் மலையேற்றி மங்களூர் துறைமுகத்துக்கு அனுப்புகிறார்கள். சுமார் 40 கிலோ மீட்டர் பைப் மூலம் இரும்புக் கனி அனுப்பப்படுவது இந்தியாவில் முதல் முறை. துறைமுகத்துக்குச் செல்லும் இரும்புமண் கப்பல் மூலமாக வெளி நாடுகளுக்கு அனுப்பப்படுகிறது. (அவர்கள் அதை இரும்பாக்கி மறுபடி நமக்கு விற்க!)

குதுரேமுக் மேற்குத் தொடர்ச்சி மலைப் பிரதேசத்தில் உள்ளது. அதன் இரும்பின் தரம் கொஞ்சம் குறைந்தது. இந்த ப்ராஜெக்ட் கல்பாக்கம் போல் ஒரு பிடிவாத ப்ராஜெக்டு! என்னதான் செலவானாலும் முடித்தே தீருவது என்ற வைராக்கியத் திட்டம்! மத்திய சர்க்கார் இவ்விதம் பற்பல வெள்ளை யானைகளைக் கைக்கொள்ளுவது வழக்கம் தானே! குதுரேமுக்குக்கு ஆரம்பத்திலிருந்து நல்லதங்காள் கதை மாதிரி பல அல்லல்கள்!

ஈரான் ஷா 'பணம் தருகிறேன்' என்று வாக்குறுதி கொடுத்த கையோடு ஷாவே, 'கைமாற்ருக ஒரு பத்து ரூபாய் கொடேன்' என்று கேட்கத் துவங்கினுர். அடுத்து வந்த கோமேனி ஈராக்குடன் சண்டை போடுவதிலும் பெண்களைக் கண்டித்த குற்றத்துக்குச் சாட்டையடி கொடுக்கவும் கவனமாக இருக்கிருர். 'குதுரேமுக்கா? அது எங்கிருக்கிறது' என்ற கேள்வி! அப்புறம் 'இங்கே அங்கே என்று பணம் சேர்த்து ஒருவழியாக ப்ராஜெக்டை முடித்து இரும்பு மண்ணை வாங்க ஆள் தேடி மங்களூரிலும் மலையடி வாரத்திலும் எவ்வளவுதான் சேர்த்து வைப்பது? இப்போது தான் விடிவு காலம் வந்துள்ளது. யூகோஸ்லாவியா, ஜப்பான் போன்றவர்கள் வாங்கலாமா என்று தீர்மானித்து யோசித்துப் பைக்குள் கைபோட்டுக் கொண்டிருக்கிருர்கள். மங்களூரில் ஒரு 'பெல்லட்டைடேஸேஷன்' பிளாண்ட் ஏற்படுத்திப் பில்லைகளாக்கி அதன் விற்பனைச் சாத்தியத்தை அதிகரிக்கிருர்கள். மேலும் ஸ்பான்ஜ் அயர்ன் தொழிற் சாலை ஒன்று மங்களூரிலேயே ஏற்படுத்தலாமா என்று யோசித்து வருகிருர்கள். இது வரை சுமார் 600 கோடி ரூபாய் செலவு ஆகியுள்ளது? வாங்குவதற்கு மட்டும் சரி யான ஆட்கள் கிடைத்துவிட்டால் இந்த ப்ராஜெக்டை 'பீட்' அடிக்க முடியாது! கொடுத்த காசு திரும்ப வருவதற்கு கி.பி. 2001 ஆகும்! அதனுலென்ன, பரவாயில்லை. அதுவரை இந்த அரிய பெரிய சாதனையை, மலைமுகட்டில் காட்டில் அமைத்திருக்கும் இன்ஜினியர்களின் சாதனையைப் பாராட்டுவோம். பப்ளிக் செக்டர் என்பது பணம் சம்பாதித்து லாபம் ஈட்ட வேண்டும் என்று இப்போதுதான் ராஜீவ் புதிதாகச் சொல்லிக் கொண்டிருக்கிருர்! முன் பெல்லாம் அதன் சமூகப் பொறுப்புகளில்தான் அழுத்தம் அதிகம்!

அருகே போனுல் குதுரேமுக் ரொம்ப அழகாக இருக் கிறது. மலைமடியில் சோப்புப் பெட்டிகளைச் செருகியது போல வீடுகள் உள்ளன. அவைகளைச் சில வேளைகளில்

சல்லாத் துணியில் மூடியது போல, கொஞ்சம் முனைந்து கைநீட்டினுல் பறிக்க முடியும் போல, மேகங்கள்! சினிமா செட்டில் போல் இந்துக் கோயில், முஸ்லிம் மசூதி, கிறிஸ்தவ சர்ச்சு மூன்றும் ஆளுக்கொரு குன்றில்வீற்றிருந்து ஒன்றை ஒன்று ஒற்றுமையாய்ப் பார்த்துக் கொண டிருக்கின்றன! தெற்கு கானரா பிரதேசத்துக் கன்னடம் பிரதானமாகப்பேசப்படுகிறது. செக்யூரிட்டியில் தமிழர்கள் இருக்கிறுர்கள். மஞ்சள் ஹெல்மெட் தொப்பியில் இன்ஜினி யர்கள், ஜீப்புகள். நாகரிகத்திலிருந்து விலகி வந்து நான்கு நாட்கள் நிம்மதியாக இருக்கச் சிறப்பான இடம். ஐந்தாவது நாள் பைத்தியம் பிடித்துவிடும்.

இங்கே நிரந்தரமாக இருப்பவர்களுக்கென்று ஒரு தனி மனேபாவம் வேண்டும். தினம் தினம் மலையையும் மழையை யும் பார்த்துக் கொண்டிருக்கும் பொறுமை வேண்டும். (சிரபுஞ்சிக்கு அடுத்தது இங்கேதான் அதிக மழை) செய்தித் தாள் வர பேப்பர் டாக்ஸிக்காகக் காத்திருக்க வேண்டும். பார்த்த முகத்தையே பார்த்துத் தினந்தவருமல் "ஹலோ" சொல்லிக் கொண்டிருக்க வேண்டும். அவ்வப்போது சினிமாக்காரர்கள் படையெடுப்பார்கள். அதைக் கண்டுக் காமல் உம் வேலையைப் பார்த்துக் கொண்டு போக வேண்டும். முரளி இங்கே ஆரம்ப காலங்களிலிருந்து ப்ளாண்டில் இருக்கும் இன்ஜினியர். கனடா தேசத்து கம்ப் யூட்டரிலிருந்து ஜப்பானிய இயந்திரங்கள் வரை பார்ட் பார்ட்டாகப் பெருமையாகச் சொல்லிக் கொள்கிறுர். "ப்ளாண்ட் இன்ஜினியரை வைத்து ஒரு நாவல் எழுதி விடுங்கள்" என்றுர்! (முரளியும் நானும்தான் அதைப் படிக்க வேண்டும்.)

பப்ளிக் ரிலேஷன்ஸ் பொதுத் தொடர்பு அதிகாரியாக மோகன் பணியாற்றுகிறுர். சமீப காலத்தில் இங்கே பிலிம் கோஷ்டிகள் அதிகமாகிவிட்டதால் இவர் ரொம்ப பிஸி யாக இருக்கிறுர். இதுவரை எட்டு பத்து இந்தி, தெலுங்கு

படங்கள் கன்னடப்படங்கள் இங்கே ஷூட்டிங் நடந்து விட்டதால் ஊரில் இருக்கும் ஜிம்மி நாய் உட்படச் சகலரும் 'எங்கே டுயட் எங்கே சேஸ்' என்று புள்ளி விவரம் தருகிறார்கள்! பூணம் தில்லனை 'ஷிவாகா இன்ஸாஃபில்' க்ரேனில் தொங்கவிட்டதிலிருந்து பிலிம் ஷூட்டிங் அனுமதிப்பதைக் குறைத்துவிட்டார்கள். (மத்திய சர்க்காரி லிருந்து கோபித்துக்கொண்டு ஆர்டர் வந்ததால்) இருந்தா லும் சினிமாக்காரர்கள் கூட்டம் அதிகமாய் காணப்படு கிறது. நாங்கள் போயிருந்த போது ராஜ்குமார் தீபா. எல்லோரும் டேரா போட்டிருந்தார்கள்.

நாங்கள் போயிருந்தபோது மழையும் பெய்தது. சிரபுஞ்சிக்கு அடுத்தபடி இங்கேதான் அதிகப் படி மழை என்று நனைந்த குரலில் மோகன் சொன்னதை நம்ப முடிந்தது. சட்சட்டென்று மழை பெய்கிறது. உடனே ஓடிப் போய்விடுகிறது! ஒரு அவசர மேகம் விலகிப் போய், வானம் நீலம் காட்ட அவரவர் உசிதப்படி வெளியே கிளம்பிவிடு கிறார்கள். 'வெளியே' என்றால் என்ன?

சினிமாகினிமாவெல்லாம் இல்லை. அடுத்த மலையில் இருக்கும் பக்கத்து வீட்டுக்காரரை ஸ்கூட்டரில் போய்ப் பார்க்கலாம். ஆபீசர்ஸ் கிளப்பில் ரம்மி பிரிட்ஜ் ஆடலாம். பொது வீடியோவில் 'பேதாப்' போன்ற படங்கள் பார்க்கலாம். இயற்கைக் காட்சி, இயற்கைக் காட்சி என்று அலுக்கும் வரை பார்க்கலாம்!

நாங்கள் இரண்டு தினங்கள் இருந்தோம். விடைபெறும் போது ப்ராஜெக்டில் இருப்பவர்களிடம் என்ன ஒரு நிம்மதி என்ன ஒரு அமைதியான சூழல்! இதில் வந்து வாழக் கொடுத்து வைத்திருக்க வேண்டும். அடுத்த முறை வந்து இங்கே ஒரு மாதம் அக்கடா என்று இருக்கணும் என்றெல் லாம் சொல்லி டாட்டா காட்டிவிட்டுப் புறப்பட்டோம்.

நிஜமாகவே 'வருவீர்களா?' என்று மனச் சாட்சியை மூலையில் மடக்கிக் கேட்டால், 'ம்ஹூம் கஷ்டம்' என்று தான் பதில் கிடைக்கும். என்றாலும் இந்தக் காடுமலைப் பிரதேசத்தில் இருந்து கனிமம் எடுக்கும் நண்பர்களுக்கு ஒரு சபாஷ் போடத் தோன்றுகிறது.

திருச்சி அப்போது...!

பட்டப் படிப்பு வரை நான் திருச்சியில் படித்தேன். ஸ்ரீரங்கத்திலிருந்து தினம் காலை ரெயில் ஏறி ஜோஸப் காலேஜுக்கு வருவேன். ரெயில்வேயில் மஞ்சளாக பாஸ் கொடுப்பார்கள். திருச்சிக்கு டிக்கெட் இரண்டணு என்று ஞாபகம். இரண்டணு என்பது இப்போதைய பனிரெண்டு பைசாவுக்கு சமானம். அது சுமாரான காசு, இரண்டணுவில் காப்பி சாப்பிடலாம். பெனின்ஸுலர் கபேயில் சாதா தோசை இரண்டணு. சினிமாவில் தரை டிக்கெட் இரண்டணு. மலைக்கோட்டையில் இரண்டணு கொடுத்து கைரேகை பார்த்துக் கொள்ளலாம். அது பற்றி அப்புறம் சொல்கிறேன். முதலில் திருச்சிக்கு ரெயில் பயணம். காலை ஒன்பது மணிக்கு லால்குடியிலிருந்து வரும் பாசஞ்சர் வண்டி, அதில் பெட்டிகளுக்கெல்லாம் பெயர் உண்டு. பஜனை வண்டியில் திருப்புகழ் பாடுவார்கள், சீட்டு வண்டியில் முன்னூத்தி நாலு ஆடுவார்கள். அதே போல் பால் வண்டி, ஆபீசர் வண்டி என்று பாகுபாடுகள், காலேஜுக்கு பாண்ட்டு போட்டதாக ஞாபகமில்லை. வேட்டியை டப்பா கட்டு கட்டிக்கொண்டு செருப்பில்லாமல்தான் செல்வேன். டவுன் ஸ்டேஷனில் இறங்கி ஆண்டார் தெரு அல்லது பட்டர்வொர்த் ரோடு வழியாக குறுக்கே மண்டபங்களை எல்லாம் கடந்து காலேஜ் அடைவோம். காலேஜில் அப்படி ஒன்றும் பிரசித்தமாக இருந்ததாக ஞாபகமில்லை. பல பேரைப் பார்த்து பயந்த ஞாபகம் இருக்கிறது. லைப்ரரியில் உள்ளே விடமாட்டார்கள். சீட்டு எழுதிக் கொடுக்க வேண்டும். "பார்த்திபன் கனவு" கேட்டால் "திருச்சபை விளக்கம்" கொடுப்பார்கள். கெமிஸ்டரி லாபில் மணல் சிந்திஞல் கூட ஃபைன் போடுவார்கள். கிளாஸ் கட் அடித்து விட்டு கெயிட்டியில் சினிமாப் போஞல் மறுநாளே தபால்

காரரைத் தேட வேண்டும். பெற்றோருக்கு அச்சடித்த கடிதம் வந்துவிடும். மலைக்கோட்டையில் சின்னக்கடைத் தெருவில் ஒரு கபேயில் இலை போட்டு வீட்டு சாப்பாடு போடுவார்கள். (நெற்றியில் திருநீர் இட்டுக்கொண்டால் தான் அனுமதி) பெரியகடைத் தெருவில் ஒரு கடையில் கண்ணாடிக்குள் வைத்திருந்த ஹார்மோனிக்கா இன்னும் எனக்கு ஆசை காட்டிக்கொண்டிருக்கிறது. அதே பெரிய கடைத்தெருவில் பழைய புத்தகக் கடையில் வீரமா முனிவரின் சதுரகராதியிலிருந்து ஆப்டோன் படங்களடங் கிய கொக்கோக சாஸ்திரம் வரை கிடைக்கும். பணத் தட்டுப்பாட்டுக்கு சட்டென்று புஸ்தகங்களை விற்கக்கூடிய ஸ்தலமும் இஃதே. சிங்காரத்தோப்பு இப்போது போல இல்லை. நிறைய தையல் கடைகளும், காப்பிக் கொட்டை, செருப்பு முதலியன கிடைக்கும்.

ராஜா தியேட்டர்தான் அப்போது ஓசத்தி. ஏஸி தியேட்டர் என்பதே கிடையாது. இங்கிலீஷ் படத்திற்கு ஜங்ஷன் அருகில் பிளாஸா ஒரு தியேட்டர்தான். பிளாஸா வுக்கு எதிராகவே ரேடியோ நிலையம். அங்கே பள்ளி நாட் களில் ஒரு முறை ''மணி மலர்'' நிகழ்ச்சியில் நான் இருபது பிள்ளைகளுடன் கலந்து கொண்டிருக்கிறேன். ரேடியோ அண்ணா ''யார்யார் எல்லாம் லெட்டர் எழுதியிருக்காங்க'' என்று கேட்டதற்கு, ''மணச்சநல்லூர் சிறுவர் சங்கம்'' என்று என் முறை வந்தபோது சொல்லியிருக்கிறேன். அதற்காக கதரில் ஒரு துண்டு கொடுத்தார்கள்.

தில்லை நகர் எல்லாம் அப்போது இல்லை. அங்கெல்லாம் வயல்தான். தெப்பக்குளத்தில் மாலை ரப்பர் செருப்பு விற்பார்கள். மெயின்கார்டு கேட்டுக்குப் பக்கம் கைரேகை. இப்போது பர்மா பஜார் இருக்கும் இடத்தில் கைரேகை ஜோஸ்யர்கள் இருப்பார்கள், 'ப்ரொபஸர் நாத் ஏபிஏ' என்று ஒரு ஒல்லியான உயரமான ஸ்டாண்டின்மேல் தகரப் பெட்டி அமைத்து அதன்மேல் டார்ச் விளக்கும் ராட்சச

கைபொம்மையுமாக ஜோஸ்யர் சுத்தமாக குளித்துவிட்டு காத்திருப்பார். காட்டினவர்களின் உள்ளங்கையை லென்ஸ் வழியாகப் பார்த்து புன்னகை செய்து கொள்வார். கையில் பென்சிலால் மார்க் போட்டு உதட்டுக்குள் என்னவோ கணக்குகள் போட்டுப் பார்த்து "இந்த ஜாதகருடைய கையில் தனரேகையானது தீர்க்கமாக இருப்பதால் மலைக் கோட்டையிலிருந்து உருட்டிவிட்டது போல பணம் பெருகும்" பானை பிடித்தவள் பாக்கியசாலி என்று பழமொழி எல்லாம் உபயோகித்து ஐந்து நிமிஷம் பலன் சொல்வார். எல்லோருக்கும் அடுத்த பங்குனி மாதம் நினைத்த காரியம் கைகூடும் என்பார். ஒரு ரூபாய் நோட்டு களைத் துச்சமாக மடித்துத் தன்னுடைய ஸ்டாண்டில் அங்கங்கே சொருகியிருப்பார்.

முருகன் தியேட்டரில் பழைய ஆங்கிலப்படங்களை "நீச்சலடி சுந்தரி" என்று மொழிபெயர்த்து மார்னிங்ஷோ போடுவார்கள். பப்ளிக் லைப்ரரியில் 'ஜகன்மோகினி' இதழ்கள் கிடைக்கும். தேவர் ஹாலில் ராஜமாணிக்கம் குழுவினர் டிராமா போடுவார்கள். ராமகிருஷ்ணு போகிற வழியில் வீடுவீடாக பீடி சுற்றுவார்கள். ஹாட்டின் பீடி மாளிகையில் இரண்டு அலுமினிய மனிதர்கள் மீசை வைத்துக் கொண்டு திடகாத்திரமாக நிற்பார்கள். மாட்டு வண்டியில் ஒரு கிளாரினெட் கெட்டில், டிரம் சகிதமாக "ஆட்டின் பீடி வந்துவிட்டது சோதரா! நாட்டின் பீடி நல்ல பீடி(ஆட்டின்)" என்று பாடிச் செல்வார்கள்.

கிழக்கு புலிவார்டு ரோடில் தாராசிங்கிற்கும், செந் தேளுக்கும், மல்யுத்தம் நடக்கும். பெண்கள் மல்யுத்தமும், வாலிபால் போட்டியும் பிரபலமாக இருக்கும். திராவிடர் கழக இயக்கங்கள் சுறுசுறுப்பான ஊர்வலங்களில் எங்களை எல்லாரையும் திட்டிக்கொண்டே செல்வார்கள். கருணாநிதி, சாத்தாரத் தெருவில் கட்டைக் குரலில் சொற்பொழிவு செய்வார். பதினெட்டாம் பெருக்கின்

போது பாலத்திலிருந்து இரயில் வரும் வரை காத்திருந்து குதிப்பார்கள். மலைக்கோட்டையிலிருந்து சிலர் சொத்தென்று விழுவார்கள்? காதல் தோல்வி அல்லது கடன் தொல்லையால் திருச்சி இப்போது ரொம்ப பெரிதாகி அடையாளம் கலைந்து போய் விட்டதாகத்தான் சொல்ல வேண்டும்.

திருச்சி பாவை 1982

15. விகடனுக்கு வயது ஐம்பது 1928—1978

1939-ம் வருஷ விகடன் இதழ்களில் பொதுவாக ஒரு முதிர்ச்சி தெரிகிறது. தற்காலத்துப் பத்திரிகை அம்சங்களின் அஸ்திவாரங்கள் அத்தனையும் இருக்கின்றன. பத்திரிகைக்கு ஒரு அந்தஸ்து ஏற்பட்டு விட்டது தெரிகிறது. 1939-ம் வருஷ இதழ்களின் ஹீரோ நிச்சயம் கல்கிதான். வருஷத்தின் முதல் இதழிலேயே அவருடைய 'தியாகபூமி' ஆரம்பிக்கிறது. வரப்போகும் திரைப்பட டாக்கியின் புகைப்படங்களுடன் வெளிவந்த ஒரே ஒரு தொடர்கதை இன்றுவரை தியாகபூமி மட்டும்தான் என நினைக்கிறேன். இந்தக் கதை திரைப்படத்துக்காகவே எழுதப்பட்டது என்று கல்கியே சொல்கிறார். மூன்று லட்சம் தமிழர்கள் தியாக பூமியைத் தொடர்ந்து படித்திருக்கிறார்கள் என்பதையும் இதனால் விகடன் பிரதிகள் அச்சாவது அதிகமாயிற்று என்றும் சொல்கிறார். உடனே அவையடக்கத்துடன் 'கதை அவ்வளவு அபாரம் என்று சொல்லி என்னை நானே ஏமாற்றிக்கொள்ள விரும்பவில்லை. அபிமான நடிகர்கள் நடித்து சினிமாவில் வரப்போவதே அந்த ஆர்வத்திற்குக் காரணம்' என்கிறார்.

கல்கி, கர்நாடகம், ரா.கி., யமன்—என்று பற்பல பெயர்களில் நாட்டிய, சங்கீத, சினிமா, அரசியல் விமர்சனங்கள் செய்திருக்கிறார். அந்த விமரிசனங்களில் அவர் திட்டியதற்கெல்லாம் சேர்த்துவைத்துப் பழி வாங்குவது

போல் 'தியாகபூமி' வெளிவரக் காத்திருந்து சுதேசமித்திரன், தினமணி, ஹநுமான் போன்ற பத்திரிகைகளில் அந்தப் படத்தையும் கதையையும் நாராய்க் கிழித்திருக்கிறார்கள். 'துவம்ஸம்! அதாஹதம்!' கல்கி இவர்களுக்குப் பொறுமையாகத் தன் ஹாஸ்ய உணர்ச்சியை இழக்காமல் மூன்று விஸ்தார வாரங்கள் பதிலளித்திருக்கிறார். அப்புறம் தொடர்ந்து அது பற்றி நேயர் கடிதங்கள்...இந்த சுவாரஸ்யமான 'தியாகபூமி விவாதமே' ஒரு தனிபுஸ்தக ரூபம் பெற்று நாவலுக்கு அனுபந்தமாக வெளியிடப்படுகிறது.

கல்கியை மேலும் பற்பல பக்கங்களில் பற்பல விஷயங்களில் சந்திக்கிறோம். தலையங்கம், சிறுகதைகள், புத்தக விமரிசனம், பூப்பிரதட்சிணம், யுத்த டயரி, சிவவாக்கியர் சந்தத்தில் பெரியார் ஈ.வே.ரா. சொல்வதுபோன்று எழுதிய பாட்டை இன்று பிரசுரிக்க முடியாது.

மற்ற எழுத்தாளர்களிடமும் கல்கியின் 'டச்' தெரிகிறது. விதிவிலக்கு எஸ்.வி.வி. வருஷம் பூராவும் மெலிய, எளிய, ஹாஸ்ய நடையில் 'உல்லாஸவேளை' எழுதியிருக்கிறார். பி. ஸ்ரீயும் சுந்தரமும் வருஷம் பூரா பக்தியும் தேசப் பயிற்சியும் தந்திருக்கிறார்கள். தேவனின் ஆரம்ப காலச் சிறுகதைகளில் அவருடைய பிற்காலப் பிரபலத்தின் எச்சரிக்கைகள் தெரிகின்றன. 'பங்களா நாடகம்' என்கிற கதையில் கந்தசாமி அந்த வீட்டுக்குள் வழி தெரியாமல் சரணடைய, ஒரு அறைக்கதவு திறந்து அதிலிருந்து பதினைன்கு வயது மதிக்கத்தக்க மங்கையொருத்தி வெளிப்பட்டு 'ஐயோ! என்னைக் காப்பாற்றுங்களேன்' என்கிறாள். சாகரன் என்பவர் நிறைய சிறுகதைகள் எழுதியுள்ளார். சாவி சின்னஞ்சிறு கதைகள் இரண்டும், பெண்கள் பேசுவதுபற்றிக் கட்டுரையும் எழுதியுள்ளார். சிறுகதைப் போட்டியில் ரூ. 100 முதல் பரிசு மீ. ப. சோமசுந்தரம் 'கல்லறை மோகினி, க்காகப் பெறுகிறார்.

குமுதினியின் 'பொழுதுபோக்கு' பகுதி, ஆசிரியை நிறைய படித்ததை எளிதாகச் சொல்லக்கூடியவர் என்பதைக் காட்டுகிறது. சுந்தா இந்தப் பணியை வருஷத்தின் பிற்பகுதியில் தொடர்கிறார். துமிலன் கதைகள் எழுதி 'அநஸூயை'யாக 'அப்பளக் கச்சேரி' செய்கிறார். நாடோடியின் 'இதுவும் ஒரு பிரகிருதி' நாம் வாழ்க்கையில் சந்தித்தவர்கள்.

தலையங்கங்களை உலக மகா யுத்தம் ஆக்கிரமிக்கிறது. ஜஸ்டிஸ் கட்சியின் விசித்திரங்களும் காங்கிரஸ் மந்திரி சபை ராஜினாமாவும் நேருவும் காந்தியும் அடிக்கடி வருகிறார்கள். ஜெர்மனியிலிருந்து வந்த தமிழ்க் கடிதம் ஒன்று, ஒரு சிறிய ஆச்சரியத் தீவு. அட்டைப் படங்களில் இயற்கைக் காட்சிகள்; மாலி, தாணுவின் கார்ட்டூன்கள், போட்டோக்கள், பிரதான சித்திரக்காரர்களின் பெயர்கள், தற்செயலாக ரவி, வர்மா, எல்லாம் கோட்டுச் சித்திரங்கள். 'சேகர்' வரைந்த திருவழுந்தூர் சிவக்கொழுந்து சித்திரங்கள் குறிப்பிடத் தக்கவை.

விளம்பரங்களில் நாம் இனியும் நுகரும் லக்ஸ், கால்கேட், அசோகா, (என்ன ஷார் என்ன ஷேடி?) போன்றவைகள் அத்தனை சகாயமா? 150 அடி 'பஞ்சாப் மெயில்' படத்துடன் வீட்டு சினிமா மெஷின், இழந்த சக்தி, ஸானிட்டரி டவல், மார்பு பெரிசாக மாத்திரைகள் அப்போதும் இருந்திருக்கின்றன. சினிமா விளம்பரங்கள் கதைச் சுருக்கம் தருகின்றன. மாயாமச்சீந்திராவில் காம்ரூப் தேசத்தின் ராணி ஊர்மிலாவின் ஸ்திரீ ராஜ்யத்தை எதிர்ப்பது ஸூர்யகேது (எம்.ஜி. ராமச்சந்தர்). 'காளமேகம்' படத்தில் நாதசுர மேதை டி. என். ராஜரத்னம் கதாநாயகனாக நடிக்க, கதை வசனம் பாடல் : பாரதிதாசன்.

பாரதி தீக்குள் விரலை வைத்ததை ஆசுகவியாகப் பாடியதை தங்கம்மாள் சொல்கிறார். புத்தக விமரிசனத்

தில் வ.ராவின் புதிய பத்திரிகை 'பாரததேவி' வரவேற்கப் பட்டு, கு.ப. ராஜகோபாலன், சி.சு. செல்லப்பா போன்ற புதிய எழுத்தாளர்கள் எழுதுகிறார்களாம்.

இனி குறுக்கே பேசாமல் சில தேர்ந்தெடுத்த பக்கங்களை அப்படியே தருகிறேன். ஸாம்பிள் பாருங்கள்...அதற்குமுன் ஒரு சந்தேகம்: கீழ்வரும் தியேட்டர்கள் இன்னும் இருக்கின்றனவா?

மதுரை-சிந்தாமணி; திருநெல்வேலி-பாலஸ்-டி வேல்ஸ்-ராயல் கர்னாடிக்; கோயமுத்தூர்-எடிஸன், நியூ; சிதம்பரம், (வேறு என்ன) நடராஜா; கும்பகோணம்-டைமண்ட் சினிமா; நாகர்கோயில்-பயனீர் பிக்சர் பாலஸ்; காரைக்குடி ஸ்ரீகிருஷ்ணா; ராமநாதபுரம்-சாரதா; திருப்பாப்புலியூர்-

தொமபப்பாளையந்தான்!



விகடன்: மேல்நாட்டு நாகரீகமென்று பிரமாதமாய் யாரோ சொன்னார்களே! இவர்கள் வைகிற வசவு காது கொண்டு கேட்கப்படவில்லையே! (1-1-39)

ஸ்ரீதரன்; சேலம்-சென்ட்ரல், ராமலிங்கேஸ்வரர்; தஞ்சாவூர்—ராஜாராம்; காஞ்சி-முருகன்; திருப்பூர்-ரியால்டோ.

மற்ருெரு சந்தேகம்: "இது அருகிலிருக்கிறது என்பதை இதன் காற்று நம் நாசிகளில் பட்டதும் தெரிந்து கொண்டுவிடுகிருேம்." எது? பூக்கடையா, சாக்கடையா? (பகுத்தறிவுப்போட்டி. இடமிருந்து வலம்) அதன்மேலிருந்து கீழ் பார்த்தால் எனக்கு—என்பதே கிடையாது என்பர் சிலர். பூமி-சாமி!

நல்ல வேளை, யுத்தம் முடியவில்லை!

முதல் மூன்று மாதத்துக்குள் யுத்தம் முடிந்திருந்தால் ஹிட்லருக்கு ஜயமாகத்தான் முடிந்திருக்கும்; ஆகையினுல் தான், யுத்தம் இன்னும் முடியாததுபற்றி நாம் சந்தோஷப் படுகிருேம். (3-12-39)

உல்லாஸ வேளை எஸ். வி. வி.

"நீ என்னடா ஸங்கீதக்காரர்களைக் கண்டது? ரொம்பத் தெரிந்தவன் மாதிரி சொல்ல வந்து விட்டாய்?" என்ருன் ஸௌம்யா.

"ஏன், உங்கள் ஸங்கீத வாத்யார் ஒருவர் இருக்கிருரே. அவர் போதாதா? மூட்டை மூட்டையாக அளப்பார் அவர்,

மதுரையில் ஒரு கச்சேரிக்குப் போனாராம். அங்கு இவருக்கு மாத்திரம் 150 ரூபாய் கொடுத்தார்களாம்.

* * *

கரூர் கச்சேரியில் இவருக்கு மாத்திரம் நூற்று இருபதாம்...கல்யாணக்கச்சேரியாயிருந்தால் இருநூறுக்குக் குறைந்தால் அடி எடுத்து வைக்கமாட்டாராம். அவர் பேத்திக் கொள்ளும் பேத்தலைச் சிரிக்காமல் கேட்டுக் கொண்டிருப்பது கஷ்டம்.

...ஏண்டா ரங்கு, திருக்கோடிகாவல் கிருஷ்ணய்யரைப் பற்றி உபாத்தியாயர் ஏதோ சொல்லுவாரே...'' என்று ஸௌம்யா ரங்கு வாயைக் கிளறுவாள்.

''அதுவா? சென்னைப்பட்டணத்திலே கிருஷ்ண கான சபாவிலே கச்சேரியாம். வாத்தியார் பாட்டு, திருக்கோடிகாவல் கிருஷ்ணய்யர் பிடில்...திருக்கோடிகாவல் கிருஷ்ணய்யரை ஓர் அமுக்கு அமுக்க வேண்டுமென்று எண்ணம் தோன்றிற்றும்...ஏழரை மணிக்கு ஆரம்பித்து எட்டரை மணி வரை புன்னாகவராளி ராகம் பாடினாராம்.

''...கிருஷ்ணய்யருக்கு பிடில்மேல் கையே வைக்க முடியவில்லையாம்...விஷமமாக ஓர் பல்லவியை ஆரம்பித்தாராம்...கிருஷ்ணய்யருக்கும் அழகநம்பிக்கும் எங்கு எடுப்பு என்றே தெரியவில்லையாம். எடுத்துப் பார்க்கிறார்களாம், விழுகிறார்களாம்! அப்புறம் போனால் போகிறது என்று திருக்கோடிகாவல் கிருஷ்ணய்யர் எடுத்த இடத்தையேதான் வைத்துக்கொண்டு பாடிக் கச்சேரியை ஒருவாறு முடித்தாராம்.

''...கிருஷ்ணய்யர் சாகிற வரைக்கும் வாத்தியாரை எப்பொழுது வந்து பார்த்தாலும் 'அண்ணா, புன்னாகவராளி பல்லவி ஞாபகமிருக்கிறது. ஒருநாளும் மறக்கமாட்டேன்' என்று சொல்லிக்கொண்டே யிருப்பாராம்...'' (3-9-39)

'தியாக பூமி' அத்தியாயம்—18

...அப்பாவுக்குப் புத்தி கெட்டுப் போச்சு என்று பாட்டி சொன்னது சாவித்ரிக்கு சகிக்கவில்லை. அவளுக்குத் தன்னை யறியாமல் கோபம் வந்தது. வழக்கத்தைவிட உரத்த குரலில் சொன்னாள்:—

"எங்க அப்பாவுக்கு ஒண்ணும் புத்தி கெட்டுப் போகலே, பாட்டி! ஊரிலே இருக்கிறவாளுக்குத்தான் புத்தி கெட்டுப் போச்சு! வீடு வாசலாம் வெள்ளத்திலேபோய் மழையிலே நனைஞ்சுண்டிருந்தவாளுக்கு இருக்க இடங் கொடுத்தால், அது ஒரு குத்தமா?—சித்தி! ஊரார்தான் இப்படியெல்லாம் சொல்றான்னா, நீ கூட இப்படிப் பேசறது நன்னாவேயில்லை!"

* * *

சொர்ணம், இரண்டு கையையும் ஒரு தடவை தட்டி, முகவாய்க் கட்டையில் ஒரு கையை வைத்துக் கொண்டு, "ஏண்டி, மங்களம்! இந்தப் பெண்ணுக்கு இவ்வளவு வாயும் கையும் எப்போடி வந்தது?" என்றாள்.

"ஏற்கெனவே, வாய்த் துடுக்கு ஜாஸ்தி. கல்யாணம் ஆனதிலிருந்து தலைகீழாய்த்தான் நிற்கிறது" என்றாள் மங்களம்.

"ஐயையோ! இது புக்காத்திலே போய்க் குடித்தனம் பண்ணி எப்படிக் குப்பை கொட்டப் போறதோ தெரியலையே?"

"முதல்லே புக்காத்துக்குப் போகணுமேடி, அம்மா! அதைச் சொல்லு! ஊரிலே யாரோ சம்பந்தியாத்துக்குக் கடிதாசி எழுதிப் போட்டிருக்கான்னு சொல்றா. என்ன நடக்கப் போகிறதோ, என்னமோ?"

இந்த மாதிரி இவர்கள் பேசிக் கொண்டிருந்தபோது, சாவித்ரி பூஜை அறைக்குள்போய் அம்பிகைக்கு நமஸ்காரம்

செய்தாள். பிறகு, தலை நிமிர்ந்து கை கூப்பிக்கொண்டு, "அம்பிகே! தாயே! அப்பாவை ஊரார்தான் கரிக்கிறார்கள் என்றால் உற்றாரும் கரிக்கவேண்டுமா? ஐயோ! நான்கூடச் சீக்கிரத்தில் கல்கத்தாவுக்குப் போய்விடுவேனே? அப்புறம், அப்பாவுக்கு யார் இருக்கிறார்கள்? அம்பிகே! சித்தியையும், பாட்டியையும் நல்லவளாய் ஆக்கிவிடக் கூடாதா? எங்க அப்பாவை இப்படிக் கரிக்காமல் செய்யக்கூடாதா?" என்று பிரார்த்தித்தாள்... (29-1-39)

சின்னஞ்சிறு கதை

சாவி

கந்தசாமிப் பிள்ளை ஆழ்ந்த சிந்தனையுடன் தலையை நிமிர்த்திக் கூரையை நோக்கியவண்ணம் உட்கார்ந்திருந்தார்......

"என்ன பிள்ளைவாள்! என்ன அவ்வளவு அபாரமாய் யோசிக்கிறீர்?..." என்றார் முதலியார்,

"...பொழுது விடிந்தால் கவலைப்படுவதற்கே நேரம் போதவில்லையே. பலவித தொல்லை..." என்றார் பிள்ளை.

முதலியார் : அது என்னய்யா, அப்படிப்பட்ட தொல்லை?... எழுந்து வாருங்காணும்! இப்படி காற்றாட வெளியில் போய் விட்டு வரலாம்.

பிள்ளை : ஓய்! என்னுடைய கவலையெல்லாம் மூட்டை கட்டி வைத்துவிட்டு வரக்கூடியதல்ல.......

முதலியார் : பூ! அப்படிப்பட்ட கவலை என்னென்ன சொல்லும்!...ஒரேயடியாய்க் குறைக்க வழி சொல்கிறேன்.

பிள்ளை ஆரம்பித்தார். "ஸார்! பொழுது விடிந்தால் பொங்கல் பண்டிகை. சாமான் வாங்கிப் போடணும்.

குறைந்தது பத்து ரூபாயாவது ஆகும். என் தங்கை ஊரிலிருந்து வந்திருக்கிறுள். அவளுக்கு ஒரு நூல் புடவை வாங்க ஆறு ரூபாய் வேண்டும்...கைமாற்றுக் கடனைத் திருப்ப 5 ரூபாய் தேவை. பால் பாக்கி எட்டு ரூபாய்...பார்த்தீரா? ஒன்று இரண்டா கவலைப்படுவதற்கு?''

முதலியார்: ...இவ்வளவுதானே? இவ்வளவு காரியங்களை நிறைவேற்றுவதற்கு ஐம்பத்துநாலு ரூபாய் வேண்டும். இல்லையா?

பிள்ளை: ஆமாம்.

முதலியார்: இப்பொழுது ரூபாய் 54 வேண்டும் என்ற ஒரே கவலையாயிருக்கட்டுமே, எதற்காக பாக்கி கொடுக்கணும், சாமான் வாங்கணும், புடவை வாங்கணும் என்று பலவிதமாய் அவஸ்தைப்படுகிறீர்? (26-3-39)

திருவழுந்தூர் சிவக்கொழுந்து

கல்கி

இரவு எட்டு அடித்து முப்பதாவது நிமிஷம் ரயில் ஐயம்பேட்டை ஸ்டேஷனில் வந்து நின்றது. பளிச்சென்று வீசிய மின்னலில் ஸ்டேஷன் கட்டிடம், பிளாட்பாரம், அப்பால் அடர்ந்து வளர்ந்திருந்த மரங்கள் எல்லாம் ஒரு கணம் தெரிந்து அடுத்த கணத்தில் மறைந்தன. மின்னலுக்குப் பிறகு இருட்டு முன்னைவிடப் பதின்மடங்கு அதிகமாகத் தோன்றிற்று. மினுக்குமினுக்குஎன்று தோன்றிய ஸ்டேஷன் லாந்தர் அந்த இருட்டை எடுத்துக் காட்டுவதற்காகப் போட்ட வெளிச்சமாகவே காணப்பட்டது. ''நீ என்ன என்னை எடுத்துக் காட்டுவது?'' என்று இருள் கோபங் கொண்டு அந்த லாந்தரை அமுக்கிக் கொன்று விடத் தவித்து வருவது போலிருந்தது.



(கல்கியின் தொடர்கதையின் முதல் அத்தியாயத்துக்கு சேகர் வரைந்த படம்.)

சிலபேர் ரயிலில் ஏறிவிட்டால் உடனே அவர்கள் கண்ணைச் சுற்றத் தொடங்கிவிடுகிறது. வண்டி இரண்டு அசைப்பு அசைந்ததும், தூங்க ஆரம்பித்து விடுகிறார்கள். ஆனால் எனக்கு ரயிலில் தூங்க முடிவதே இல்லை. அதிலும், இடியும் மின்னலுமாயிருந்த அந்த இரவில் தூக்கம் எப்படி வரப் போகிறது? இராத்திரி முழுவதும் ரயிலில் கழித்தாக வேண்டுமே என்று கவலையாயிருந்தது.

முதல் அத்தியாயத்திலிருந்து...(20-8-39).

நமது புத்தகசாலை

உவமை அகர வரிசை,

(வெளியீடு: தமிழ்ப் பாதுகாப்புக் கழகம். கிடைக்குமிடம் : தமிழ்ப் பாதுகாப்புக் கழகம், 156, பவழக்காரத் தெரு, சென்னை. விலை ; அணு 2.)

அநேக பழமொழிகளைத் தமிழில் வரிசைக் கிரமமாக அமைத்திருக்கிறார்கள். 'உவமை அகரவரிசை' என்பதற்குப் பதிலாக,'பழமொழிப் புஸ்தகம்' என்று இப்புஸ்தகத்திற்குப் பெயர் கொடுத்திருந்தால் 'சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்தாற்போல்' சந்தோஷப் பட்டிருப்போம்.

(8-10-39)

ஆடல் பாடல்

சிரக்கம்ப கரக்கம்பம் (31-12-39)

திறப்பு விழாவன்று நடந்த ராஜகுமாரி மங்குத் தம்பிரான் கச்சேரியில் முக்கிய அம்சம், அவர் ராஜகுமாரி என்பதுதான். உண்மையில் அன்றைய தினம் ஸெனட் மண்டபத்தில் அவ்வளவு கூட்டம் கூடியிருந்ததற்குக் காரணம் 'ஒரு ராஜகுமாரி எப்படிப் பாடுகிறார்?' என்று தெரிந்து கொள்வதில் எல்லோருக்கும் இருந்த ஆவலாய்த்தானிருக்க வேண்டும். முதல் முதலாகக் கச்சேரி செய்ய வெளிக் கிளம்பியவர் அவ்வளவு பெரிய சபையில் அத்தனை தைரியமாகப் பாடியது அடுத்தபடியான விசேஷம். அவருடைய குரல் சுத்தமான வெண்கல மணியைப் போல் கணீரென்று ஒலித்தது. பாட்டில் அழுத்தம் அதிகமாயிருந்தது உருப்படிகளை விட ராகம் பாடிய முறை நன்றாயிருந்தது.

கச்சேரி முக்கால் வாசி ஆன பிறகு நான் எழுந்து போனேன். பின்னோடு, எனது இளம் நண்பர் ஒருவர் ஓடி வந்து கையைப் பிடித்துக்கொண்டு, "ஒரு அதிசயம்! வந்து விட்டுப் போங்கள்" என்று வற்புறுத்தினர். ஹாலின் ஓரத்தில் போய் நின்று கேட்டேன். ராஜகுமாரி,

"ஆஜை முகம் மறந்து போச்சே"
"நேஜம் மறக்கவில்லை நெஞ்ஜம்"

என்று பாடிக்கொண்டிருந்தார். இளம் நண்பர் "பார்த்தீர்களா?" என்று சொல்லிச் சிரித்தார்.

"இதற்குத்தானா, அப்பா, இந்தப் பாடு படுத்தினாய்? இது ஒரு ஆச்சரியமா? நமது பிரபல வித்வான்கள் தெலுங்கிலும், கன்னடத்திலும் பாடும்போது, சபையில் உள்ள தெலுங்கர்களும், கன்னடியர்களும் எவ்வளவோ தடவை சிரித்து நான் கேட்டிருக்கிறேன். நமது பிரபல வித்வான்களுக்கு அந்த பாத்தியதை உண்டு என்றால், மலையாள தேசத்தில் அரண்மனையில் வளர்ந்த ராஜகுமாரிக்கு 'ஆஜை முகம்' என்று சொல்ல உரிமை கிடையாதா." என்றேன்.

சிரிக்காதே

உபாத்தியாயர் : டே ராஜு! குதிரையைப் பற்றி நீ எழுதிய வியாசமும் கிட்டு எழுதிய வியாசமும் ஒன்றாகவே இருக்கின்றனவே!

ராஜு : இரண்டு பேரும் ஒரே குதிரையைப் பற்றி எழுதியிருக்கிறோம்!

(31-12-39)

"இந்த ஹோட்டலிலே மரியாதைப்பட்ட பேர் தங்குகிறதுண்டா?"

"உண்டு...அதனால் பரவாயில்லை; நீர்வேண்டுமானாலும் தங்கலாம்." (1-1-39)

விச்சுவின் விஷமம்

(22-1-39)



(16-7-39)

பக்தன் (கடவுளிடம்):—தங்களுக்கு ஒரு லக்ஷம் வருஷ மென்பது ரொம்ப அற்பம்தானே?

கடவுள் (அலக்ஷ்யமாக) :—அது எனக்கு ஒரே ஒரு நிமிஷந்தான்.

பக்தன் :—ஒரு லக்ஷம் ரூபாய் எப்படியோ?

கடவுள் : அது எனக்கு ஒரு தம்பிடி மாதிரி.

பக்தன் (வினயத்தோடு):— அப்படியானல் எனக்கு ஒரு தம்பிடி கொடுங்களேன்!

கடவுள் : இதுதானு பிரமாதம்? ஒரு நிமிஷம் பொறுத்துக் கொள், தருகிறேன்.

—கே. மகாதேவன். (29-1-39)

ஒருவர் : உங்களிடம், "ஒரு ஸ்திரீயை அடக்கிய மனிதன்" என்னும் நாவல் கிடைக்குமா?

கடைக்காரர் : அதோ அவரைக் கேளுங்கள்; அவர் தான் கற்பனைக் கதைப் புத்தகங்கள் வைத்திருக்கிறார்.

(8-10-39)

தாடிக்காரர்—டாக்டர்

டாக்டர் : ஏன் ஐயா, உமக்குக் காது செவிடா? நாக்கை நீட்டும் என்று சொன்னேனே, காது கேட்கலேலே?

வியாதியஸ்தர் : உமக்குத்தான் கண் தெரியலில்லை. நான் நாக்கைப் பத்து நிமிஷமாய் நீட்டிக் கொண்டிருக்கிறனே!

'பாலர் மலர்' (31-12-39)

பொழுதுபோக்கு என்ற பகுதியில் குமுதினியின் ஹாஸ்யம்...

எழுத்தாளர் பாடசாலை

...இதுதான் நாவலாசிரியர்களின் பாடசாலை.

வினு : நாவலாசிரியர்களுக்கென்று ஒரு பாடசாலை இருக்கிறதா?

விடை : ஆமாம்......

விடை : அவர்கள் "மாடல்கள்" எனப்படுபவர்...தகுந்த விதம் வர்ணனைகள் எழுதுவதற்கு இவர்கள் நேருக்கு நேர் நடித்துக் காண்பிக்க ஏற்பட்டவர்கள்...அம்மணி, சவம் போல் சற்று வெளுத்துக் காண்பியுங்கள்.

வினு : அட! ...இன்னும் என்ன என்ன செய்வார்கள்?

விடை : ...கண்ணுச்சாமி பிள்ளைவாள், சற்று மூர்ச்சித்துத் தடாலென்று கீழே விழுந்து காண்பியுங்கள்.

விடை ; நாயக்கரே, சற்று விழித்துக் காண்பியுங்கள்.

வினு : அட! நன்றாயிருக்கிறதே! நிஜமாகவே ஒருவரால் திருதிரு என்று விழிக்க முடியுமென்று இதுவரை எனக்குத் தெரியாதே. அந்த வார்த்தை ஏதோ நாவலாசிரியர்களின் கற்பனை என்றல்லவோ நினைத்திருந்தேன்!

விடை : ...இவர்கள் செய்வதைப் பார்த்த பின்தான் அந்த விஷயங்களைப் பற்றி நாவலாசிரியர்கள் நம்பிக்கையுடன் எழுதுவது வழக்கம்... (19-3-39)

யார் இவர்?

இந்தப் படம் ஸத்தியமங்கலம் ஸ்ரீ. எஸ். என். கிருஷ்ணமூர்த்தி எழுதியது. அவர் இதை மகாத்மா காந்திக்கு அனுப்பி வைத்தார்; படத்தில் காந்திஜி "Who is this?" (யார் இது?) என்று எழுதிக் கையெழுத்தும் போட்டு அனுப்பியிருக்கிறார்.

(2-4-39)

நன்ன ஜனகளு

—சித்தலிங்கையா—

[சித்தலிங்கையாவின் 'நன்ன ஜனகளு' என்கிற கவிதையை முதலில் அதன் ஆங்கில மொழி பெயர்ப்பில் படித்தபோது அது என்னைக் கவரவில்லை. நண்பர் கார் லோஸ் (தமிழவன்) மூலம் அதன் கன்னட வடிவத்தில் அதைப் படித்த போது இந்த எளிய பாடலை ஏன் 'தலித்' இயக்கத்தின் முன்னோடிக் கவிதை என்று சொல்கிறார்கள் எனப் புரிந்தது.

என் தமிழ் மொழிபெயர்ப்பில் மூலக் கவிதையின் சந்தத்தைப் பாதுகாக்க வேண்டியது அவசியம் என்று எனக்குப் பட்டது. —சுஜாதா]

பசியினால் செத்தவர் பாறாங்கல் சுமந்தவர்
இசைவு கொண்டு இருப்பவர் என் ஜனங்களே.
காலுகை பிடிப்பவர் கைகள் கட்டி வாழ்பவர்
பக்தரப்பா பக்தரே என் ஜனங்களே.

வயலிலே உழைப்பவர் அறுவடை வியர்ப்பவர்
வெயிலிலே காய்பவர் என் ஜனங்களே.
வெறும் கையில் வந்தவர் அலுப்பினால் நொந்தவர்
வயிற்றிலே துண்டுகட்டி என் ஜனங்களே.

மாளிகை எழுப்பினோர் பங்களாக்கள் கட்டினோர்
மாளிகைகள் அடியிலுள்ள என் ஜனங்களே.
வீதியில் திரிந்தவர் குரலிலாதிருந்தவர்
நெஞ்சிலே குமைபவர் என் ஜனங்களே.

வட்டி தந்து மாய்ந்தவர் பேச்செனும் நெருப்பிலே
எரிந்து சாம்பலானவர் என் ஜனங்களே.
பரமாத்மன் பெயர் சொல்லி வயிறூரத் தின்பவர்க்கு
பாதரட்சை தைப்பவர் என் ஜனங்களே!

தங்கம் தோண்டுகின்றவர் சோறு கண்டிராதவர்
ஆடை நெய்வர், வெற்றுடம்பில் சுற்றுவோர்
சொன்னதெல்லாம் கேட்பவர் என் ஜனங்களே.
சொப்பனத்தில் வாழ்பவர் என் ஜனங்களே.

கன்னடத்திலிருந்து தமிழில் : —சுஜாதா

□ □ □

அதுதான் கஷ்டம்...

புதுக் கவிதை எழுதுவது எவ்வா றென்றால்
புலமையெதும் தேவையில்லை; பேனா, பென்சில்
எதைக் கொண்டும் எவராலும் எழுத முடியும்.
எதுகைகளோ மோனைகளோ சீர்தளையோ

இதற்கென்று விதிமுறைகள் எதுவும் இல்லை,
இப்பொழுதோ அப்பொழுதோ தனியாய் நேரம்
ஒதுக்கவேண்டும் என்றில்லை தேவைப் பட்டால்
ஒரு மணிக்கு ராத்திரியில் கண்விழித்து

காதல் பற்றிக் கவிதை யொன்று எழுதலாகும்
கருப்பான கண்கள் கொண்ட அடுத்த வீட்டு
ராதை பற்றி, ரேஷன் பற்றி, ராஜீவ் பற்றி
ரத்தத்தில் புரட்சி செய்யும் ஈழத் தமிழர்

வேதனைகள், வேதாந்தம், வேசி வீடு,
வெறும் காலில் கடல் மணலில் நடந்து செல்தல்
ஈதனைத்தும் இருந்தாலும் 'கவிதை நெஞ்சம்'
என்றொன்று கூடவேண்டும். அதுதான் கஷ்டம்.

சுஜாதாவின் 50 புத்தகங்கள்

எப்போதும் பெண்

மாறுதல் வரும்

பிரிவோம் சந்திப்போம் I

பிரிவோம் சந்திப்போம் II

ப்ரியா

மண் மகன்

காயத்ரி

அடிமைகள்

நகரம்

நிர்வாண நகரம்

விபரீதக் கோட்பாடு

மிஸ் தமிழ்த்தாயே! நமஸ்காரம்!

கணையாழியின் கடைசி பக்கங்கள்

சிறுகதை எழுதுவது எப்படி?

கம்ப்யூட்டரே ஒரு கதை சொல்லு

ஒரே ஒரு துரோகம்

பத்து செகண்ட் முத்தம்

ஸ்ரீரங்கத்து தேவதைகள்

கொலை அரங்கம்

24 ரூபாய் தீவு

டாக்டர் நரேந்திரனின் விநோத வழக்கு

அப்ஸரா

6961

நில், கவனி, தாக்கு

பாதி ராஜ்யம்

நீர்க்குமிழிகள்

அனிதா இளம் மனைவி

எதையும் ஒருமுறை

வடிவங்கள்

ஜே. கே.

வானமென்னும் வீதியிலே

வானத்தில் ஒரு மௌனத்தாரகை

வைரங்கள்

மறுபடியும் கணேஷ்

கலைந்த பொய்கள்

நைலான் கயிறு

சொர்க்கத் தீவு

மாயா

காகிதச் சங்கிலிகள்

விழுந்த நட்சத்திரம்

பதினாலு நாட்கள்

பதினெட்டு கதைகள்

விதி

வசந்தகாலக் குற்றங்கள்

என்றாவது ஒருநாள்

உன்னைக் கண்ட நேரமெலாம்

ஜன்னல் மலர்

சில வித்தியாசங்கள்

தேவன் வருகை

மேற்கே ஒரு குற்றம்

மின்நூல் கூடம்

DIGITAL LIBRARY

Do you enjoy reading but can't get to your local library?

Then let us bring the library to **YOU**!

மின்நூல் ஆக்கம் : சீயான்

சுஜாதா
உங்களில் ஒரு கணேஷ்!
குமரிப்பதிப்பகம்